DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Joy H Selvanayagam

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
416 269 7198

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com

25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
$1.00
416-752-1524
416-752-6703
உதயம் 1308
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday April 30, 2021

## Ontario Parents Receive Direct Support Under Ontario COVID-19 Child Benefit

## ஒன்ராறியோ கோவிட் – 19 குழந்தை நலனின் திட்டத்தின் கீழ் ஒன்றாரியோ மாகாணப் பெற்றோர்கள் நேரடி ஆதரவைப் பெறத் தொடங்குகின்றார்கள்



கடந்த 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஒன்ராறியோவின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெக்ஸே ஒன்ராறியோ கோவிட் -19 குழந்தைகள், பெற்றோர் நன்மை குறித்து பின்வரும் அறிக்கையை வெளியிட்டார்:

“நாங்கள் முன்பு செய்ததைப் போல, தொற்றுநோயின் விளைவாக ஏற்படும் கூடுதல் செலவுகளை ஈடுசெய்ய எங்கள் அரசாங்கம் மீண்டும் குடும்பங்களுக்கு நேரடி நிவாரணம் அளிக்க முன்வருகிறது. ஒன்ராறியோ கோவிட் -19 குழந்கைளுக்கான நன்மை வழங்கும் திட்டத்தின் மூலம் பெற்றோருக்கான கொடுப்பனவுகள் 2021 ஏப்ரல் 26, நாளன்று தொடங்கும் என்பதை உறுதிப்படுத்துவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்” என அமைச்சர் தெரிவித்தார்.

*(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)*

## மூன்று வருடங்களுக்குள் மூன்று மில்லியன் கனடிய டாலர்களை சேகரித்து சாதனை செய்த ரொரன்ரோ தமிழ் இருக்கை அமைப்பு

(விபரமான செய்தி உள்ளே 3ம் பக்கத்தில்)




## Canadian military health-care personnel help staff at the Sunnybrook Health Centre in Toronto

## இன்று தொடக்கம் ரொறன்ரோவின் சன்னிபுரூக் சுகாதார நிலையத்தின் தீவிர சிகிச்சை பிரிவில் கனேடிய இராணுவம் பணியாற்றுகின்றது



ரொறன்ரோவில் உள்ள சன்னிபுரூக் சுகாதார நியைம் மற்றும் மருத்துவமனை மற்றும் தீவிர சிகிச்சை பிரிவில் (ஐ.சி.யூ) ஊழியர்களுக்கு உதவிட சுகாதாரப் பாதுகாப்புப் பணியாளர்களை உள்ளடக்கிய கனேடிய இராணுவ பணிக்குழு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் பணியாற்றவுள்ளது இது ஒன்ராறியோ மருத்துவமனைகளுக்கு கோவிட்-19 உதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இராணுவம் பயன்படுத்தப்படுவதன் ஒரு பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

*(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)*

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
204-7 Eastvale Drive,
416.568.4301 , 905.471.4050
Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

# டக் ஃபோர்ட்:

# ஒன்றாரியோவின் எதிர்காலத்தை மட்டுப்படுத்துவதை நிறுத்துங்கள்.




தொற்றுநோயின் தொடக்கத்திலிருந்து, கல்வித் தொழிலாளர்கள் முன்வரிசையில் நின்று பள்ளிக்கூடங்களைத் திறந்த நிலையில் வைத்திருக்க உதவுகிறார்கள்.அத்துடன் தேவைப்படும்போது, மாணவர்களுக்கு தொலைதூரத்தில் இருந்து கற்பிக்கின்றார்கள். இது மாணவர்கள் மற்றும் கல்வித் தொழிலாளர்கள் இருபகுதியினருக்கும் பெரும் நன்மையை ஏற்படுத்தியுள்ளது

கொள்கை மாற்றுகளுக்கான மையத்தின் ஆய்வின்படி, உங்கள் அரசு மத்திய அரசு மற்றும் கல்விச் சபைகளை விட அவசரகால நோய்த்தொற்று கால கல்வி நிதிக்கு குறைவாகவே செலவிட்டுள்ளது

கல்வித்துறையின் முதலீடுகள் பொருளாதார வளர்ச்சியை உருவாக்குகின்றன என கனடாவின் மாநாட்டு சபையானது வெளியிட்ட அறிக்கையிலிருந்து நாங்கள் அறிவோம். கல்வியில் முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு டாலருக்கும், பொருளாதார நடவடிக்கைகளின் 1.30 டாலராக அதிகரிக்கின்றது. மேலும், சுகாதாரப் பாதுகாப்பு, சமூக சேவைகள், நீதி மற்றும் குடிமக்களின் பங்களிப்பு அதிகரிப்பு ஆகியவற்றுக்கான செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன. நீங்கள் கல்வி மீது வெட்டுக்களை செய்யும் போது, இவை அனைத்தும் எதிர்மறையாக பாதிக்கப்படுகின்றன.

கல்வி என்பது ஒன்றாறியோவிற்கு நன்மை தரக்கூடியது

வேலைகள் மற்றும் முதலீடுகளை பூர்த்தி செய்வதற்கு, ஒன்ராறியோவுக்கு நன்கு கல்வி கற்ற பணியாளர்கள் தேவை. அதிஸ்டவசமாக முன்னைய அரசாங்கங்கள் அதை அங்கீகரித்தும், முதலீடுகளைச் செய்தும், உலகின் சிறந்த கல்வி முறைகளில் ஒன்றை உருவாக்கின.

இது எங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவியது, உலகெங்கிலும் உள்ள மக்களை ஒன்ராறியோவிற்கு ஈர்த்து நமது பொருளாதாரத்தை உயர்த்த உதவியது.

கல்வியை மட்டுப்படுத்தும் நேரம் இதுவல்ல.

எமது கண்களுக்கு தெரிகின்ற நம்பிக்கைகள் மீட்கப்படுவதற்கு, எங்களிடம் உள்ள எல்லா நன்மைகளும் நமக்குத் தேவை. ஒன்ராறியோவுக்கு நன்மைகள் தரக்கூடிய போட்டி உள்ள ஒரு தளம் கல்வியாகும். எனவே இன்றும் எதிர்காலத்திலும் நமது பொருளாதாரத்தை வளப்படுத்த உதவும் வளங்களையும் முதலீட்டையும் நாம் வழங்க வேண்டும்.

OSSTF/FEESO

மேலதிக விபரங்களை
betterstronger.ca
இணையத்தளத்தில் அறியலாம்

ஒன்டாரியோ மேல்நிலைப் பாடசாலைகள் ஆசிரியர்கள் சம்மேளனத்தின் 60,000 கல்வித் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து ஒரு செய்தி

உதயன் கதிரோட்டம்

# அநியாயத்தின் மீது அமர்ந்திருந்து ஆட்சி செய்யும் இவர் உலக முதலாளித்துவத்தின் எதிரியாவதற்கு முன் வருவாரா?

இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச. கடந்த சில சகாத்பங்களாக இலங்கையில் ஆட்சி பீடத்தில் அட்டகாசமாக அமர்ந்திருந்து நாட்டில் செல்வந்தக் குடும்பங்களின் வரிசையில் சகோதரர்கள் அனைவருமே வந்து விடவேண்டும் என்ற வேகமான திட்டமிடலுடனும் நிகழ்ச்சி நிரலுடனும் இயங்கும் சகோதரக் குழுமத்தின் ஒரு பிரதிநிதி. அதை ஒரு பெந்தேசிய வர்த்தக நிறுவனம் என்றும் கூறுகிறார்களே!

தேசத்தின் ஆட்சி அதிகாரத்தில் உறுதியாக அமர்ந்து கொண்டு, அதிகார பலம், பண பலம், ஆகியவற்றோடு, இன்னும், அநியாயகளுக்கு துணைபோகும் சகாக்களையும் சர்வதேச நாடுகளையும் தங்கள் கைகளுக்குள் 'போட்டுக் கொண்டு" சாமர்த்தியமாக காய்களை நகர்த்திக் கொண்டிருக்கும் சகாப்த்தம் ஒன்றில் அவர்கள்.

அவ்வாறு நாட்டை சூறையாட வந்தவர்களின் அணி ஒரு புறமும், வாழ்வோமா அல்லது சாவோமான என்று அல்லலுறும் நாட்டின் மூவின மக்களும், பழி வாங்கப்பட்டுக் கொண்டே நாட்களைக் கழிக்கும் எண்ணிக்கை அற்ற மாற்றுக் கட்சியினர், நேர்மையான ஊடகவியலாளர்கள் ஆகியோர் மற்றொரு புறமுமாக அந்த மாங்கனித் தீவின் இருப்பு நாளொறு கேடு என்பது போல் கழிகின்றது. இயற்கையின் படைப்பாக ஒரு மாங்கனியைப் போன்ற அந்த தீவின் வய்றிறுப் பகுதியில் தொங்கிக் கொள்வதற்காக ஒரு பையைப் போன்ற 'துறைமுக நகரத்தை' செயற்கையாய் கட்டியெழுப்பி அதனை அனுபவிக்கும் பாக்கியத்தை கடல் தாண்டி வந்தவர்களுக்கு கையளித்துவிட், பெற்றவற்றை தங்கள் சுகபோக வாழ்க்கைக்காக அடமானம் வைத்த அயோக்கியத்தை அடுக்கடுக்காய் விமர்சனம் செய்யும் ஆட்சி மொழிக்காரர்களின் வசையையும் வெற்றிகொள்வதாக காட்டி தொடர்ந்து நாசம் செய்யும் ஒரு ஆட்சியின் வாரிசுக்கள் அந்தத் அடங்குவதாகவே இல்லை.

இவ்வாறான நிலையில் தான் அந்த அதிகார பீடத்திலிருந்து அந்த குரல் கூச்சலிடுகின்றது. "இரசாயன உரங்களின் பயன்பாட்டை முற்றிலுமாக நீக்கிய உலகின் முதல் நாடாக இலங்கையை மாற்றுவேன்-" என்று கூறிய ஆந்தக் கூச்சல் மீண்டும் தொடர்கின்றது"ஆரோக்கியமான மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த குடிமகனை உருவாக்க நச்சு அல்லாத உணவுக்கான மக்களின் உரிமையை அரசாங்கம் உத்தரவாதம் செய்ய வேண்டும். அடுத்த பத்தாண்டுகளில் இலங்கையில் விவசாயத்திற்கு முழுமையாக சேதன உரங்களைப் பயன்படுத்த அந்த உற்பத்தியை துரிதப்படுத்த வேண்டும்."

தேசத்தில் புறையோடிப் போன பிரச்சனைகள் எத்தனையோ. இலங்கையின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்புகளாக உழைத்த தோட்டத் தொழிலாளர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஆயிரம் ரூபாய் நாள் ஊதியத்தை வழங்குவதை மறந்தது போல் இருந்தபடி சீனாவும் இந்தியாவும் தான் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வேண்டும் என்பதுபோல காட்சிப்படுத்தியபடி அவர்களின் தந்திரமான அரசியல் தற்காலிக சந்தோசங்களை தந்தபடி வாய்கள் சிரித்து நிற்க நெஞ்சில் வஞ்சகம் விஞ்சிக் கொள்ள சூதுகளை விவாதிப்பதற்கு நேரம் இல்லாமல் தவிக்கும் நிலை அங்கு.

இவ்வாறான நிலையில் உலக முதலாளித்துவத்தின் கைகளில் உள்ள இரசாயன உரங்களின் உற்பத்தி, அவர்களுக்கு தரகர்களாக நாட்டில் இயங்கும் தேசிய முதலாளிகளின் கூட்டமைப்பு இவர்களை நிராகரித்து தேசத்தின் தலைவரால் அனைத்தையும் நிமிர்ந்து நின்று நிராகரிக்கும் பக்குவம் பெற்றவரா இவர் என்ற கேள்விதான் இங்கே இழுகின்றது. இந்த அறிவிப்பைக் கேட்டு இதுவரைக்கும் எத்தனை 'பேரங்கள் அங்கு இடம்பெற்றிருக்குமோ.

துறைமுக நகரத்தை ஒரு நாட்டுக்கு தாரை வார்த்தது போன்று இரசாயன உரங்களின் பெயரால் எந்த நாட்டுக்கு இந்த அழகிய தேசத்தின் வளங்கள் வாரிக்கொடுக்கப்படுமோ என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை சென்னையில் காலமான இயக்குனர் கே. வி. ஆனந்த்

*- எமது சென்னைச் செய்தியாளர்*



தமிழ்த் திரையுலகின் பிரபல இளம் இயக்குனர் கே. வி. ஆனந்த் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை சென்னையில் காலமானார் என்ற செய்தி எமக்குக் கிடைத்துள்ளது. இந்தியாவில் பல திரையுலகப் பிரமுகர்கள் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளதாகவும் எமது சென்னைச் செய்தியாளர் அறிவித்துள்ளார் இயக்குனர் கே. வி. ஆனந்த் புகைப்படக் கலைஞராக தன் திரைப் பயணத்தை ஆரம்பித்த கே.வி. ஆனந்த் பின்னர் திரையுலகில் ஒளிப்பதிவாளராக ஆனார். பி. சி. ஸ்ரீராமிடம் உதவியாளராக வேலை செய்தார். அதன் பிறகு ஸ்ரீகாந்த், ப்ரித்விராஜ், கோபிகா உள்ளிட்டோர் நடித்த கனா கண்டேன் படம் மூலம் தமிழ் திரையுலகில் இயக்குநர் அவதாரம் எடுத்தார். தொடர்ந்து வித்தியாசமான படங்களை கொடுத்து வந்த கே.வி. ஆனந்த் இன்று வெள்ளிகிழமை அதிகாலை 3 மணிக்கு மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 54. சென்னை அடையாறில் வசிந்து வந்த அவருக்கு நள்ளிரவில் நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது இதையடுத்து அவராகவே தனது காரை ஓட்டிச் சென்று தனியார் மருத்துவமனையில் தன்னை பரிசோதிக்கும் படி கேட்டுள்ளார் இந்நிலையில் கே.வி. ஆனந்தும் மாரடைப்பால் இறந்துவிட்டார். காலையில் எழுந்த உடன் கே.வி. ஆனந்தின் மரணம் குறித்து அறிந்த திரையுலக பிரபலங்களும், ரசிகர்களும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# மூன்று வருடங்களுக்குள் மூன்று மில்லியன் கனடிய டாலர்களை சேகரித்து சாதனை செய்த ரொரன்ரோ தமிழ் இருக்கை அமைப்பு

ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை ஒன்றை அமைப்பதற்கான செயற்றிட்டத்தைச் நிறைவேற்றுவதற்கான 3,000,000 கனடிய டாலர்கள் என்ற முழுத் தொகையை மேற்படி அமைப்பு எட்டிவிட்டது என்ற செய்தி வெளியாகியுள்ளதை அறிந்து உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டும்.

மேத் மாதம் 2018, கனடாவில் முதலா-வது தமிழ் இருக்கையை நிறுவுவதற்காக, கனடியத் தமிழர் பேரவையும், தமிழ் இருக்கை அமைப்பும் இணைந்து, ரொறன்ரோ பல்கலைக்கழகத்தோடு ஓர் உடன்படிக்கையை மேற்கொண்டது. கோவிட்-19 என்ற உலகளாவிய பெருந்தொற்றால் துவண்டுவிடாது, தமிழ் சமூகமும், ஆர்வலர்களும் இணைந்து கனடிய மண்ணிலே வரலாற்று அருஞ்செயலை ஆற்றியுள்ளார்கள். கனடிய தமிழர் பேரவையின் தலைவரும் ரொரன்ரோ தமிழ் இருக்கை அமைப்பின் தலைவருமான திரு சிவன் இளங்கோ மற்றும் கனடியத் தமிழர் சமூகத்தின் உற்சாகமான தொண்டர்கள், ஊடகங்கள், ஊர்ச் சங்கங்கள், கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கள், வர்த்தகப் பிரமுகர்கள், கலை அமைப்புக்கள் மற்றும் தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டின் திராவிட முன்னேற்றக் கழகம் என உலகெங்குமிருந்து கிடைத்த ஆயிரக்கணக்கானவர்களின் ஆதரவே இந்த நிதி சேர்க்கும் அஞ்சலோட்டத்தை நிறைவடையச் செய்துள்ளது.

இந்த வரலாற்றுச் செயற்றிட்டமானது ஈழத்தமிழரின் தந்தை செல்வர் சா. ஜே. வே செல்வநாயகம் அவர்களின் 44ஆவது நினைவுநாளில் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை பெருந்தன்மையுடன் வழங்கிய இரண்டரை இலட்சம் டாலர்கள் நிதிக்கொடையால் எட்டப்பட்டுள்ளது என்பதும் வரலாற்றுச் சிறப்பு மிக்க அம்சமாகும்.

# இலங்கை சென்ற சீனபாதுகாப்பு அமைச்சரின் வாகனத்தொடரணிக்காக பொதுமக்களின் வாகனங்களை நிறுத்திவைத்தமைக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தியவர் கைதானார்

இலங்கைக்கு குறுகிய நாள் விஜயத்தை மேற்கொண்டு சென்றிருந்த சீன பாதுகாப்பு அமைச்சரின் வாகனதொடரணிக்காக பொதுமக்களின் வாகனங்களை போக்குவரத்து பொலிஸார் நிறுத்திவைத்தமைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனஅறிவிக்கப்பட்டுள்ளது

சீன பாதுகாப்பு அமைச்சரின் வாகனதொடரணி செல்வதற்காக பொதுமக்களின் வாகனங்கள் பயணிப்பதை போக்குவரத்து பொலிஸார் நிறுத்திவைத்தமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்தில் குறிப்பிட்ட பகுதியில் காணப்பட்ட வாகனங்களின் ஒலியை எழுப்பி எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்த நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார். இதைக் கவனித்த பொலிசாரி சிலர் பொலிஸாரின் கடமைகளிற்கு இடையூறு விளைவித்தமை சட்டவிரோதமாக மக்களை ஒன்றுகூடச்செய்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 31 வயது நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களில் காணப்படுகின்ற வீடியோவை அடிப்படையாக வைத்து விசாரணைகள் இடம்பெறுகின்றன என தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளர் கைதுசெய்யப்பட்டுள்ள நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சீன அமைச்சர் ஒரு இராஜதந்திர இஉலகின் வல்லரசுகள் ஒன்றின் அமைச்சர் என தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளர் அவ்வாறான நபர்களிற்கு இலங்கை ஆகக்கூடிய பாதுகாப்பை வழங்கவேண்டும் எனவும் இது இலங்கையின் பாதுகாப்புக் கடமைகளில் ஒன்று என்றும் தெரிவித்துள்ளார். இதன்காரணமாகவே பொதுமக்களின் வாகனங்கள் பயணிப்பதை நிறுத்தி வைத்ததாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

LOYAL PEST CONTROL
Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice
RANJAN: (416) 464-2415

COMPUTER REPAIR
Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
VARUNAN: (416) 894-6244

ROOM FOR RENT
Kennedy / Eglinton
2 அறை கொண்ட தொடர்மாடிக் கட்டடத்தில் (apartment) இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு.
NO smoking, alcohol or pets.
1 person: $900 / 2 people: $600
Available Immediately

A1Canada, Rental Services
Mr. Ratha Francis:
(416) 752-4444
Cell: (416) 857-5252

# உறுப்பினர் றிசாட் பதியூதீனை விடுதலை செய்யக் கோரி மன்னாரில் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு




முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான றிசாட் பதியூதீனை விடுதலை செய்யக் கோரி மன்னாரில் வியாழக்கிழமை (29) காலை 9.30 மணியளவில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பஸார் பகுதியில் குறித்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது. பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியூதீன் அதிகாலையில் கைது செய்யப்பட்டதையிட்டு வேதனையடைவாதகவும், நாடாளுமன்ற உறுப்பினரான அவரை கைது செய்வதாகச் சபாநாயகருக்குக் கூட அறிவித்தல் விடுக்கப்படவில்லை எனவும், குறித்த கைதினை வண்மையாக கண்டிப்பதாகவும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

அரசாங்கம் தன்னுடைய தோல்வியை மறைப்பதற்காக இவ்வாறான கைதுகளை முன்னெடுப்பதாகவும் குற்றம் சுமத்தியுள்ளனர். எனவே ஜனாதிபதி,பிரதமர்,சக பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து றிஸாட் பதியு-தீனை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

குறித்த போராட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள் பொது மக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு குறித்த கைதினை கண்டித்ததோடு, உடனடியாக அவரை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையினையும் முன் வைத்தனர். குறித்த ஆர்ப்பாட்டம் காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.





- மன்னார் நிருபர் (29-04-2021)

# நானாட்டான் கமநல நிலையத்தில் ஏற்பட இருந்த ஆபத்து சுகாதார பரிசோதகர்களினால் தவிர்க்கப்பட்டது



நானாட்டான் கமநல கேந்திர நிலையத்தில் சிறுபோக நெற் பயிர்ச் செய்கைக்கான காணிப்பதிவு இடம் பெற்று வரும் நிலையில் இன்றைய தினம் வியாழக்கிழமை காலை மக்கள் எவ்வித சுகாதார நடை முறைகளையும் பின் பற்றாத நிலையில், நானாட்டான் கமநல கேந்திர நிலையத்தில் கூடி நின்ற நிலையில், முருங்கன் பொது சுகாதார பரிசோதகர்களின் துரித நடவடிக்கைகளினால் குறித்த பகுதியில் ஏற்பட இருந்த அபாய நிலை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

சிறுபோக நெற் பயிர்ச் செய்கைக்கா காணிப்பதிவு சகல கமநல கேந்திர நிலையங்களிலும் பதிவு செய்யும் நிகழ்வு இடம் பெற்று வருகின்றது. இதன் அடிப்படையில் வியாழக்கிழமை (29) நானாட்டான் கமநல கேந்திர நிலையத்தில் காணிப் பதிவு இடம் பெற்று வரும் நிலையில் மக்கள் எவ்வித சுகாதார நடை முறைகளையும் பின் பற்றாத நிலையில், நானாட்டான் கமநல கேந்திர நிலையத்தில் கூடி நின்றனர். முகக் கவசங்கள் அணியாமலும், போதிய சமூக இடைவெளியை பின் பற்றாமல் நூற்றுக்கும் அதிகமான மக்கள் அவ்விடத்தில் கூடி நின்றனர்.

இந்த நிலையில் குறித்த விடையம் தொடர்பாக முருகன் பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரூபன் லெம்பேட் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உடனடியாக விரைந்து செயல் பட்ட சுகாதார வைத்திய அதிகாரி அவ்விடத்திற்கு பொது சுகாதார பரிசோதகர்களை அனுப்பி துரித நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

நானாட்டான் கமநல கேந்திர நிலையத்தில் காணிப்பதிவுகளை மேற்கொள்ள வந்த மக்களை சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக முகக்கவசம் அணிய வைத்து சமூக இடை வெளியை கடைபிடிக்க துரித நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதனால் அப்பகுதியில் ஏற்பட இருந்த பாரிய அபாயம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.



தேவையறிந்து மக்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு உடனடியாக செயற்பட்ட முருங்கன் பொது சுகாதார வைத்திய அதிகாரி, பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோருக்கு நானாட்டான் பிரதேச மக்களும் சமூக செயற்பாட்டாளர்களும் நன்றி தெரிவித்தனர்.

- மன்னார் நிருபர் (29-04-2021)



# Ontario Parents Receive Direct Support Under Ontario COVID-19 Child Benefit

# ஏப்ரல் 26 அன்று ஒன்ராறியோ கோவிட் –19 குழந்தை நலனின் கீழ் ஒன்றாரியோ மாகாணப் பெற்றோர்கள் நேரடி ஆதரவைப் பெறத் தொடங்குவார்கள்

ஏப்ரல் 25, 2021

கடந்த 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஒன்ராறியோவின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெக்ஸே ஒன்ராறியோ கோவிட்-19 குழந்தைகள் - பெற்றோர் நன்மை குறித்து பின்வரும் அறிக்கையை வெளியிட்டார்:

“நாங்கள் முன்பு செய்ததைப் போல, தொற்றுநோயின் விளைவாக ஏற்படும் கூடுதல் செலவுகளை ஈடுசெய்ய எங்கள் அரசாங்கம் மீண்டும் குடும்பங்களுக்கு நேரடி நிவாரணம் அளிக்க முன்வருகிறது. ஒன்ராறியோ கோவிட்-19 குழந்கைளுக்கான நன்மை வழங்கும் திட்டத்தின் மூலம் பெற்றோருக்கான கொடுப்பனவுகள் 2021 ஏப்ரல் 26, நாளன்று தொடங்கும் என்பதை உறுதிப்படுத்துவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்,

0 வயது முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களின் உழைக்கும் பெற்றோருக்கும், சிறப்புத் தேவைகளைக் கொண்ட குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கும் 21 வயது வரை, இந்த தொற்றுநோய்களின் போது நேரடி நிதி உதவியுடன். COVID-19 மாகாணத்தில் உள்ள அம்மாக்கள், அப்பாக்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு பல செலவுகளை விதித்துள்ளது, மேலும் இந்த எதிர்பாராத சவாலின் மூலம் அவர்களுக்கு உதவ மாகாண அரசான நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். குடும்பங்களில் இதை எளிதாக்குவதற்கு, முன்னர் கற்றவர்களுக்கு பணம் செலுத்துவதற்கான ஆதரவைப் பெற்ற நபர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை - உங்கள் கட்டணத்தை எவ்வித தடையுமின்றி நீங்கள் பெறுவீர்கள். வேலை செய்யும் பெற்றோருக்கு மலிவு விலையில் குழந்தை பராமரிப்பு முக்கியமானது என்பதையும் நாங்கள் நன்கு அறிவோம், அதனால்தான் 2019-20 ஆம் ஆண்டில் 16,000 புதிய இடங்களை உருவாக்க எங்கள் அரசாங்கம் ஆதரவளித்தது. குழந்தை பராமரிப்பு அணுகல் மற்றும் செலவினங்களிலிருந்து நிவாரணம் (CARE) வரிக் கடனை 2021 ஆம் ஆண்டில் 20 சதவீதம் உயர்த்தவும் நாங்கள் முன்மொழிகிறோம், இது ஆதரவை 1,250 டாலரிலிருந்து 1,500 டாலர்களாக அதிகரிக்கும், சராசரியாக, குழந்தை பராமரிப்பு செலவினங்களுக்கு சுமார் 75 மில்லியன் டாலர் கூடுதல் ஆதரவை 300,000 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வழங்க எமது அரசாங்கம் முடிவு செய்துள்ளது. ஒன்ராறியோ மாகாணத்தில் அனைத்து குடும்பங்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு நெகிழ்வான மற்றும் பதிலளிக்கக்கூடிய ஒரு மலிவானதும் பெற்றோர்களால் கஸ்டமின்றி மேற்கொள்ளக் கூடிய குழந்தை பராமரிப்பு முறையை உருவாக்கவே எமது அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது”.



இவ்வாறு ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# Canadian Military Health-Care Personnel Help Staff at the Sunnybrook Health Centre in Toronto



# இன்று தொடக்கம் ரொறன்ரோவின் சன்னிபுரூக் சுகாதார நிலையத்தின் தீவிர சிகிச்சை பிரிவில் கனேடிய இராணுவம் பணியாற்றுகின்றது

ரோறன்ரோவில் உள்ள சன்னிபுரூக் சுகாதார நியைம் மற்றும் மருத்துவமனை மற்றும் தீவிர சிகிச்சை பிரிவில் (ஐ.சி.யூ) ஊழியர்களுக்கு உதவிட சுகாதாரப் பாதுகாப்புப் பணியாளர்களை உள்ளடக்கிய கனேடிய இராணுவ பணிக்குழு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் பணியாற்றவுள்ளது இது ஒன்ராறியோ மருத்துவமனைகளுக்கு COVID-19 உதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இராணுவம் பயன்படுத்தப்படுவதன் ஒரு பகுதி என்பது குறிப்பிடத்தக்கது. கூட்டு பணிக்குழு மையத்தின் செய்தித் தொடர்பாளர் மேஜர் சோனியா டும ழர சல்-கானாக், சன்னிபிரூக்கிற்கு “அவசர ஊழியர்களின் தேவைகள்” இருப்பதாகவும் அது காரணமாகவே இந்த இராணுவக் குழு வந்துள்ளதாவும் கூறினார். ஒன்ராறியோ மாகாண மருத்துவமனைகளுக்கு இராணுவத்தை அனுப்புவதற்கு தலைமை தாங்கும் பணியில் ஈடுபட்ட ஸ்டீபன் மாஸன், சன்னிபுரூக்கிற்கு முன்னுரிமை அளிப்பது என்பது மாகாண அரசின் முடிவாகும் என்றும் கூறினார். இதேவேளை, ஹாமில்டன் மற்றும் பிற பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளின் தேவைகளையும் அவற்றிக்கு என்ன உதவிகள் தேவைப்படுகின்றன என்பவை தொடர்பாகவும் தீர்மானிக்க கலந்துரையாடல்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன என்றும் தெரிவித்தார்.

“பணிக்குழுவின் உறுப்பினர்கள் ஒன்றாரியோ மாகாணத்தின் அதிகாரிகளோடு தினசரி கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர், நாங்கள் மருத்துவ நிலையங்களில் பணியாற்றும் முன்வரிசை ஊழியர்கள் மற்றும் வைத்தியர்கள் ஆகியோருடன் பணியாற்றி சிறந்த சேவையை வழங்க முடியும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்” என்று வியாழக்கிழமை ஒரு நேர்காணலில் இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார். இவேவேளை “அவர்களின் தேவை என்னவாக இருக்கும் என்பதை அறிந்து கொள்வதற்கா, நாங்கள் ஹாமில்டன் பிரதான வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடி வருகிறோம்.” என்றும் அவர் தெரிவித்தார்.



# ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிடும் இந்திய வம்சாவளிப் பெண்...

அரோரா அகங்க்ஷா என்ற இந்திய வம்சாவளிப் பெண் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பதவிக்கு போட்டியிடுகிறார். இதுவரை எந்த அரசியல் அனுபவமும் இல்லாத அரோரா கடந்த 4 ஆண்டுகள் ஐ.நாவில் ஆடிட்டராகப் பணிபுரிந்து வருகிறார். இவர் வெற்றிபெற்றால் ஐ.நா-வை வழிநடத்தும் இளம் பொதுச் செயலாளர் மட்டுமல்லாது, முதல் பெண் பொதுச் செயலாளராகவும் பெருமை பெறுவார்.

தற்போது ஐ.நா-வின் பொதுச் செயலாளராக இருக்கும் அன்டோனியோ குட்டெர்ஸ், அரோராவுக்கு எதிராக மீண்டும் போட்டியிடுகிறார்.

71 வயதாகும் அன்டோனியா, தன் வயதில் பாதிகூட இல்லாத 34 வயதாகும் அரோராவுடன் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது. ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த அன்டோனியோ இதற்கு முன் அகதிகள் மறுவாழ்வு துறையில் முதன்மை ஆணையராக இருந்துள்ளார்.

இந்தியாவின் ஹரியானா மாநிலத்தில் பிறந்த அரோரா 6 வயதில் தன் அம்மாவின் வேலை காரணமாக சவுதி சென்றுள்ளார். பின் இந்தியா திரும்பி பள்ளிப் படிப்பை இங்கு முடித்தவர், பின்னர் நியூயார்க் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். அதைத் தொடர்ந்து கனடாவில் வேலை செய்துவந்தவர் 2016-ம் ஆண்டு முதல் ஐ.நா-வில் பணிபுரிகிறார்.

பல நாடுகளில் வாழ்ந்துள்ள அரோரா தன்னையும் ஓர் அகதியாகவே கருதுகிறார். அகதிகளுக்கான சேவையை ஐ.நா சரிவர செய்யவில்லை எனக் கூறும் அரோரா, தான் வெற்றிபெற்றால் அகதிகளின் பிரச்னைக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும், ஐ.நா-வின் செயல்பாடுகள் மோசமானதாக உள்ளதாக விமர்சித்த அரோரா, ஐ.நா-வின் வருமானம் 56 பில்லியன் டாலர்கள் எனில், ஒரு டாலரில் 29 சென்ட் மட்டுமே சரியான முறையில் பயன்படுத்தப்படுவதாகக் குற்றம் சாட்டினர்.

சில நாள்களுக்கு முன் சாலை விபத்தில் சிக்கிய அரோராவின் கால்களில் பலத்த அடிபட்டது. எனினும், உள்ளுறுப்புகள் பாதிப்பின்றி முழுவதும் மீண்டார். அந்த விபத்தில் தான் உயிரிழந்திருந்தால் தன் வாழ்க்கை ஏதும் அற்றதாய் இருந்திருக்கும் என உணர்ந்த அவர், தான் வாழந்ததற்காக உலகில் ஏதேனும் நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தேர்தலில் போட்டியிட வேண்டும் என முடிவெடுத்ததாகக் கூறியுள்ளார்.

தேர்தலில் தோல்வியுற்றால் என்ன செய்வீர்கள் என்ற பத்திரிகையாளர் கேள்விக்கு, “அகதிகளுக்கு எப்போதும் பிளான் பி இருப்பதில்லை. அதேபோல், எனக்கும் பிளான் பி கிடையாது” எனத் தன்னம்பிக்கையுடன் கூறியுள்ளார். அரோரா குறித்து அவர் தோழி பமீலா, “அரோரா அச்சமற்றவள்” எனக் கூறியுள்ளார்.

ஐ.நா-வில் உடன் வேலை செய்பவர்கள் அனைவரும் அரோராவுக்கு ஆதரவு தந்தாலும், எந்த நாடும் வெளிப்படையாக அரோராவை ஏற்றுக்கொள்ளவில்லை. அக்டோபரில் நடைபெறும் தேர்தலில் அன்டோனியோதான் வெற்றிபெறுவார் என ஊடகங்கள் தெரிவித்தாலும், கடந்த ஓர் ஆண்டாக அரோரா தன் சேமிப்பிலிருக்கும் 30,000 டாலர்களை செலவு செய்து சமூக வலைதளத்திலும் இணையத்திலும் தன்னம்பிக்கையுடன் பிரசாரம் செய்து வருகிறார்.

# ரொறன்ரோ தமிழ் இருக்கையின் மூன்று வருட அஞ்சலோட்டத்தை முடித்து வைத்த அமரர் "தந்தை" செல்வா



ரொறன்ரோ தமிழ் இருக்கைச் செயற்றிட்டத்தைச் செயற்படுத்துவதற்கான $3,000,000 என்ற முழுத் தொகையை மேற்படி அமைப்பு எட்டிவிட்டது என்ற செய்தி வெளியாகியுள்ளதை அறிந்து நாம் அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டும்.

மேத் திங்கள் 2018, கனடாவில் முதலாவது தமிழ் இருக்கையை நிறுவுவதற்காக, கனடியத் தமிழர் பேரவையும், தமிழ் இருக்கை அமைப்பும் இணைந்து, ரொறன்ரோ பல்கலைக்கழகத்தோடு ஓர் உடன்படிக்கையை மேற்கொண்டது. கோவிட்-19 என்ற உலகளாவிய பெருந்தொற்றால் துவண்டுவிடாது, தமிழ் சமூகமும், ஆர்வலர்களும் இணைந்து கனடிய மண்ணிலே வரலாற்று அருஞ்செயலை ஆற்றியுள்ளார்கள்.

இந்த வரலாற்றுச் செயற்றிட்டமானது ஈழத்தமிழரின் தலைவராக விளங்கிய தந்தை செல்வா என்று அழைக்கப்படும் சா. ஜே. வே செல்வநாயகம் அவர்களின் 44ஆவது நினைவுநாளில் எட்டப்பட்டுள்ளது என்பதும் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை பெருந்தன்மையுடன் வழங்கிய நிதிக்கொடையால் எட்டப்பட்டுள்ளது என்றும் கனடிய தமிழர் பேரவையின் தலைவரும் இந்த ரொரன்ரோ தமிழ் இருக்கைக் குழுவின் தீவிரமான செயற்பாட்டாளராக விளங்கிய திரு சிவன் இளங்கோ தெரிவித்துள்ளமை உலகத் தமிழர்கள் அனைவருக்கும் தமிழ் உணர்வை மேலும் அனுபவிக்க தூண்டும் என்பதே உண்மை.



# Canada Reached an Agreement with Pfizer for 65 Million Booster Shots for Next Two Years if the Effectiveness of COVID-19 Vaccines Fades With Time

# அடுத்த இரண்டு வருடங்களுக்கு 65 மில்லியன் பைசர் தடுப்பூசிகளைப் பெறுவதற்கான ஒப்பந்தத்தை கனடா பைசர் நிறுவனத்துடன் செய்துள்ளது





கோவிட்-19 தடுப்பூசிகளின் செயல்திறன் காலப்போக்கில் குறைந்து வலுப்படுத்தப்பட வேண்டியிருந்தால், அடுத்த ஆண்டு 35 மில்லியன் தடுப்பூசிகளும் 2023 ஆம் ஆண்டில் 30 மில்லியன் தடுப்பூசிகளும் கனடா கொள்வனவு செய்வதற்குரிய ஒப்பந்தத்தில் ∴பைசர் நிறுவனத்துடன் கையெழுத்திட்டுள்ளது என்று கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறினார்.

65 மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசிகள் எதிர்காலத்தில் இன்னும் தேவைப்பட்டால் அதைத் தருவதற்கு பைசர் நிறுவனமான அவர்களுக்கு விருப்பங்கள் உள்ளன என்றும் தெரிவித்த கனடியப் பிரதமர் இந்த இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் தொடர்பான திட்டங்கள் குறித்து அரசாங்கம் மற்ற தடுப்பூசி உற்பத்தியாளர்களுடனும் பேசி வருகிறது என்றும் தெரிவித்தார்.

தடுப்பூசிகள் மிகவும் புதியவை, அவற்றின் பாதுகாப்பு எவ்வளவு காலம் நீடிக்கும், அல்லது வைரஸின் வளர்ந்து வரும் மாறுபாடுகளால் அவை பாதிக்கப்படுமா என்பது குறித்து நிபுணர்களிடம் இன்னும் உறுதியான தரவு இல்லை.

இதுவரை, ∴பைசரின் தடுப்பூசிகளின் தொடர்ச்சியான சோதனை, நிறுவனத்தின் இரண்டு-டோஸ் தடுப்பூசி குறைந்தது ஆறு மாதங்களாவது மிகவும் பயனுள்ளதாக இருப்பதைக் குறிக்கிறது, சில வேளைகளில் இது மேலும் நீண்ட காலமாக இருக்கலாம். மாடர்னாவின் தடுப்பூசி பெற்ற நபர்களுக்கு இரண்டாவது தேவையான தடுப்பூசிகள் முடிந்த ஆறு மாதங்களுக்குப் பிறகும் குறிப்பிடத்தக்க அளவு வைரஸ்-எதிர்ப்பு சக்தி இருந்தது.

"என்ன நடந்தாலும் நாங்கள் தயாராக இருக்க வேண்டும் என்று கனடியர்கள் எதிர்பார்க்கிறார்கள். தொடர்ச்சியாக தடுப்பூசிகள் தேவையில்லை என்ற நம்பிக்கை நிச்சயமாக உள்ளது, ஆனால் அவை இருந்தால் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்த நாங்கள் மிகவும் சிறந்தது", என்று கனடிய ஒட்டாவாவில் நடந்த செய்தியாளர்கள் மாநாட்டில் ட்ரூடோ கூறினார்.



அவரும் அவரது மனைவி சோபியும் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி பெற திட்டமிடப்படுவதற்கு சற்று முன்னர் ட்ரூடோ இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

ஒன்ராறியோ மாகாணம் சமீபத்தில் 40 மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு அஸ்ட்ராஜெனெகாவுக்கான தகுதியை கைவிட்டது.

கனடாவில் தகுதியுள்ள பெரியவர்களில் 30 வீதம் குறைந்தது ஒரு தடுப்பூசியையாவது பெற்றுள்ளதாக பிரதமர் கூறுகிறார். தகுதிவாய்ந்த அனைத்து கனேடியர்களும் ஜூன் இறுதிக்குள் குறைந்தது ஒரு டோஸைப் பெற முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கனடாவில் தடுப்பூசிகள் அதிகரித்துள்ளன, ஆனால் சுகாதார வல்லுநர்கள் கூறுகையில், அதிக மக்கள் தொகை கொண்ட மாகாணமான ஒன்ராறியோவின் தொற்று மாறுபாடுகள் மற்றும் தவறுகள் அங்கு மூன்றாவது அலை நோய்த்தொற்றுகளுக்கு பங்களித்தன. ஒன்ராறியோவில் வெள்ளிக்கிழமை 4,500 க்கும் மேற்பட்ட புதிய வழக்குகள் பதிவாகியுள்ளன.

கனடாவுக்கு விமானம் மூலம் வந்தபின் புதிய கொரோனா வைரஸுக்கு சாதகமாக சோதனை செய்தவர்களில் பாதி பேர் அந்த பிராந்தியத்திலிருந்து வந்தவர்கள் என்று கூறி வியாழக்கிழமை இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து அனைத்து விமானங்களையும் கனடா தடை செய்தது. இந்தியா தினசரி தொற்றுநோய்களில் இரண்டாவது முறையாக 332,730 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இதற்கிடையில், பிரிட்டிஸ் கொலம்பியாவின் பசிபிக் கடற்கரை மாகாணம், மூன்று பிராந்திய சுகாதார மாவட்டங்களுக்கிடையில் அத்தியாவசிய பயணத்தை தடைசெய்தது, கோவிட்-19 பரவுவதைத் தடுக்க முயற்சித்தது.

இதே வேளையில் கனடாவின் பொது பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் சொலிசிட்டர் ஜெனரல் மைக் பார்ன்வொர்த், இந்த உத்தரவு மாவட்டங்களுக்கு இடையில் பொழுதுபோக்கு பயணத்தை தடைசெய்கிறது, ஆனால் பாடசாலை, வேலை, சுகாதாரப் பாதுகாப்பு அல்லது வணிக போக்குவரத்து போன்ற அத்தியாவசிய காரணங்களுக்காக பயணங்களை அனுமதிக்க நாம் யோசித்து வருகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.



# பிரதமர் மோடிக்கு சர்வதேச ஊடகங்கள் கடும் கண்டனம்

ஒரு நாளைக்கான கரோனா தொற்றுப் பாதிப்பு எண்ணிக்கையில், உலக நாடுகளை இந்தியா பின்னுக்குத் தள்ளியிருக்கும் நிலையில் பன் னாட்டு ஊடகங்களின் பார்வை இந்தியா பக்கம் திரும்பியுள்ளது.

உலக நாடுகள் பலவற்றில் தடுப்பூசி வெற்றிகரமாக செயல்படத் துவங்கி கரோனா பரவல் வெகுவாக குறைந்திருக்கும் வேளையில், அந்த நாடுகளுக்கெல்லாம் தேவையான தடுப்பூசியை உற்பத்தி செய்து விநியோகித்து வரும் இந்தியாவில் கரோனா கட்டுக்கடங்காமல் பரவி வருவது உலக நாடுகளை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

மருத்துவ ஆக்சிஜனுக்கு பற்றாக்குறை, கொத்துக் கொத்தாக இறக்கும் மக்கள், எங்கு பார்த்தாலும் புதை குழிகள், எரி மேடைகள் என நாளுக்கு நாள் இந்திய மக்களின் துயரம் அதிகரித்து வரும் நிலையில், இந்தி யாவில் என்னதான் நடக்கிறது, அரசாங்கம் என ஒன்று இருக்கிறதா? என்று உலகின் பல்வேறு முன்னணி நாளிதழ்கள் பலவும் கேள்விகளை எழுப்பியுள்ளன. மேலும், மோடியின் திறமையின்மையால் இந்திய அரசு நிலை குலைந்து இருப்பதாகவும், அரசு அமைப்பே சரிந்து போயிருப்பதாகவும் குற்றம்சாட்டியிருக்கும் செய்தி ஊடகங்கள் நாட்டின் தலைநகரம் பிணைக் கைதி நிலையில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளன. இங்கிலாந்தைச் சேர்ந்த ஆங்கில நாளிதழான "தி கார்டியன்" நிர்வாகம் சீரழிந்து விட்டது : "கரோனா நரகத் தில் இந்தியர்கள்" என்ற தலைப்பில் ஏப்ரல் 21 அன்று செய்திக்கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

எனது வாழ்நாளில் இதுபோன்ற ஒரு கூட்டத்தை எந்த தேர்தல் பிரச்சாரத்திலும் பார்த்ததில்லை என்று மேற்கு வங்க தேர்தல் பிரச்சாரத்தில் பிரதமர் மோடி ஆற்றிய உரையைத் தொட்டு ஆரம்பிக்கும் அந்தக் கட்டுரை, "இந்தியா முழுவதும் உள்ள மருத்துவமனைகளுக்கு வெளியே ஆம்புலன்ஸ் வாகனங்கள் வரிசை வரிசையாக நிற்கின்றன் ஆனாலும், தங்களின்கட்சி உறுதியாக வெற்றிபெறப் போகிறது என்றுகருதும் மேற்கு வங்கத்தில் பாஜக தனது தேர்தல் பொதுக்கூட்டங்களின் எண்ணிக்கையைக் குறைக்கவில்லை.

பிரதமர் மோடியும், அவரது உள்துறை அமைச்சர் அமித்ஷாவும், அந்த வாரத் தில்கூட பொதுக் கூட்டங்களையும், பேரணிகளையும் தொடர்ந்து நடத்தினர். கூட்டம் சேரவேண்டாம், தனி மனித இடைவெளி வேண்டும் என்ற மருத்துவர்களின் அறிவுறுத்தலுக்கு மாறாக கூட்டம் சேர்ப்பதிலேயே இருவரும் கவனமாக இருந்தனர்" என்று விமர்சித்துள்ளது.

சுகாதார வல்லுநர்களால் வழங்கப்பட்ட எச்சரிக் கையை, மோடி அரசாங்கம் புறக்கணித்ததே, கரோனா நெருக்கடிக்குக் காரணம் என்று கூறியுள்ள "தி கார்டியன்", குஜராத் மற்றும் உத்தரப்பிரதேசம் போன்ற பாஜக ஆளும் மாநிலங்களில் உண்மையான கரோனா எண்ணிக்கையை மறைத்து மோசடி செய்யப்பட்டிருக்கலாம் என்று சந் தேகமும் எழுப்பியுள்ளது. ஏனெனில் அங்குள்ள மருத்துவமனைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பிணங்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது என்று "கார்டியன்" குறிப்பிடுகிறது. கரோனா முதல் அலை விஷ யத்தில் மோடி அரசு பல்வேறு மட்டங்களிலும் சுயதிருப்தி அடைந்து கொண்டதே தற்போதைய இரண்டாவது அலை மூலமான பேரழிவுக்குக் காரணம் என்றும் விமர்சித்துள்ளது.

இங்கிலாந்தின் மற்றொரு நாளிதழான "டெய்லி மெயில்" ஏடு, நாசிக் நகரில் ஆக்சிஜன் கசிவால் 22 பேர் உயிரிழந்த சம்பவத்தைக் குறிப்பிட்டு, கரோனா கட்டுப்பாடுகளை மீறியதாக ஒருபுறம் மக்கள் மீது காவல்துறையினர் தடியடி நடத்துவதையும், மறுபுறம் கரோனா பரவலைக் கட்டுப் படுத்த முடியாமல் அதிகாரிகள் திணறுவதையும் பதிவு செய்துள்ளது.

"நியூயார்க் டைம்ஸ்" இதழானது, தனது சிறப்புச் செய்திப் பிரிவில் பொருளாதார மற்றும் தொற்றுநோய் குறித்த விவகாரங்கள்குறித்த ஆய்வாளரான ரமணன் லட்சுமிநாராயணன் என்பவரது கட்டுரையை பிரசுரித்துள்ளது. இந்தியாவில் இரண்டாவது அலை கட்டுப் பாட்டை மீறி விட்டது என்ற தலைப்பிலான அந்தக் கட்டுரையில், கும்பமேளா கொண்டாட்டம், திரளான தேர்தல் திருவிழா ஆகியவற்றை பதிவு செய்துள்ள லட்சுமிநாராயணன், மத்தியப் பிரதேச மாநிலத்தில் ஆங்காங்கே கரோனாவால் இறந்தவர்களின் பிணங்கள் எரிக்கப்படும் சம்பவங்களை விவரித்துள்ளார். மேலும் இந்த துயரத்தை, 1984-ஆம் ஆண்டுபோபாலில் நடந்த யூனியன் கார்பைட் நிறுவனம் சம்பந்தப்பட்ட விஷவாயு விபத்துடன் அவர்ஒப்பிட்டுள்ளார்.

ஊடகங்களால் உற்சாகப்படுத்தப்பட்டு, தொற்றுநோய்க்கு எதிராக முன்கூட்டியே மோடி வெற்றியை அறிவித்து விட்டார். இதனால் இரண்டாவது அலை பற்றி அவரிடம் எந்த முன்யோசனையும், திட்டமும் இல்லை. கரோனாவை எதிர்கொள்ளவும் அவர் ஆயத்தம் ஆகவில்லை. அதுவே இவ்வளவு பெரிய பாதிப்புக்குக் காரணம் என்று லட்சுமி நாராயணன் கூறியுள்ளார்.

உலகின் தினசரி கரோனா தொற்றில் 40 சதவிகிதம் இந்தியாவில்தான் ஏற்படுகிறது என்ற புள்ளிவிவரத்தையும் "நியூயார்க் டைம்ஸ்" குறிப்பிட்டுள்ளது.

"லே மோண்டே" எனும் பிரெஞ்சு நாளிதழானது நாட்டின் தலைநகர் டில்லியில் நிலவும் ஆக்சிஜன் தட்டுப்பாடு குறித்துப் பதிவிட்டிருப்பதோடு, இதுபோன்ற ஒரு நிலையை தங்கள் வாழ்நாளில் கண்டதில்லை என்று அங்குள்ள மருத்துவர்கள் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

கரோனா தொற்றில் முன்னணியில் இருக்கும் மற்றொரு நாடான பிரேசில் நாட்டின் "ஓ குளோபோ" நாளிதழ் இந்தியாவில் பரவிவரும் புதுவிதமான கரோனா வைரஸ் குறித்து விளக்கியுள்ளது. "ஜப்பான் டைம்ஸ்" நாளிதழும் இந்தியாவில் நிலவும் ஆக்சிஜன் தட்டுப்பாடு, மருத்துவமனைகளில் படுக்கை வசதிகள் இல்லாமல் இருப்பது ஆகியவற்றை குறிப்பிட்டு செய்தி வெளியிட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் "சிட்னி மார்னிங் ஹெரால்ட்" பத்திரிக்கை, இந்தியாவில் நடந்த கும்பமேளா, தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள், மோடி அரசின் முன்னுக்குப் பின்னான அறிவிப்புகள், பல்வேறு மாநிலங்களில் அறிவிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவுகள் குறித்து விளக்கமாக பதிவிட்டுள்ளது. அதாவது, மோடியின் தேர்தல் பிரச்சாரம், ஆயிரக்கணக்கானோர் கூடிய அவரது பொதுக்கூட்டங்கள், கரோனா தொற்றுப் பரவல் சூப்பர்ஸ்ப்டெரராக மாறுவதற்குக் காரணமான லட்சக்கணக்கானோர் கூடிய ஹிந்து திருவிழாவான கும்பமேளாவிற்கு மோடி அரசாங்கம் அளித்த ஒப்புதல் ஆகியவற்றைக் கொண்டு, கரோனா தொற்றுப் பரவலில் இந்தியா ஒரே நாளில் உலக சாதனைகளை முறியடித்து விட்டது என்றும் சாடியுள்ளது.

"கல்ப் டைம்ஸ்" நாளிதழானது இந்தியாவில் கரோனா தொற்று புதிய உச்சம் தொட்டிருப்பது குறித்து செய்தி வெளியிட்டிருப்பதுடன், இந்தியா செல்வதற்கு, ஓமன் அரசு விதித்திருக்கும் தடை குறித்தும் தெரிவித்துள்ளது.

# பண மோசடி, பணச் சலவை, ஊழல் என ஊரைக் கொள்ளை அடித்து உலையில் போட்ட இராசபக்ச குடும்பம்!

சட்டி பானையைப் பார்த்துச் சொல்லியதாம் நீ கருப்பு என்று. பாசாங்குத்தனத்தைப் பற்றி ஒரு கருத்தைத் தெரிவிக்க இந்தச் சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது. தன்னிடம் குறைபாடுகள் இருக்கும் போது மற்றவர்கள் குறையை விமர்சிப்பது தவறு என்பது இதன் பொருள். சட்டி நெருப்பில் காய்வதால் அது கருப்பாகிவிடும். அதே நெருப்பில் காயும் பானையும் கருப்பாகிவிடும்.

சனாதிபதி கோட்டாபய இராசபக்ச நொவெம்பர் 2019 இல் பதவிக்கு வந்தது தொடக்கம் விசாரணை ஆணையங்கள் காளான் போல் முழைத்து வருகிறது. ஒரு ஆணையம் சமர்ப்பித்த அறிக்கையை விசாரிக்க இன்னொரு ஆணையம் அமைக்கும் அலங்கோலமும் நடந்து வருகிறது.

சனாதிபதி கோட்டாபய நியமித்த பல ஆணையங்களில் கடந்த ஆட்சியில் (சிறிசேனா - விக்கிரமசிங்க) இடம் பெற்றதாகக் கூறப்படும் அரசியல் பழிவாங்கல் பற்றி விசாரிக்க சனவரி 2020 ஆண் ஆண்டு நியமிக்கப்பட்ட ஆணையமும் ஒன்றாகும். இந்த ஆணையம் 08 சனவரி 2015 முதல் 16 நொவெம்பர் 2019 வரையான காலப்பகுதியில் அரச மற்றும் தனியார் கூட்டுத் தாபனங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராய்ந்து, தகவல்களை திரட்டி அறிக்கை சமர்ப்பிக்கும் எனக் கூறப்பட்டது. இந்த ஆணையம் 09 சனவரி 2020 முதல் 25 நொவெம்பர் 2020 வரை செயல்பட்டது.

இந்த ஆணைக்குழு விசாரணை நடத்தி அதன் அறிக்கையை சனாதிபதி கோட்டாபய இராசபக்சவிடம் 08 டிசெம்பர் 2020 அன்று சனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஆணையத்தின் தலைவராக ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதியரசர் உபாலி அயரத்னா நியமிக்கப்பட்டார். ஓய்வுபெற்ற மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சந்திரசிறி ஜெயதிலகே மற்றும் முன்னாள் காவல் ஆய்வாளர் (ஐஜிபி) சந்திர பெர்னாண்டோ ஆகிய இருவரும் இடம்பெற்றனர்.



உச்சநீதிமன்ற நீதியரசர் உபாலி அபயரத்னா அவரது பதவிக் காலத்தில் நடத்தைக் குறைபாட்டுக்கு பணியில் இருந்து இடை நிறுத்தப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆணையம் முன்னாள் பிரதமர் ரனில் விக்கிரமசிங்க மற்றும் 21 பேர் அரசியலமைப்பை மீறியதற்காக தண்டிக்கப்பட வேண்டும் அவர்களது சிவில் உரிமைகள் பறிக்கப்பட வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளது. அந்த 21 பேரில் மங்கள சமரவீர, படாலி சம்பிகா இரணவக்கா, இரவூப் ஹக்கீம், சரத் பொன்சேகா, ஆர்.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், அனுரா குமார திசநாயக்க, ஜே.சி. வெலியமுனா, மாலிக் சமரவிக்ரமா மற்றும் கலாநிதி ஜெயம்பதி விக்ரமரத்ன இடம் பெற்றுள்ளனர்.

சிவில் உரிமைகள் பறிக்கப்பட்டால் இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 157 ஏ (12) வழங்குகின்ற 'குடிமை உரிமைகள்' பறிக்கப்படும். கடவுச்சீட்டு வைத்திருப்பதற்கான உரிமை, எந்தவொரு அசையாச் சொத்தையும் சொந்தமாக வைத்திருத்தல் மற்றும் உரிமம், பதிவு அல்லது பிற ஒப்புதல் தேவைப்படும் எந்தவொரு வாணிகம் அல்லது தொழிலிலும் ஈடுபடுவதற்கான உரிமை ஆகியன பறிக்கப்படும்.

குடியுரிமை பறிக்கப்படுவது சட்டத்தின் ஆட்சிக்கு மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும். மற்றும் நாட்டின் நிருவாகத்தில் இருக்க வேண்டிய கட்டுப்பாடுகளும் இருப்புகளும் **(checks and balances)** ஒழிக்கப்பட்டுவிடும்.

அதேசமயம் பின்வரும் அரசியல்வாதிகளுக்கு உதய கம்மன் பிள்ளை, யோஷிதா இராசபக்ச, நலகா கோதஹேவா, சிவனேசதுரை சந்திரகாந்தன் அல்லது 'பிள்ளையான்', ரோஹித பொகோலகம, உதயங்க வீரதுங்க, வசந்த கரணகொட மற்றும் ஜகத் விஜயவீரா ஆகியோருக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.

கடந்த ஆட்சியில் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்ட அரசியல்வாதிகளுக்கு விடுவிக்கப்படுகின்றனர். அதே சமயம் அவர்கள் மீது குற்றம் சாட்டிய அரசியல்வாதிகள் தண்டிக்கப்படுகின்றனர்! நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் சட்டமா அதிபரால் திரும்பிப் பெறப்படுகின்றன. குற்றச்சாட்டுக்களை எண்பிக்க தேவையான சாட்சியங்கள் இல்லை என்பது சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் தெரிவித்தார். அரசியல் பழிவாங்கல் ஆணையத்தின் அறிக்கை பற்றி மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசநாயக்கா கடந்த 23 ஏப்ரில், 2021 அன்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய காரசாரமான உரையில் கடுமையாகக் கண்டித்திருந்தார். அரசியல் பழிவாங்கல் ஆணையத்தின் மிகவும் ஐயத்திற்கிடமான நடத்தை, சனாதிபதி மற்றும் அவரது குடும்பத்தினருடன் தொடர்புடைய வஞ்சகர்களையும் குற்றவாளிகளையும் மற்றவர்கள் பரிகசிக்கும் வண்ணம் விடுவித்த அரசின் நடத்தையை அம்பலப்படுத்தினார். எந்தவொரு நீதிமன்றமும் நந்தசேனா கோட்டாபய குற்றமற்றவர் உத்தமர் எனப் பிரகடனப்படுத்தவில்லை என்றார்.

**In 75 days, the Commission led by disgraced judge Upali Abeyratne had investigated 136 complaints. In 78 such complaints the "Pissu Poosa Commission" recommended exonerating and acquitting some Rajapaksa family members military officials and political associates – even those against whom criminal trials are currently underway in the courts of law.**

மொத்தம் 75 நாட்களில், அவமானப்படுத்தப்பட்ட நீதிபதி உபாலி அபயரத்தின தலைமையிலான ஆணையம் 136 முறைப்பாடுகளை விசாரித்தது. இதில் 78 முறைப்பாடுகளில் இந்த பைத்தியக்கரஆணையம் தற்போது நீதிமன்றங்களில் குற்றவியல் விசாரணைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற இராசபக்ச குடும்ப உறுப்பினர்கள், இராணுவ அதிகாரிகள் மற்றும் அவர்களது அரசியல் கூட்டாளிகளையும் விடுவிக்குமாறு பரிந்துரை செய்துள்ளது.

அபயரத்தின ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசாங்கம் வழக்குகளை நிறுத்த விரும்பும் நபர்களில் நலகா கொடஹேவா மற்றும் உதய கம்மன்பிள்ளை ஆகியோர் உள்ளனர். இந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்கள் சொந்த நீதித்துறை நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் வாக்களிக்க கைகளை உயர்த்துவார்களா? அப்படி அவர்கள் கைகளை உயர்த்தினால் அது முன்னுதாரணம் இல்லாத வரலாற்று நடவடிக்கையாக இருக்கும்!

திசநாயக்க தனது உரையின் போது, அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் கைக்கூலிகளிடம் இருந்து முறைப்பாடுகளை அளிக்க ஆணையம் எவ்வளவு தூரம் சென்றது என்பதை அம்பலப்படுத்தினார்.

ஒக்தோபர் 25, 2020 அன்று இராசபக்சவின் மைத்துனர் திரு நடேசன் ஆணைக்குழு முன் முறைப்பாடு ஒன்றைக் கையளித்தார். ஒக்தோபர் 23 2020 அன்று யோஷிதா இராசபக்ச ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தார். அக்டோபர் 26, 27 மற்றும் 28 ஆகிய தேதிகளில் முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டன. முறைப்பாடுகள் இன்று தாக்கல் செய்யப்படுகின்றன, நாளை விசாரணைகள் தொடங்கி முடிவுகள் எட்டப்படுகின்றன. ஆணைக்குழுவின் நடத்தை முற்று முழுதான - அப்பட்டமான பாகுபாடாகும்" என்று திசநாயக்கா குற்றம் சாட்டினார்.

2020 டிசம்பர் 8 ஆம் தேதி ஆணையம் தனது அறிக்கையை கையளித்தது. ஒரு ஆணையம் தனது அறிக்கையை ஒப்படைத்தவுடன், ஆணையத்தின் பணி முடிவுக்கு வந்து விடும். ஆனால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகும், தலைவர் உபாலி அபயரத்தின தனியாக ஆணைக்குழுவிற்கு வந்தார். மற்ற உறுப்பினர்கள் அவருடன் வரவில்லை. அறிக்கையின் நகல்களை அச்சிட்டு முறைப்பாட்டாளர்களிடம் ஒப்படைத்தார். ஆணைக்குழு தவறவிட்டிருக்கலாம் எனவே விடுபட்டதைச் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். பின்னர் 2021 ஜனவரி 7 ஆம் தேதி ஆணையம் மற்றொரு அறிக்கையை முன்வைத்தது!

குற்றம் செய்தவர்களை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி கேள்வி கேட்பதுதான் சட்டமா அதிபரின் கடமை. ஆனால் ஒரு முறை ஆணையம் சட்டமா அதிபரின் அலுவலகத்தைச் சேர்ந்த சட்டத்தரணி ஜனக பண்டார என்பவரை அழைத்து அவரைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த முயற்சி செய்தது. நல்ல காலமாக சட்டமா அதிபர் ஆணையம் அனுப்பிய அழைப்பை நிராகரித்து விட்டார்.

ஆணையத்தின் பரிந்துரைகளை பிரதமர் தீர்மான உருவத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். அதில் 78 வழக்கு விசாரணையை நிறுத்துமாறு கேட்கப்பட்டிருக்கிறது. இதில் 8 வழக்குகள் பற்றிய விசாரணை உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது. திசநாயக்க சபையில் அந்த வழக்குகளின் பட்டியலை படித்துக் காட்டினார்.

உதயங்க வீரதுங்க மற்றும் கோட்டாபய இராசபக்ச (மிக் விமானக் கொள்வனவுஸ

உதயங்க வீரதுங்கா மீதான வழக்கு கோட்டாபய இராசபக்சவுக்கும் எதிரான வழக்கு என்பதை நினைவில் கொள்ளுங்கள். வீரதுங்கா மீது இரண்டு வழக்குகள் இருப்பதாக திசநாயக்க கூறினார். ஒன்று, உருசியாவின் இலங்கையின் தூதராக இருந்த காலத்தில் ஒரு இளைஞன் கொலை செய்யப்பட்ட வழக்கு. இரண்டாவது வழக்கு மிக் ஜெட் போர் விமானம் கொள்முதல் செய்ததில் இடம்பெற்ற ஊழல். அந்த விமானத்தின் விலை அ.டொலர் 7 மில்லியன், ஆனால் சிறிலங்கா அரசு அ.டொலர் 14 மில்லியனைக் கொடுத்தது!

இதுவரை எந்த நீதிமன்றமும் கோட்டாபய இராசபக்சவை அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்கவில்லை. அவர் சனாதிபதியாக வந்தவுடன் நீதிமன்றம் சென்று "நான் இப்போது நாட்டின் சனாதிபதி. எனக்கு சட்ட விலக்களிப்பு **(immunity)** இருக்கிறது. எனவே வழக்கை முடிக்கவும்" எனக் கேட்டார். இப்படியான திருடர் கூட்டந்தான் இந்த நாட்டை ஆளுகிறது!

இந்த சட்ட விலக்களிப்பு இன்னுமொரு வழக்கில் இருந்து விடுபட சனாதிபதி கோட்டாபய இராசபக்ச உபயோகித்துள்ளார். அந்த வழக்கு கோட்டாபய

**கனடா நக்கீரன்**

இராசபக்சவின் தந்தையாருக்கு ஒரு நினைவு மண்டபம் மற்றும் அருங்காட்சியகம் நிறுவியது பற்றியது. திசநாயக்கா இதனை சுருக்கமாகக் குறிப்பிட்டார். விரிவாகக் குறிப்பிடவில்லை. அதன் வரலாறு பின்வருமாறு.

மெடமுலான, வீரபிட்டியாவில் இராசபச்ச சகோதரர்களின் தந்தையான டி.ஏ. இராசபச்சவுக்கு நினைவு மண்டபம் மற்றும் அருங்காட்சியகம் நிர்மாணிப்பது தொடர்பாக கருவூலத்தில் இருந்து ரூ 47.9 மில்லியன் தொகையை முறைகேடாகப் பயன்படுத்தியதாக கோட்டபயா மற்றும் 6 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது. மொத்தச் செலவு ரூபா 81.3 மில்லியன் ஆகும். அசல் மதிப்பீடு ரூபா 33.9 மில்லியனாக இருந்தது, ஆனால் மதிப்பீட்டிற்கு மேலாக விலையுயர்ந்த பொருட்களைப் பயன்படுத்த கோட்டாபயா விரும்பியதால் செலவு மதிப்பீடுகள் அதிகரித்தன.

எடுத்துக்காட்டாக அசல் திட்டத்தின் படி நடைபாதைக்கு சாதாரண கற்களைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அந்த நடைபாதை கருங்கற்களால் கற்களால் அமைக்கப்பட்டது. இந்தக் நினைவு மண்டபத்தை எழுப்புவதற்கு அரசாங்க வளங்கள் பயன்படுத்தப்பட்டது. காணியும் மகாவலி அபிவிருத்தி சபையிடம் இருந்து 99 ஆண்டு குத்தகைக்கு எடுக்கப்பட்டது. இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தால் கட்டப்பட்டது. கட்டிடத்தை சிறிலங்கா கடற்பரை கட்டி முடித்தது. இந்த இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் நகர அபிவிருத்தி சபையின் கீழ் இயங்கியது. அபிவிருத்தி சபையின் செயலாளராக சாட்சாத் கோட்டாபய இராசபக்சா இருந்தார்! அவர் சனா-திபதியானதும் அவருக்கு இருக்கும் சட்ட விலக்கைப் பயன்படுத்தி வழக்கை முடித்துக் கொண்டார். ரூபா 47.9 மில்லியன் இராசபக்ச குடும்பத்தைப் பொறுத்தளவில் சில்லறைக் காசு என்பது தெரிந்ததே. **(https://www.colombotelegraph.com/index.php/da-rajapaksa-foundation-owes-slrdc-rs-47-million-for-rajapaksa-memorial/)**

வோஷிங்டன் டி.சி.யில் உள்ள இலங்கைத் தூதரகத்தை விலைக்கு வாங்கிய வழக்கில் மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஜாலியா விக்ரமசூரியா (மகிந்த இராசபக்சவின் மைத்துனர்) கைது செய்யப்பட்டார். அவர் உயர்நீதிமன்றத்தில் பிணை பெற்றார், பின்னர் நாட்டை வி ட்டுத் தப்பி ஓடிவிட்டார். அவரது முறைப்பாடும் இந்த ஆணையத்தின் முன் வைக்கப்பட்டது.

"இந்த ஆணைக்குழு முன் விக்ரமசூரியா ஒருமுறை தன்னும் தோன்றவில்லை. ஆனால் ஆணைக்குழு அவரை விடுவித்து, அவர் மீதான குற்றச்சாட்டுகளை கைவிடுமாறு கோரியுள்ளது என திசநாயக்க குற்றம் சாட்டினார்.

யோஷிதா இராசபக்ச எதிரான பணச் சலவை வழக்கு:

யோஷிதா இராசபக்ச மீது பணம் சலவை செய்தல் தொடபாக குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அவர் இலங்கைக் கடற்படையில் இரண்டாம் லெப்டி. பணியாற்றியபோது **Carlton Sports Network** நிறுவனத்திற்கு ரூபா.500 மில்லியனுக்கும் அதிகமான சொத்துக்களை வாங்கிய குற்றச்சாட்டை எதிர்கொண்டார். வர் நீதிமன்றத்தில் நான் மெடமுலானவில் இருக்கும் எனது வயல் காணிகளை விற்றேன். மகிந்த இராசபக்ச ஒரு தொகை பணம் தந்தார். கடற்படை சம்பளம் தந்தது. டெயிசி ஆச்சி எனக்கு இரத்தினக் கற்கள் தந்தார் என்று கணக்குக் காட்டினார். அது போதும் அவர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்.

பசில் இராசபக்ச மீதான பணம் சலவை வழக்குகள் என்ன?

ஒரு வழக்கு மல்வானாவில் உள்ள வீட்டைப் பற்றியது. மல்வானாவில் உள்ள சொத்து மற்றும் வீட்டின் மதிப்பு ரூபா 200 மில்லியனுக்கும் அதிகமாகும்.

"நடந்துகொண்டிருக்கும் வழக்கு அந்தச் சொத்தை வாங்குவதற்கும் அந்த வீட்டைக் கட்டுவதற்கும் அவர் எவ்வாறு நிதியைப் பெற்றார் என்பது பற்றியது. பசில் இராசபக்ச வீடு தன்னுடையதல்ல என்று கூறுகிறார். ஆனால் முடிதா ஜெயகோடி, கட்டிட வடிவமைப்பாளர் வீட்டிற்கான திட்டங்களை வரைவதில் புஷ்பா ஈடுபட்டிருந்தார்.

அவர் அடிக்கல் நாட்டும் விழாவில் இருந்தார் என்று கூறுகிறார். கதவு மற்றும் சன்னல் பிரேம்கள் போடப்பட்டபோது ப்'பா இருந்ததாக அவர் கூறுகிறார். ஆனால் வீடு தன்னுடையது அல்ல என்று பசில் கூறுகிறார்!

தனது 26 நிமிடப் பேச்சில் இராசபக்ச குடும்பத்தை திசநாயக்க அக்குவேறு ஆணிவேறாக பிய்த்து உதறினார். அவரது முழுப் பேச்சை **https://www.colombotelegraph.com/index.php/no-court-of-law-has-proclaimed-nandasena-gotabaya-rajapaksas-innocence-anura-flays-rajapaksa-family-for-corruption/** என்ற இணையதள முகவரியில் படித்துக் கொள்ளலாம்.

பண மோசடி, பணச் சலவை, ஊழல் என ஊரைக் கொள்ளை அடித்து உலையில் போட்ட இராசபக்ச குடும்பம் தெருவில் எப்படி வேட்டி கட்டிக் கொண்டு திரிகிறது என்பது வியப்பாக இருக்கிறது!



# நினைவு கூர்தலை எப்படி மக்கள் மயப்படுத்துவது?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

**சி**ல வாரங்களுக்கு முன் கத்தோலிக்க திருச்சபையின் யாழ்மறைமாவட்ட குருமுதல்வர் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார். மே 18ஐ நினைவு கூர்வதற்கு அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்பதே அது. கத்தோலிக்க திருச்சபையின் உயர்நிலைக் குருவானவர் ஒருவர் அவ்வாறு தெரிவித்திருப்பது முக்கியமானது. அதுவும் நினைவு கூர்தலுக்கான மாதம் நெருங்கி வரும் ஒரு காலகட்டத்தில் அவர் அதை கூறியிருந்தார். எனவே அது கூறப்பட்ட காலம் கூறியது யார் என்பவற்றை தொகுத்துப் பார்த்தால் அக்கூற்றுக்கு முக்கியத்துவம் உண்டு.

ஏனெனில் கடந்த ஆண்டும் நினைவு கூர்த்லை எப்படி மக்கள் மயப்படுத்தலாம் என்று சிந்தித்த பொழுது மத நிறுவனங்கள் போதிய அளவுக்கு ஒத்துழைக்கவில்லை. அதை வேறுவிதமாகச் சொன்னால் மத நிறுவனங்களையும் அரசியல் கட்சிகளையும் பொருத்தமான விதங்களில் கடந்த ஆண்டு ஒருங்கிணைக்க முடியவில்லை என்றும் சொல்லலாம்.

அவ்வாறு ஒருங்கிணைக்கப்படாத ஒரு பின்னணியில்தான் கடந்த ஆண்டு நினைவு கூர்தலை மக்கள் மயப்படுத்த முடியவில்லை. இந்த ஆண்டும் தாயகத்தில் மக்கள் மயப்படாத ஒரு நினைவு கூர்தலுக்கான வாய்ப்புக்கள் அதிகமாக தெரிவதால் இக்கட்டுரை முன்கூட்டியே அது தொடர்பில் கருத்துருவாக்கத்தை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு எழுதப்படுகிறது.

முதலாவதாக நினைவு கூர்தலை மக்கள் மயப்படுத்த வேண்டும். இரண்டாவதாக அதை அனைத்துலக மயப்படுத்த வேண்டும். ஏனென்றால் அது எவ்வளவுக்கு எவ்வளவு மக்கள் மயப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது கூட்டுத்துக்கத்தை கூட்டு அரசியல் ஆக்கசக்தியாக மாற்றும். அந்த அரசியல் ஆக்க சக்திதான் தமிழ் மக்கள் தமது நீதியை பெறுவதற்கான ஒரு போராட்டத்தின் பிரதான உந்து விசையாக அமையும். அதேபோல அது எவ்வளவுக்கு எவ்வளவு அனைத்துலக மயப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு தமிழ் மக்களுக்கான நீதியை பெறத் தேவையான அனைத்துலக அபிப்பிராயங்களை அது கனியவைக்கும். எனவே மே 18ஐ ஆகக்கூடியபட்சம் மக்கள் மயப்படுத்த வேண்டும். ஆகக்கூடியபட்சம் அனைத்துலக மயப்படுத்த வேண்டும்.

அவ்வாறு மக்கள் பயன்படுத்துவது என்றால் அதை இப்போதிருக்கும் நிலைமையில் அதாவது Covid-19 பெருந்சுற்றுச்சூழலில் அதிலும் குறிப்பாக சிங்கள பௌத்தபெருந் தேசிய வாதத்துக்கு தலைமைதாங்கும் ஒரு அரசாங்கம் ஏனைய தேசிய இனங்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கும் ஒரு காலகட்டத்தில் அரசாங்கத்தால் தடை செய்யப்பட முடியாத ஒரு நினைவு கூர்தலாக அதை மாற்றவேண்டும். அவ்வாறு மாற்றுவது என்றால் அதை ஆகக்கூடியபட்சம் மக்கள் மயப்படுத்தவேண்டும். ஏனென்றால் இப்போதிருக்கும் பெரும் தொற்றுச்சூழலில் மக்கள் பெருந்திரளாக கூடுவது கடினம். அது சட்ட விரோதமானதாகவும் இருக்கும்.

இந்நிலையில் மக்களை அதிகம் ஓரிடத்தில் திரட்டாமல் எப்படி ஒரு நினைவு கூர்தலை மக்கள் மயப்படுத்தலாம்? அல்லது அதை எப்படி பெரும்பாலான தமிழ் வீடுகளுக்குள் கொண்டு போகலாம்? என்று சிந்திக்க வேண்டும். அவ்வாறு சிந்தித்து நினைவு கூர்தலை மக்கள் மயப்படுத்தும்போது தான் அது தடை செய்யப்பட முடியாத ஒரு நினைவு கூர்தலாக மாறும்.

குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் ஒரு சில வீடுகளின் வெளி மதில்களில் மட்டும் சுட்டிகளை எரித்தால் அந்த வீடுகளை அரசாங்கம் இலகுவாக அடையாளம் காணும். அதனால் அந்த வீட்டுக்காரர்களுக்கு ஆபத்து உண்டாகலாம். மாறாக எல்லா வீடுகளிலும் சுட்டிகள் எரிந்தால் யாரைப்பிடிப்பது? யாரை விசாரிப்பது? இதுதான் மக்கள் மயப்பட்டபோராட்டங்களின் மகத்துவம். எல்லா வீடுகளிலும் வெளி மதில்களில் சுட்டிகள் ஏற்றப்பட்டால் எல்லாரையும் தூக்கி கொண்டு போய் அடைக்க முடியாது. எனவே தடை செய்யப்பட முடியாத ஒரு நினைவு கூர்தல் எனப்படுவது அது எந்ளவுக்கு மக்கள் மயப்படுகிறது என்பதில் தான் தங்கியிருக்கிறது.

இவ்வாறு நினைவு கூர்தலை மக்கள் மயப்படுத்தும்போது இப்போதிருக்கும் நிலைமைகளின்படி அதாவது முதலாவதாக பெருந்தொற்றுச் சூழல். இரண்டாவதாக சிங்கள - பௌத்த உணர்வுகளுக்கு தலைமை தாங்கும் ஓர் அரசாங்கம். மூன்றாவதாக ஒரு பொருத்தமான மக்கள் மயப்பட்டபொதுக் கட்டமைப்பு இல்லாத வெற்றிடம் இவற்றின் பின்னணியில் அவ்வாறு நினைவு கூர்தலை மக்கள் மையப்படுத்துவது என்று சொன்னால் அதற்கு ஏற்கனவே நிறுவனமயப் பட்டிருக்கும் அரசியல் கட்சிகளையும் மத



நிறுவனங்களையும் ஒருங்கிணைக்க வேண்டிய தேவை உண்டு. கடந்த ஆண்டும் இவ்வாறு சிந்திக்க பட்டது. எனினும் அது வெற்றி பெறவில்லை.

குறிப்பாக யாழ் சர்வமதப் பேரவையால் ஒரு முயற்சி முன்னெடுக்கப்பட்டது. குறிப்பிட்ட நாளில் ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் ஆலயங்களில் மணிகளை ஒலிக்கச் செய்வது என்று கேட்கப்பட்டது. பெரும்பாலான மத நிறுவனங்கள் அதற்கு சம்மதித்தன. இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட கத்தோலிக்க குருமுதல்வர் அது தொடர்பில் ஒரு ஆலோசனையை முன்வைத்தார். அதாவது பெரும்பாலான கிறிஸ்தவ தேவாலயங்களில் மாலை ஆறு மணிக்கு அடிக்கப்படும் திருந்தாதி மணியை சற்றுப் பிந்தி அடிக்கலாமா என்று சிந்திக்கப்பட்டது. ஆனால் எல்லா மத நிறுவனங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டபடி குறிப்பிட்ட நேரத்தில் பெரும்பாலான ஆலயங்களில் மணிகள் ஒலிக்கப்படவில்லை. மிகச் சில ஆலயங்களில் தான் சுட்டி விளக்குகள் ஏற்றப்பட்டன.

ஏன் இப்படி நடந்தது? ஏனெனில் மத நிறுவனங்களை பொருத்தமான விதங்களில் ஒருங்கிணைக்க ஒரு கட்டமைப்பு அப்போது இருக்கவில்லை. இப்பொழுதும் இல்லைதான். இவ்வாறான ஒரு பின்னணியில் மேற்படி குரு முதல்வரின் கோரிக்கையை ஒரு தொடக்கமாக எடுத்துக் கொண்டு தமிழ்த் தரப்பு எவ்வாறு மத நிறுவனங்களை ஒருங்கிணைக்கலாம் என்று சிந்திக்கலாம். இதுவிடயத்தில் ஆறு மணிக்குப்பின் அதாவது ஊர் ஓரளவுக்கு அடங்க தொடங்கும் பொழுது மணிகளை ஒலிப்பதும் சுடர்களை ஏற்றுவதும் பொருத்தமாக இருக்கும். ஆறு மணிக்கு ஊர் அடங்காது. அப்பொழுது வேலை முடிந்து வீடு திரும்பும் வாகனங்களின் இரைச்சல் அதிகமாக இருக்கும். அப்படிப் பட்டதொரு நேரத்தில் மணிகளை ஒலித்தால் அவை துலக்கமாக கேட்காது. அதேபோல செக்கல் பொழுதில் சுடரை ஏற்றினாலும் அது துலக்கமாக ஒளிராது. எனவே இருளத் தொடங்கியபின் அதாவது ஏறக்குறைய ஏழு மணி அளவில் வீதிகளில் வாகனங்களின் போக்குவரத்து குறைந்து விடும். அன்றாட வாழ்வின் பகல் நேர இரைச்சல்களும் அடங்கிவிடும். ஊர் ஓரளவுக்கு அடங்கத் தொடங்கும். அந்தவேளையில் மணிகளை ஒலித்தால் இரவின் அமைதியில் அவை சன்னமாகக்கேட்கும். அந்த இருளில் சுடர்களை ஏற்றினால் அது துலக்கமாகத் தெரியும். எனவே இது தொடர்பில் அப்படி ஒரு நேரத்தை தெரிவு செய்து சுடர்களை ஏற்றலாம் மணிகளை ஒலிக்க கேட்கலாம். அவ்வாறு எல்லா ஆலயங்களிலும் மணிகள் ஒலிக்க விடப்பட்டால் அது தமிழ் கூட்டு உளவியலை ஒரு பண்பாட்டுத்தளத்தில் பொது உணர்ச்சிப்புள்ளியில் இணைக்கும். இது முதலாவது.

இரண்டாவது, இவ்வாறு ஒரு பொது உளவியலை கட்டியெழுப்பும் விடயத்தில் ஏற்கனவே நிறுவன மயப்பட்டிருக்கும் அரசியல் கட்சிகளின் ஒருங்கிணைப்பை பெறலாம்.அரசியல் கட்சிகள் தமது கிராமமட்டக் கிளை அமைப்புகள் ஊடாக அதை எப்படி மக்கள் மயப்படுத்தலாம் என்று முயற்சிக்கலாம். கிராமங்களில் மணிகளை ஒலிக்கச் செய்வதிலும் அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறலாம்.குறிப்பாக அரசியல் கட்சிகளின் தலைவர்களும் மக்கள் பிரதிநிதிகளும் துணிந்து முன்வந்து தங்கள் அலுவலகங்களிலும் வீடுகளிலும் வெளிப்படையாக துணிச்சலாக முன்னுதாரணமாக சுடர்களை ஏற்ற வேண்டும். அப்பொழுதுதான் அது ஒரு துணிச்சலான முன்னுதாரணமாக இருக்கும். அத்துணிச்சலான முன்னுதாரணத்தை பின்பற்றி மக்களும் தங்கள் வீடுகளில் சுடர்களை ஏற்றத்துணிவார்கள். மிகக் குறிப்பாக நினைவு கூர்தலின் விளைவுகளை தமக்கு வாக்குகளாக மடைமாற்றம் செய்ய முயலும் அரசியல்வாதிகளுக்கு இதில் கூடுதல் பொறுப்பு உண்டு. தலைவர்கள் ரிஸ்க் எடுத்தால்தான் மக்களும் ரிஸ்க் எடுப்பார்கள். எனவே தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பை இதில் முழுஅளவிற்கு கேட்கவேண்டும். நினைவுகூர்தலை மக்கள் மயப்படுத்த அவர்களுடைய ஒத்துழைப்பு இன்றியமையாதது.

பல்கலைக்கழகங்கள் இப்பொழுது முழு அளவுக்கு இயங்குவதில்லை. எனவே இது விடயத்தில் மாணவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதில் அடிப்படையான பௌதீகவரையறைகள் உண்டு. கூட்டிக்கழித்துப் பார்த்தால் இப்போதிருக்கும் சூழலில் நினைவுகூர்தலை மக்கள் மயபடுத்துவதற்கு அரசியல் கட்சிகளும் மத நிறுவனங்களும்தான் ஆகக் கூடிய பட்சம் உதவமுடியும். அவ்வாறு நினைவுகூர்தலை மக்கள் மயப்படுத்தும்போது அங்கே கூட்டுத்துக்கத்தை ஆகக்கூடியபட்சம் கூட்டு ஆவேசமாக மாற்றலாம். நினைவு கூர்தல் எனப்படுவது துக்கத்தை அழுது கடக்கும் ஒரு நிகழ்வு மட்டும் அல்ல. மாறாக அது ஓர் உணர்ச்சிப்புள்ளியில் தமிழ் மக்களை ஒரு தேசமாக திரட்டுகிறது. தமிழ் மக்களை ஒரு தேசமாகதிரட்டுவது என்பது ஒரு மையமான இடத்தில் ஆயிரக்கணக்கானவர்களை ஒன்று திரட்டுவது மட்டுமல்ல. அதற்குமப்பால், நினைவு கூர்தலை பெரும்பாலான தமிழ் வீடுகளை நோக்கி எப்படி விரிவுபடுத்தலாம் ˙மக்கள் மயப்படுத்தலாம் என்று சிந்திப்பதே.

கார்த்திகை விளக்கீட்டை தமிழ் மக்கள் எப்படி அனுஷ்டிக்கிறார்களோ அதுபோல சித்ரா பவுர்ணமி, ஆடி அமாவாசை போன்ற விரத நாட்களை எப்படி அனுஷ்டிக்கிறார்களோ அதுபோல கத்தோலிக்கர்கள் தமது அனைத்து மரித்தோருக்குமான நாளை எப்படி அனுஷ்டிக்கிறார்களோ அதுபோல நினைவு கூர்தலையும் ஆகக் கூடிய பட்சம் தமிழ் வீடுகளை நோக்கி மக்கள் மயப்படுத்த வேண்டும். ஒரு சடங்காக அல்ல. ஒரு வாழ்க்கை முறையாக. தமிழ்த் தேசிய அரசியலில் பிரிக்கப்படாத ஒரு பகுதியாக அதை மாற்றவேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு அது மக்கள் மயப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது மக்களால் தன்னியல்பாக, தன்னார்வமாக, எந்தநிர்ப்பந்தமும் இன்றி பயிலப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது ஒரு மக்கள்மயப்பட்ட நினைவு கூர்ததலாக அமையும். அவ்வாறு மக்கள் மயப்பட்ட ஒரு நினைவு கூர்தல்தான் கூட்டுத்துக்கத்தை கூட்டு அரசியல் ஆக்கசக்தியாக மாற்றும். அந்த அரசியல் ஆக்க சக்திதான் தமிழ் மக்களுக்கான நீதியைப் பெறுவதற்கான போராட்டத்தின் பிரதான உந்து விசையாக அமையும்.

# ஐ நா தீர்மானம்: அடுத்து என்ன? மனித உரிமை செயல்பாட்டாளர்களுக்கான கையேடு வெளியானது

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் சுயாதீனப் பொறிமுறை

ஜஸ்மின் சூக்கா
ஏப்ரில் 2021

இலங்கைக்கு எதிராக இந்தாண்டு ஐ நா மனித உரிமைகள் பேரவை-யில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை செயல்படுத்துவது தொடர்பிலான விளக்கக் கையேடு ஒன்றை உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்திட்டம் (ITJP) வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட அந்த தீர்மானத்தில், இலங்கையில் போர்க்காலத்தில் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமாக சாட்சியங்களை சேகரித்தில், எல்லைகளின்றி சாட்சியங்களின் அடிப்படையில் வழக்குத் தொடுக்க வழி போன்றவற்றை ஐ நா அங்கீகரித்திருந்தது.

அதேவேளை கடந்த காலங்களில் நடைபெற்ற குற்றச்செயல்களை விசாரித்து, குற்றமிழைத்தவர்களை நீதியின் முன் நிறுத்தும் பொறுப்பு அடிப்படையில் இலங்கைக்கே உள்ளது என்றாலும், அதை இலங்கைச் செய்யவில்லை என்பதை 2021ஆம் ஆண்டின் இந்தத் தீர்மானம் ஏற்று அங்கீகரிக்கிறது.

ஆனால் இலங்கை அதைச் செய்வதற்குச் சித்தமாக இல்லை என்பதால் சர்வதேச சமூகம் அந்தப் பொறுப்பை கையிலெடுக்க வேண்டியதாயிற்று.

மேலும், பொறுப்புக்கூறல் மற்றும் இடைக்கால நீதிக்கான உள்நாட்டுப் பொறிமுறைகள் தோல்வியடைந்துவிட்டதையும் ஐ நாவின் இந்தத் தீர்மானம் அங்கீகரிக்கிறது.







எனவே இதற்கான சுயதீன பொறிமுறை ஒன்று அவசியமாகிறது. எனினும் அந்தப் பொறிமுறையை எப்படிக் கட்டமைத்து நடைமுறைப்படுத்தி சாட்சியங்களை சேகரித்து அடுத்த கட்டத்திற்கு இந்தப் பொறுப்புக்கூறலை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பது தொடர்பில், பல்தரப்பில் தெளிவின்மை நிலவுகிறது என்று ஐவுதீ சுட்டிக்காட்டியுள்ளது.

அந்தப் புரிதலை ஏற்படுத்தி அதற்கான வழிமுறைகளைத் தெளிவாக்க வேண்டும் என்ற நோக்கில் இந்தக் கையேடு வெளியிடப்பட்டுள்ளதாக யாஸ்மின் சூக்கா தலைமையிலான அந்த அமைப்பு கூறியுள்ளது.

இந்தச் சுயாதீனப் பொறிமுறையானது ஆதாரங்கள் மற்றும் சாட்சியங்களை கவனமாக சேகரித்து அதை பாதுகாத்து பராமரிப்பதை உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்று ITJP அறிவுறுத்தியுள்ளது. அந்த வழிமுறை டிஜிட்டல் முறையில் இருக்க வேண்டிய அவசியத்தை அந்த அமைப்பின் கையேடு வலியுறுத்துகிறது.

மேலும் சிவில் சமூக அமைப்புகளின் தொழில்நுட்ப ஆற்றலை கட்டியெழுப்பவதாக இருப்பது மிகவும் முக்கியமானது என்று யாஸ்மின் சூக்கா வெளியிட்டுள்ள கையேடு கூறுகிறது.

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்தக் கையேட்டை இங்கே காணலாம். https://itjpsl.com/assets/Tamil-translation-of-Tool_kit-final.pdf

MONEY PROBLEMS?™
ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

உங்களைக் கேளுங்கள்?



- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E | 800-120 Eglinton Ave. E | 306-1280 Finch Ave. W | 110-93 Dundas Street E. | 201-7990 Kennedy Rd. South, |
| Scarborough, ON, M1S 1V3 | Toronto, ON, M4P 1E2 | North York, ON, M3J 3K6 | Mississauga, ON, L5A 1W7 | Brampton, Ontario, L6W 0B3 |




Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced Credit Counsellor

# தந்தை செல்வா தீர்க்க தரிசனம் மிக்க அரசியல் தலைவர்

**- கவிஞர் தீபச்செல்வன்**



இன்றுடன் தந்தை செல்வா காலமாகி நாற்பத்து நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. 1977 ஏப்ரல் 26 அன்று காலமான தந்தை செல்வாவின் நினைவுதினம் இன்றாகும். அவர் காலமாகி நான்கு தசாப்தங்கள் கடந்துவிட்டன. தந்தை செல்வா என்று ஈழத் தமிழ் மக்களால் அன்போடு அழைக்கப்படும் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் ஒரு அரசியல்வாதி மாத்திரமல்ல. அவர் பிரசித்தமான ஒரு வழக்கறிஞரும் ஆவார். யாழ்ப்பாணம் தொல்புரத்தை பூர்வீகமாகக் கொண்ட செல்வநாயகத்தின் தந்தை ஒரு ஆசிரியராக இருந்து பின்னர் மலேசியாவுக்கு புலம்பெயர்ந்த காலத்தில் தந்தை செல்வா மலேசியாவின் ஈப்போ நகரில் பிறந்தார்.

அகில இலங்கை காங்கிரஸ் கட்சியின் மூலம் அரசியலுக்குள் பிரவேசித்த தந்தை செல்வா, சிலோனின் சுதந்திரத்தின் பின்னர் அரசாங்கத்தில் இணைவது, இந்திய வம்சாவளியினரின் குடியுரிமை பறித்தல் போன்ற காரணங்களால் அகில இலங்கை காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறி இலங்கை தமிழரசுகச் கட்சியை அமைத்தார். தந்தை செல்வா இலங்கையில் எழுந்த இனப்பிரச்சினைக்கு சுயாட்சி முறையினை தீர்வாகக் கோரினார்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஈழத் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகள் பேரினவாத தரப்புக்களால் முன்னெடுக்கப்பட்டன. தமிழர்களின் தாயகத்தில் பலவந்த குடியேற்றங்கள் தொடங்கப்பட்டன. அத்துடன் தனிச் சிங்களச் சட்டம் போன்ற அணுகுமுறைகள் தமிழ் மக்களை மிகவும் பாதித்தன. தமிழ் மக்கள் அரசியல் உரிமையற்றவர்களாக, அரசி-யல் அதிகாரம் இழந்தவர்களாக மாற்றப்பட்டனர். இக் காலகட்டத்தில் தந்தை செல்வநாயகம் ஜனநாயக ரீதியலான போராட்டத்தை தொடங்கினார். ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் உரிமைக்காக ஜனநாயக ரீதியாக தீவிரமாகக் குரல் கொடுத்தார்.

சிங்களப் பேரினவாதத்திற்கு எதிரான எதிர்ப்பை கண்டு அதனை சமாதானப்படுத்தும் விதமாக தந்தை செல்வநாயகத்துடன் முன்னாள் பிரதமர் பண்டார நாயக்க ஒப்பந்தத்தில் ஈடுபட்டார். அது பண்டா - செல்வா ஒப்பந்தம் எனப்டுகின்றது. இதனை தீவிர இனவாதிகளான ஜே.ஆர். ஜெயவர்த்தன மற்றும் பௌத்த பிக்குகளின் கடுமையான பேரினவாத எதிர்ப்பு காரணமாக கைவிடப்பட்டது. தந்தை செல்வாவின் தொடர் போராட்டத்தை அடுத்து டட்லி - செல்வா ஒப்பந்தமும் செய்யப்பட்டது. தமிழர்களுடன் செய்யப்பட்ட எல்லா ஒப்பந்தங்களையும் சிங்களப் பேரினவாதிகள் கிழித்தெறிய வைத்தனர்.

ஆனாலும் தந்தை செல்வாவின் அறப்போராட்டங்கள் அன்றைய காலத்து சிங்களத் தலைவர்களை சுயாட்சிமுறையை அங்கீகரிக்கத் தூண்டின. குறிப்பாக பண்டாரநாயக்க இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டிமுறையினை ஏற்றுக்கொண்டார். அன்றைய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தியிருந்தால் இன்று, ஆயுதப் போராட்டம் உருவாகியிருக்காது என்றும், தமிழ் இளைஞர்கள் துப்பாக்கி ஏந்தியிருக்க மாட்டார்கள் என்றும் பிரபாகரன் தோன்றியிருக்க மாட்டார் என்றும் இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறுகிறார்.

அது மாத்திரமல்ல, சிங்கள மக்கள் மகிழச்சியாக இருக்க வேண்டும் என்றால் தமிழ் மக்களின் உரிமையை அவர்களிடம் கையளிக்க வேண்டும் என்றும் இன்னொரு யுத்தத்தை தடுக்க இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்றும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுகிறார். இலங்கையில் ஆள்பவர்கள் அல்லது தலைவர்கள் தமிழர்களுக்கான தீர்வு விடயத்தை வாய்ப்பேச்சளவில் ஏற்றுக்கொண்டாலும் பேரினவாதிகளை கடந்து நடைமுறைப்படுத்தாததே வர-லாறு. இதனால் இறுதியில் அவர்களும் பேரினவாதிகளாகின்றனர். இதனால் ஈழத் தமிழ் மக்கள் மேலும் மேலும் ஒடுக்கி அழிக்கப்பட்டார்கள்.

தந்தை செல்வா அவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் யாவும் தோல்வியில் முடிந்ததையடுத்து 1976இல் அனைத்து தமிழ் கட்சிகளும் தமிழர் விடுதலைக் கூட்டணிஎன்ற பெயரில் தனித் தமிழீழத் தீர்மானமான வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு வந்தன. வடகிழக்கு பாரம்பரிய தாயகத்தில் இறைமை கொண்ட தன்னாட்சி அரசு அமைப்பதென தீர்மானிக்கப்பட்டது. அதற்கு அடுத்த வருடத்தில் தந்தை செல்வா காலமானார். அவரது இழப்பு ஈழத் தமிழ் மக்களுக்கு பேரிழப்பு. அறப்போராட்டங்கள் தோல்வியடைந்த நிலையில், தன்னுடைய அடுத்த தலைமுறை ஆயுதம் ஏந்திப் போராடும் என்று தந்தை செல்வா குறிப்பிட்டார்.

அதைப்போலவே அதற்குப் பின் வந்த காலத்தில் தமிழ் இளைஞர்கள் ஈழத் தமிழ் மக்களின் உரிமை வேண்டி ஆயுதம் ஏந்தினர். அதற்குப் பின் வந்த கால தமிழ் மிதவாத அரசியல் சூழலும் ஆயுதப் போராட்டத்தை ஏற்படுத்தியத. தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டம் ஒன்றின் ஊடாக சர்வதேச கவனத்தை ஈர்த்து இலங்கை அரசுடன் ஒரு இராணுவ பலத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியது. தமிழ் மக்களின் உரிமையை வழங்காமல் அந்த ஆயுதப் போராட்டத்தை எவ்வாறு அழிப்பது என்று இலங்கை அரசு தனது தீவிரச் செயற்பாடுகளைத் தொடர்ந்தது.

ஆயுதப் போராட்டத்தை அழிப்பதற்காக மாபெரும் இனப்படுகொலை ஒன்றை நிகழ்த்தி தமிழ் ஈழ இனம் மிகப் பெரும் காயத்திற்கு உள்ளாகி உள்ள நிலையில் தந்தை செல்வாவின் நினைவுநாள் மிகவும் உண்மையாக உணரப்படவேண்டிய, நினைவுகூறப்படவேண்டிய நாளாகும். தந்தை செல்வா போன்ற தலைவர்களை புரிந்துகொள்வதன் ஊடாக அவர்களின் குரலுக்கு செவி சாய்ப்பதன் ஊடாக வரலாற்றை வேறுவிதமாக எழுதியிருக்கலாம் என்ற அனுபவத்தை இந்த நாள் உணர்த்துகிறது. தந்தை செல்வாவின் சரித்திரம் அதனை உணர்த்துகிறது.

முள்ளிவாய்க்கால் பேரழிவு யுத்தம் முடிந்தபோது தமிழ் ஈழ மக்கள் இனப்பிரச்சனையின் ஆரம்பத்திற்கு வந்திருப்பதைப்போலிருந்தது. இலங்கையின் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டதன் பின்னர் தந்தை செல்வா ஒப்பந்தங்களின் நியாங்களை ஏற்றுக்கொள்வதைப்போல் ஒரு காலம் தென்படுகிறது. இப்போதும் வரலாற்றை நியாயமாக அணுகும் சூழல் நில-வுகிறது. தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தியதில் இருக்கும் நியாயத்தை ஏற்பதாக சொல்லும் இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் மக்கள் நியாயமாக கோரும் தீர்வை, அவர்களின் உரிமையை முன்வைப்பதுதான் உண்மையும் நீதியுமான அணுகுமுறையாகும்.

தமிழ் மக்களுக்கு நியாயமான உரிமை ஒன்றை வழங்கவேண்டும் என்பதும் அவர்களின் தாயகத்தில் ஒடுக்குமுறைகளை மேற்கொள்ளுவதை தவிர்ப்பதும் அவர்களை இன அழிப்பு செய்வதை நிறுத்துவதும் எத்தகைய நெருக்கடிகளைக் கடந்தும் பல்வெறு வடிவங்களில் தொடரும் போராட்டங்களின் ஊடாக வலியுறுத்தப்படும். தமிழ் மக்களை எத்தகைய தீர்வை எதிர்பார்க்கிறார்கள் என்றும் அவர்களின் அபிலாசை என்ன என்றும் வடகிழக்கில் ஈழத் தமிழ் மக்கள் பகிரங்கமாக கூறுவதுடன் வடக்கு மாகாண சபை போன்ற ஈழத் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சபைகளும் எடுத்துரைத்துள்ளன.

தந்தை செல்வாவின் இடையறாத போராட்டங்களும் அவரது மரணத்தின் பின்னரான நான்கு தசாப்த போராட்டமும் அதற்கு எதிரான சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளின் செயல்களும் தமிழ் மக்களுக்கு மிகவும் உறுதியான நிலையான தீர்வொன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற அவசியத்தையே உணர்த்துகின்றது. இதுபோன்ற மிதவாதக் காலம் ஒன்றில் உரிய வகையில் இனப்பிரச்சினையை தீர்க்காதவிடத்து எத்தகை விளைவுகள் எதிர்காலத்தில் உருவாகும் என்பதற்கும் இக் காலகட்டம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

வரலாற்றில் இருந்து பாடங்களைக் கற்க மறுப்பவர்கள் மீண்டும் அந்த வரலாற்றை வாழச் சபிக்கப்படுவார்கள் என்று சொல்வார்கள். சிங்களப் பேரி-னவாதிகளைப் பொறுத்தவரையில் சிறுதுரும்பையும் எதிர்பார்கள். அவர்கள் எல்லாக் காலகட்டங்களிலும் மிகவும் பெரும்பான்மையாக இருப்பார்கள். அவர்கள் தமிழீழத்தை அல்ல, பஞ்சாயத்து சபையை ஏற்படுத்தினாலும் அதனையும் எதிர்ப்பார்கள். ஈழத் தமிழ் மக்களுக்கு எதுவுமே கிடைக்கக்கூடாது என்பதும் அவர்களை ஒடுக்கி அழிக்க வேண்டும் என்பதுமே அவர்களின் நோக்கம். அத்தகையவர்களின் விருப்பங்களுக்கும் ஆதிக்கங்களுக்கும் இடமளித்து ஒட்டுமொத்த சிங்கள சமூகத்தையும் பேரினவாதிகளின் தரப்பாக மாற்றக்கூடாது என்பதையும் தந்தை செல்வாவின் சரித்திரம் உணர்த்துகிறது.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024


Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

## வீணாவின் கவிக்கணை

உன்னை கேலிபேசும்
வாய்கள் என்றும்
பேசிக்கொண்டேதான்
இருக்கும், தலையில்
விழுந்த தூசு என்று
தட்டி விட்டு போ!
பேசியோரை திரும்பி
பார்த்து உன் மதிப்பை
குறைப்பதை விட்டு,
உயரச்சென்று சாதித்து
அவரை வியர்ந்து
பார்க்கவை!



# அதிகாரம் இல்லாத கையெழுத்து; அவதிப்படும் முஸ்லிம் கவிஞர்


- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

இலங்கையில் கொடூரங்களுக்குப் பெயர்போன பொலிஸ் பிரிவு ஒன்று முஸ்லிம் கவிஞர் அஹ்னாஃப் ஜசீமை தொடர்ந்து தடுத்து வைக்க உள்ளூர் நீதிமன்றம் ஒன்று அனுமதி அளித்துள்ளது.

அஹ்னாஃப் கைது செய்யப்பட்டு ஓராண்டாகியும் அவர் மீது இன்னும் குற்றச்சாட்டுக்கள் பதியப்படவில்லை. அவர் "தன்னை ஐ எஸ் ஐ எஸ்" செயற்பாட்டாளர் என்று ஒப்புக் கொண்டு வாக்குமூலம் அளிக்கும் வரை அவரை நீதிமன்றத்தின் முன்னர் நிறுத்த மாட்டார்கள் என்று அறியப்படுகிறது. அவர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட பயங்கரவாதத்திற்கு எதிரான விசாரணைப் பிரிவு (CTID) முன்வைத்த வேண்டுகோளை கொழும்பு நீதவான் ஏற்றுக் கொண்டார். அவர் தொடர்ந்து சித்திரவதைக்கு ஆளாக்கப்படுகிறார் என்று அவரது குடும்பத்தாரும் மனித உரிமை ஆர்வலர்களும் கவலை வெளியிட்டு வருகின்றனர்.

அவரிடமிருந்து "தான் ஒரு தீவிரவாதி என்று ஒப்புதல் வாக்குமூலத்தை" பதிவு செய்வதற்கு கூடுதல் அவகாசம் வேண்டும் என்று பொலிசார் கூறுகின்றனர். அதாவது அவரை சித்திரவதை செய்து வாக்குமூலத்தை அளிக்க வைக்க நேரம் வேண்டும் என்பதே நீதிமன்றத்திற்கு பொலிசார் தெரிவித்த மறைமுக கோரிக்கையாகும்.

தமிழ் வாசகர்களிடையே பரவலாக "மன்னாரமுது" அஹ்னாஃப் என்று அறியப்படும் 26 வயதான அந்தக் கவிஞர் கடந்த ஆண்டு மே 16 அன்று தனது கவிதைகள் மூலம் இஸ்லாமியத் தீவிரவாதத்தைப் பரப்பினார் எனும் போலியான குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டார் என்று அவரைச் சார்ந்தவர்கள் கூறுகின்றனர். இதையடுத்து கொடூரமான "பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்" கீழ் அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.




அவர் எழுதிய "நவரசம்" எனும் கவிதை தொகுப்பின் சில பகுதிகள் தீவிரவாத கருத்துக்களை பரப்பும் வகையில் இருந்தன என்று பொலிஸ் தரப்பு கூறுகிறது.

அவரைக் கைது செய்த தமிழ் தெரியாத பொலிஸ் அதிகாரிகளால் அந்த கவிதை தொகுப்பிலிருந்த ஒரு வரியைக் கூட படிக்க இயலவில்லை என்று மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆனால் அந்த கவிதைத் தொகுப்பை வாசித்தவர்கள், அதில் அவர் பயங்கரவாத சிதாந்தங்களுக்கு எதிரான கருத்தையே முன் வைத்திருந்தார், பயங்கரவாதத்தின் கோர முகத்தைக் காட்டுவதற்கான ஐ எஸ் ஐ எஸ் அமைப்பின் படத்தை குறியீடாக வெளியிட்டிருந்தார் என்று கூறுகிறார்கள்.

அவரை தடுத்து வைக்கும் உத்தரவில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கையெழுத்திட்டிருந்தார். அந்த உத்தரவு செல்லாது என்று அறிவிக்கக் கோரி இப்போது நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

மன்னாரைச் சேர்ந்த தமிழாசிரியரான அவர் தாமாக முன் வந்து இஸ்லாமிய தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக வாக்குமூலம் அளிக்க தயாராகவுள்ளார் என்று நீதவானிடம் பொலிஸ் தரப்பு கூறியுள்ள ஆவணத்தின் நகல் ஜே டி எஸ் ஊடக அமைப்பிடம் உள்ளது.

"அந்த சந்தேக நபர். பேருவெல ஜாமியா நலீமியாவில் மேற்படிப்பு மாணவராக இருந்த போது, ஐ எஸ் ஐ எஸ் பயங்கரவாத அமைப்பின் நடவடிக்கையினால் ஈர்க்கப்பட்டு முஸ்லிம் தீவிரவாதத்தில் ஆர்வம் ஏற்பட்டது என்று வாக்குமூலம் அளிக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்" என்று பொலிசார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் 11 ஆம் தேதி CTID பொலிசார் "அந்த சந்தேக நபரின் வேண்டுகோளைப் பரிசீலிக்க" நீதிபதியை வேண்டினர். மேலும் "அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்ய" அவரை மேலும் தடுத்து வைக்க அனுமதி கோரினர்.

ஆனால் CTID அப்படி கூறுவதை அஹ்னாப் தரப்பு "பச்சைப் பொய்" என்று கூறி முற்றாக நிராகரிக்கிறது. தன்னை குற்றவாளி என்று சித்தரிக்கும் வகையில் ஒரு வாக்குமூலத்தை அளிக்க அவர் ஒருபோதும் வேண்டுகோள் விடுக்கவில்லை என்று அவரது சட்டத்தரணிகள் கூறுகின்றனர். அவர் அப்படியான வாக்குமூலத்தை அளிக்க தயாராகவுள்ளார் அதற்குக் கால அவகாசம் தேவை என்று கோரிய பொலிசார், நான்கு மாதங்கள் கடந்தும் அஹ்னாஃப் ஜசீமிடமிருந்து வாக்குமூலத்தைப் பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.


16 March 2021

By Registered Post / E-mail

The Chairman,
Human Rights Commission of Sri Lanka (HRCSL),
No.14, R.A. De Mel Mawatha,
Colombo 04

Dear Sir,

**HRC Case No. HRC/MN/823/2020**

**Poet Ahnaf Jazeem detained in TID's custody**

My client, Mr. Mohammadhu Jazeem Mohammadhu Ahnaf ( NID No. 952900900 V) of No.57/2, Pandarawali, Chilawathurai, Mannar, was arrested by TID on 16th May 2020 and is still detained under TID Custody, purportedly under Detention Orders.

On behalf of my client, the poet, his father made a complaint on the 22nd May 2020 bearing HRCSL number mentioned above. Upon several inquiries over the phone, I was informed that the HRC sub-office in Mannar is handling the matter. However, almost 10 months after the aforesaid complaint, HRCSL has not yet communicated to my client's father/family about the progress of the HRCSL inquiry upon the said complaint and no notices have been received by them from the HRCSL.

In the circumstances, I am instructed to request from you a written communication as to the progress in the above matter at the earliest.

I also hereby inform the HRCSL that close to ten months after the poet's arrest, upon my repeated requests to the Director of Counter Terrorism and Investigation Division (TID) since January this year, and after writing to the Inspector General of Police to obtain a consultation with my client, to prepare for his legal defence and secure his release, myself and my colleague Swasthika Arulingam, Attorney-at-law, who accompanied me, were permitted to see and talk to my client on the 08 March 2021 only for 19 minutes. The entire discussion with my client was tape-recorded and listened to by the TID officers, which is a breach of my client's right to proper legal access and is a violation of the privilege of lawyer-client communication, which is supposed to be confidential, thereby denying my client the possibilities of preparing for a proper legal defence. When objected to such tape-recording, one Mr Gunasekara (IP) who introduced himself as the acting Chief Inspector told us, "there is nothing to worry about if you have not spoken anything unnecessary and talked only about the case". I submit this is an indirect threat and attempted intimidation of lawyers who were discharging their professional duties. This was informed to the Bar Association of Sri Lanka on the next date. I request the HRCSL promptly take appropriate steps against TID in regard to this incident in the interests of justice.

It was transpired during the aforesaid open discussion with my client that he was handcuffed to a chair during the first two weeks after his arrest and thereafter time to time even when he is asleep. This has caused unbearable pain to my client, who has complained about this to TID senior officers, to no avail. He is presently ...

"அவர் பொலிசாரால் போலியாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது தொடர்பில் CTID பிரிவால் இதுவரை எவ்வித ஆதாரங்களையும் முன்வைக்க முடியவில்லை" என்று அவரது சட்டத்தரணி சஞ்சய வில்சன் ஜயசேகர ஜே டி எஸ் இடம் கூறினார்.

"அதனால் தான் பல மாதங்கள் அவரை தடுத்து வைத்துள்ள பொலிசார் பச்சைப் பொய் ஒன்றுடன் கூடிய அறிக்கையை முன்வைத்துள்ளனர். இது சட்டத்தை மிகவும் வெளிப்படையாக மீறும் செயலாகும். ஆனால் இதில் மிகவும் கவலையளிக்கும் விஷயம் என்னவென்றால் இதை நீதிமன்றம் கருத்தில் எடுக்கவில்லை என்பதே".

தனது மகனுக்கு இலக்கியங்கள் மீது மிகுந்த ஈடுபாடு உள்ளது என்றும் அவர் சமூகம் சார்ந்த கடமையும் பொறுப்புணர்ச்சியும் உள்ளவர் என்று அஹ்னாஃபின் தந்தை கூறுகிறார்.

"இவர் தீவிரவாத எண்ணங்களையும் கருத்துக்களையும் அணுவளவேனும் யோசிக்கவோ யாருக்கும் தீங்கிழைக்கவோ நினைக்கமாட்டார் என்பதை நானும் எனது குடும்பமும் உறுதிபட சத்தியமிட்டு கூறுகிறோம்".

வழக்கு விசாரணையின்றி தடுக்கு வைக்கப்பட்டுள்ள காலம் முழுவதும் அஹ்னாஃப் ஜசீம் உடல் மற்றும் உளரீதியான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்று அவரது குடும்பத்தாரும் வழக்கறிஞர்களும் கூறுகின்றனர். அவருக்கான முறையான சட்ட உதவி மறுக்கப்படுகிறது என்று அவரது சட்டத்தரணிகள் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர். மேலும் "தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கான சட்டத்தரணிகளை விசாரணைகளுக்கான பொருட்களாக மாற்றியுள்ளனர்" என்றும் அவரின் சட்டத்தரணிகள் கூறினர்.

அஹ்னாஃப் தொடர்ந்து சித்திரவதையை அனுபவித்து வருகிறார் என்றும் இது அவரது உடல் மற்றும் மனதை மிகவும் பாதித்துள்ளது என்றும் அவரது தரப்பு கூறுகிறது.

"அஹ்னாஃப் ஜசீம் கைது செய்யப்பட்ட தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்கு அனைத்து நேரங்களிலும் அவர் நாற்காலியுடன் கைவிலங்கிடப்பட்டுள்ளார்" என்று ஏப்ரல் 10ஆம் திகதியன்று இலங்கை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"அதன் பிறகு, அவர் கைவிலங்கிடப்பட்டிருக்கும் நேரம் குறைந்திருந்தாலும் அவர் விலங்கிடப்பட்டிருக்கும் நேரத்தில் இரு கைகளும் நாற்காலியுடன் இணைந்து விலங்கிடப்பட்டிருந்தார். அஹ்னாஃப் உறங்கும் போது கூட அவரது கை மேசையுடன் இணைத்துப் பூட்டப்பட்டிருந்தது. இது அவரது கைகளில் பெரும் வலியை ஏற்படுத்தியுள்ளது. இதை மனுவில் மூன்றாவது பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருக்கும் அதிகாரிகளிடம் பல முறை எடுத்துக் கூறியும் எந்த நடவடிக்கையும் இல்லை" என்று உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு கூறுகிறது.


HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

சிறைச்சாலையில் அவரை எலி கடித்த சம்பவமும் நடைபெற்றுள்ளது. இந்த வழக்கில் மூன்றாவது பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டுள்ளவர் CTID இயக்குநர் பிரசன்ன டி ஆல்விஸ். அவரது மேற்பார்வை மற்றும் உத்தரவின் பேரிலேயே அந்தக் கவிஞர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். பொலிஸ் துறையில் மூத்த அதிகாரியாக இருக்கும் ஆல்விஸ் "பலரை சித்திரவதை செய்த குற்றச்சாட்டுக்கு ஆளானவர்".

தற்போதைய ஜனாதிபதி பாதுகாப்புச் செயலராக இருந்த சமயத்தில் பிரசன்ன டி ஆல்விஸ் பயங்கரவாத தடுப்புப் பிரிவின் தலைமையகத்தில் பணியில் இருந்தார். அப்போதே பலர் "தொடர்ச்சியாகச் சித்திரவதை செய்யப்பட்டனர்" என்ற குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. அது பல ஐ நா அமைப்புகளாலும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. பயங்கரவாத தடுப்பு பிரிவு அண்மையில் CTID பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

கடும் அழுத்தங்களுக்கு மத்தியிலும் அஹ்னாஃப் ஜசீம் மண்டியிட மறுத்த நிலையில், மூத்த அதிகாரி SSP ஆல்விஸ் அவரது தந்தையை அச்சுறுத்தி மகனைப் பணிய வைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

"உங்களது மகன் நலீமியாவில் இருந்த போது தான் அவர் (இஸ்லாமிய) தீவிரவாதத்தைப் பயின்றார். உங்கள் மகன் அங்கிருந்தவர்களுக்கு தீவிரவாதத்தைப் போதித்தார் என்று 15 மாணவர்கள் வாக்குமூலம் கொடுத்துள்ளனர். அவர் 24 வயதே ஆன படித்த இளைஞர். அவருக்கு பிராகசமான எதிர்காலம் உள்ளது. நான் கூறுவதை அவர் ஒப்புக் கொண்டால், அவரை அரச சாட்சியாக்கி விடுதலை செய்வேன். அல்லது அவர் இன்னும்10 அல்லது 15 வருடங்கள் தடுப்புக் காவல் தான்" என்று SSP ஆல்விஸ் அஹ்னாஃபின் தந்தை அப்துல் கஃபூர் மொஹமது ஜஸீமை மிரட்டியுள்ளார்.

இந்த மனுவில் இதர பிரதிவாதிகளாகப் பாதுகாப்புச் செயலர் ஜெனரல் கமால் குணரட்ன, பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரட்ன, பயங்கரவாத தடுப்பு பொலிஸ் பிரிவின் வவுனியா நிலைய அத்யட்சகர், குற்ற விசாரணை பிரிவு பணிப்பாளர் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், ஒருவரை தடுத்து வைப்பதற்கான உத்தரவு பாதுகாப்பு அமைச்சரால் மட்டுமே பிறப்பிக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் அஹ்னாஃப் ஜசீமை தடுத்து வைக்கும் உத்தரவை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பிறப்பித்துள்ளதன் நியாயத் தன்மையை சட்டத்தரணிகள் கேள்விக்குட்படுத்தியுள்ளனர். அதாவது நாட்டில் பாதுகாப்பு அமைச்சர் இல்லாத நிலையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அந்த உத்தரவில் கையெழுத்திட்டது சட்ட ரீதியாக செல்லாது என்று அஹ்னாஃபின் சட்டத்தரணிகள் கூறுகின்றனர்.



"கடந்த 2020 மே மாதம் 19ஆம் திகதி MOD/LEG/PTA/63/2020 எனும் இலக்கத்தின் கீழ் இலங்கை ஜனாதிபதியால் பிறப்பிக்கப்பட்ட பிறப்பிக்கப்பட்ட தடுத்து வைக்கும் உத்தரவு செல்லாது, ஏனென்றால் தடுத்து வைக்கும் உத்தரவை பிறப்பிக்கும் அதிகாரம் அவருக்கு இல்லை" என்று உச்சநீதிமன்றத்தில் அஹ்னாஃப் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அந்த கைது உத்தரவில் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் என்ற அடிப்படையில் கையெழுத்திட்டாரா என்பது கூறப்படவில்லை. அவரால் அப்படிச் செய்யவும் முடியாது. எப்படியிருந்தாலும் அஹ்னாஃப் ஜஸீம் கைது செய்யப்பட்ட போது, இலங்கை அரசியல் சாசனம் 43(2)ன் கீழ் அப்போதிருந்த ஜனாதிபதியால் யாரும் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்படவில்லை".

இந்தாண்டு ஏப்ரல் ஒன்றாம் திகதியன்று அஹ்னாஃப் ஜசீம் குறித்த அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணையம் CTID பணிப்பாளருக்கு எழுதியிருந்தது. ஏப்ரல் 8ஆம் திகதிக்கு முன்னர் பதிலளிக்கக் கோரி அனுப்பிய கடிதத்திற்கு வழக்கம் போல பதிலில்லை.

இலங்கையில் சட்டத்திற்கு உட்பட்ட ஆட்சி நடைபெறவில்லை என்று தொடர்ந்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கவலைகளும் கண்டனங்களும் எழுந்து வரும் நிலையில், அஹ்னாஃப் கைது தொடர்பான வழக்கு மிகவும் கூர்மையாகக் கவனிக்கப்படும்.

அரசியல் யாப்பின் 19ஆவது திருத்தத்தின்படி ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சராக இருக்க முடியாது. ஆனால் 20ஆவது சட்டத்திருத்தம் 19ஆவது சட்டத்திருத்தம் கொண்டு வந்த பல ஆக்கபூர்வமான விஷயங்களை இல்லாமல் செய்துவிட்டது.

இப்போது எழுப்பப்பட்டுள்ள பல கேள்விகள் அஹ்னாஃப் ஜசீம் விஷயத்தில் மட்டுமல்ல, பல தமிழ்க் கைதிகள் விஷயத்திலும் பொருந்தும்.

# ஸ்டெர்லைட் ஆலையை திறக்க எதிர்ப்பு: துப்பாக்கிச் சூட்டில் பலியானோர் குடும்பத்தினர், காயமடைந்தவர்கள் தூத்துக்குடி ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு மனு

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையில் ஆக்சிஜன் உற்பத்திக்கு அனுமதி அளிக்கப்பட்டிருப்பதை கண்டித்து, கடந்த 2018ல் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் பலியானவர்களின் குடும்பத்தினர் மற்றும் காயமடைந்தவர்கள் இன்று ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு மனு அளித்தனர்.ஆக்சிஜன் உற்பத்தி:

நாடு முழுவதும் கரோனா தொற்றின் 2வது அலை வேகமாகப் பரவி வருகிறது. இதனால் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஆக்சிஜன் தேவை அதிகரித்து வருகிறது. பல்வேறு மாநிலங்களில் ஆக்சிஜன் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து பல்வேறு தனியார் நிறுவனங்கள் மூலம் ஆக்சிஜன் உற்பத்தியை அதிகரிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. அந்த வகையில் தூத்துக்குடியில் மூடப்பட்டுள்ள ஸ்டெர்லைட் ஆலையில் ஆக்சிஜன் உற்பத்தி செய்ய உச்சநீதிமன்றம் கடந்த 27ம் தேதி தீர்ப்பளித்துள்ளது. அதன்பேரில் ஸ்டெர்லைட் ஆலை வளாகத்தில் உள்ள ஆக்சிஜன் உற்பத்தி நிலையத்தை மீண்டும் இயக்குவதற்கான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்டு வருகின்றன, எதிர்ப்பாளர்கள் ஆட்சேபம்:இதற்கு ஸ்டெர்லைட் எதிர்ப்பு அமைப்புகளை சேர்ந்தவர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். உச்சநீதிமன்றம் தனது உத்தரவை மறுபரசீலனை செய்ய வேண்டும். மூடப்பட்ட ஸ்டெர்லைட் ஆலையை எந்த சூழ்நிலையிலும் திறக்கக்கூடாது என ஸ்டெர்லைட் எதிர்ப்பு அமைப்புகளை சேர்ந்தவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

ஸ்டெர்லைட் ஆலையை திறக்க எதிர்ப்பு தெரிவித்து தினமும் பல்வேறு தரப்பினர் மனு அளிக்க வருவதால் தூத்துக்குடி ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. படம்: என்.ராஜேஷ்இது தொடர்பாக கடந்த 2 நாட்களாக பல்வேறு போராட்டங்களையும் அவர்கள் நடத்தி வருகின்றனர். ஆக்சிஜன்



உற்பத்திக்காக ஸ்டெர்லைட் ஆலையை திறக்க எதிர்ப்பு தெரிவித்து ஸ்டெர்லைட் எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு, ஸ்டெர்லைட் எதிர்ப்பு மக்கள் இயக்கம் மற்றும் பல்வேறு கிராம மக்கள் நேற்று ஆட்சியர் அலுவலகத்துக்கு திரண்டு வந்து மனு அளித்தனர். கண்டன கோலம், கறுப்புக் கொடி:அப்போது ஸ்டெர்லைட் ஆலையில் ஆக்சிஜன் உற்பத்திக்கு அனுமதி அளித்திருப்பதை கண்டித்து ஏப்ரல் 29ம் தேதி கறுப்பு தினமாக கடைபிடிக்கப்படும். வீடுகளில் கறுப்புக் கொடிகள் கட்டப்படும். மேலும், வீடுகளுக்கு முன்பு கண்டன கோலங்கள் வரையப்படும் என ஸ்டெர்லைட் எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு சார்பில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி தூத்துக்குடி அருகேயுள்ள பண்டாரம்பட்டி கிராமத்தில் உள்ள சில வீடுகளுக்கு முன்பாக 'ஸ்டெர்லைட்டை தடை செய்' என்ற வாசகத்தை கோலமாக வரைந்து வைத்திருந்தனர். மேலும், வீடுகள் மற்றும் தெருக்களில் கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. இதையடுத்து இந்த கிராமத்தை போலீஸார் தொடர்ந்து உன்னிப்பாக கண்காணித்து வருகின்றனர்.ஆட்சியர் அலுவலகம் முற்றுகை:இந்நிலையில் கடந்த 2018ம் ஆண்டு ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டத்தின் போது போலீஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்களின் குடும்பத்தினர் மற்றும் காயமடைந்தவர்கள் சுமார் 50 பேர் இன்று ஆட்சியர் அலுவலகத்துக்கு திரண்டு வந்தனர். ஆட்சியர் அலுவலக நுழைவு வாயில் முன்பு உயிரிழந்தவர்களின் புகைப்படங்களை கையிலேந்தி முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஸ்டெர்லைட் எதிர்ப்பு தூத்துக்குடி மாவட்ட மக்கள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, மெரினா பிரபு, மகேஷ், சுஜித், மக்கள் நீதி மய்யம் மாவட்ட செயலாளர் கே.ரெங்கநாதன், சமத்துவ மக்கள் கட்சி நிர்வாகி குரூஸ் திவாகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் செந்தில் ராஜை நேரில் சந்தித்து அளித்த மனு விபரம்:ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக ஏற்கனவே நடந்த போராட்டத்தில் போலீஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் எங்களில் பலரை இழந்துள்ளோம். பலர் உடல் உறுப்புகள் சிதைக்கப்பட்டு கொடுங்காயம் அடைந்துள்ளனர். இந்த ஆலை நச்சு ஆலை எனக் கூறி தமிழக அரசே மூடியுள்ளது. இந்நிலையில் இந்தியாவுக்கே ஆக்சிஜனை உற்பத்தி செய்து தருகிறோம் என உண்மைக்கு புறம்பான பெய்யான தகவலை கூறி ஆலையை திறக்க உத்தரவு பெற்றுள்ளனர்.

இது எங்களை மிகவும் வேதனையடைய செய்துள்ளது. தூத்துக்குடி அருகேயுள்ள பண்டாரம்பட்டி கிராமத்தில் ஸ்டெர்லைட் ஆலையை தடை செய் என வலியுறுத்தி வீடுகளுக்கு முன்பு வரையப்பட்டுள்ள கோலம். ஆக்சிஜன் உற்பத்திக்கு ஆயிரம் வழிகள் இருக்கும் போது, ஸ்டெர்லைட் ஆலையை திறந்து தான் ஆக்சிஜன் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதை எங்களால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே, ஸ்டெர்லைட் ஆலையை திறக்க ஒருபோதும் அனுமதி அளிக்கக்கூடாது என, அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.ஸ்டெர்லைட் விவகாரத்தை தொடர்ந்து தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கடந்த திங்கள்கிழமை முதல் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. சுமார் 200 போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இதேபோல் ஸ்டெர்லைட் வளாகத்தை சுற்றிலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# 175 முதல் 190 தொகுதிகள் வரை திமுக கூட்டணி பெறும்: இந்தியா அஹெட், டுடே சாணக்கியா கருத்துக்கணிப்பு

இந்தியா அஹெட், டுடே சாணக்கியா போன்ற செய்தி நிறுவனங்கள் நடத்திய தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பில், திமுக கூட்டணி பெரும்பான்மை தொகுதிகளுடன் ஆட்சியைக் கைப்பற்றும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தல், கன்னியாகுமரி மக்களவை இடைத்தேர்தல், புதுவை, கேரளா சட்டப்பேரவைத் தேர்தல் உள்ளிட்டவை கடந்த ஏப்ரல் 6ம் தேதி ஒரே கட்டமாக நடைபெற்றது. மேற்கு வங்கத்தில் 8 கட்டமாகவும், அசாமில் 3 கட்டமாகவும் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்றது.

பொதுவாக தேர்தல் முடிந்த பின்னர் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்பு அன்று மாலையே வெளியாகும். இம்முறை மேற்கு வங்கத்தில் 8 கட்டமாக சட்டப்பேரவைத் தேர்தல் நடந்ததால், அந்தத் தேர்தல் முடிந்த பின்னரே கருத்துக்கணிப்பு வெளியாக வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதனால் மற்ற மாநிலங்களில் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பு முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. தேர்தலுக்கு முந்தைய கருத்துக் கணிப்பில் தமிழகத்தில் திமுக கூட்டணியே வெற்றி பெறும் என பெரும்பாலான ஏஜென்சிகள் தெரிவித்தன. திமுக தனியாக 140 இடங்களுக்கு மேல் பெறும், கூட்டணி 160 முதல் 180 இடங்கள் வரை பெறும் எனவும் கருத்துக்கணிப்புகள் வெளியாகின. அதிமுக கூட்டணி 60 இடங்கள் வரை பெற வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்கு வங்கத்தில் கடைசிக்கட்டத் தேர்தல் இன்றுடன் (ஏப். 29) முடிவடைவதால் தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, மேற்கு வங்கம், அசாம், தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பான 'எக்சிட் போல் இன்று (ஏப்ரல் 29) மாலை 7 மணியளவில் வெளியானது.இதில் 'இந்தியா அஹெட்' (IndiaAhead) நடத்திய தேர்தலுக்குப்பிந்தைய கருத்துக்கணிப்பு விவரத்தின்படி திமுக, அதிமுக கூட்டணிகள் பெறும் எனக் கணிக்கப்பட்ட தொகுதிகளின் எண்ணிக்கை விவரம்: திமுக கூட்டணி 165 முதல் 190 தொகுதிகள் அதிமுக கூட்டணி 40 முதல் 65 தொகுதிகள். அமமுக 1 முதல் 3 தொகுதிகள் மக்கள் நீதி மய்யம் 1 முதல் 3 தொகுதிகள்மற்றவை 03 தொகுதிகள்இதன்படி, திமுக கூட்டணி பெரும்பான்மை தொகுதிகளுடன் ஆட்சியைக் கைப்பற்றும் என, இந்தக் கருத்துக்கணிப்பு கூறுகிறது. வாக்கு சதவீதம்:திமுக கூட்டணி 4548%அதிமுக கூட்டணி 3538%மநீம 45%அமமுக 34%மற்றவை 1012%டுடே சாணக்கியா நியூஸ் 24 செய்தி நிறுவனம் இணைந்து நடத்திய கருத்துக்கணிப்பு:திமுக கூட்டணி 175 தொகுதிகள்அதிமுக கூட்டணி 57 தொகுதிகள் மற்றவை 2 தொகுதிகள் வாக்கு சதவீதம்:திமுக கூட்டணி 51%அதிமுக கூட்டணி 37%மற்றவை 12% இதன்படி, திமுக கூட்டணி பெரும்பான்மை தொகுதிகளுடன் ஆட்சியைக் கைப்பற்றும் என, இந்தக் கருத்துக்கணிப்பு கூறுகிறது.

# வாக்கு எண்ணும் மையத்துக்குச் செல்லும் வேட்பாளர்கள், முகவர்களுக்கு கரோனா பரிசோதனை

தமிழ்நாட்டில் மே 2ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் ஆணைய உத்தரவின் பேரில் திருச்சி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் முகவர்கள் உள்ளிட்டோருக்கு இன்று கரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை, ஸ்ரீரங்கம், திருச்சி மேற்கு, திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, துறையூர் (தனி) ஆகிய 9 தொகுதிகள் உள்ளன. இந்தத் தொகுதிகளுக்கு 3,292 வாக்குச்சாவடிகளில் ஏப்.6ம் தேதி வாக்குப் பதிவு நடைபெற்றது.


இறுதி வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்த ஆண்கள் 11,35,740 பேரில் 8,42,240 பேரும், பெண்கள் 12,02,728 பேரில் 8,77,897 பேரும், இதரர் 237 பேரில் 58 பேரும் என மொத்தம் 17,20,195 பேர் வாக்களித்திருந்தனர். இதன்படி, திருச்சி மாவட்டத்தில் 73.56 சதவீதம் வாக்குகள் பதிவாகின.இந்த நிலையில், மே 2ம் தேதி வாக்கு எண்ணிக்கை திருச்சி கிழக்கு, திருச்சி மேற்கு ஆகிய தொகுதிகளுக்கு ஜமால் முகம்மது கல்லூரியிலும், லால்குடி, மண்ணச்சநல்லூர் ஆகிய தொகுதிகளுக்கு சமயபுரம் கே.ராமகிருஷ்ணன் பொறியியல் கல்லூரியிலும், முசிறி, துறையூர் ஆகிய தொகுதிகளுக்கு கண்ணனூர் இமயம் பொறியியல் கல்லூரியிலும், மணப்பாறை, ஸ்ரீரங்கம், திருவெறும்பூர் ஆகிய தொகுதிகளுக்கு திருச்சி சாரநாதன் பொறியியல் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

இதனிடையே, வாக்கு எண்ணிக்கை நாளில் வாக்கு எண்ணிக்கை மையங்களுக்குச் செல்லும் வேட்பாளர்கள், வேட்பாளர்களின் முகவர்கள், வாக்கு எண்ணிக்கை அலுவலர்கள், பாதுகாப்புப் பணியில் ஈடுபடவுள்ள போலீஸார் ஆகிய அனைவரும், வாக்கு எண்ணிக்கை நாளுக்கு 72 மணி நேரத்துக்கு முன்னதாக கரோனா பரிசோதனை செய்து, கரோனா தொற்று இல்லை என்பதற்கான சான்று பெற்றிருந்தால் மட்டுமே வாக்கு எண்ணிக்கை மையத்துக்குள் அனுமதிக்கப்படுவர் என்று தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, திருச்சி மாவட்டத்தில் உள்ள 9 தொகுதிகளிலும் உள்ள தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகங்களில் வேட்பாளர்கள், வேட்பாளர்களின் முகவர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்டோருக்கு இன்று கரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு கட்சியினரும் கரோனா பரிசோதனைக்கு வந்ததால், அந்தந்தத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகங்கள் பரபரப்புடன் காணப்பட்டன.



# உங்களுடைய முறை விரைவில் வருகிறது.





ஒன்ராரியோவின் கோவிட்-19 தடுப்பூசி திட்டம் நோய் பரவலைத் தடுத்து உயிர்களைக் காக்க உதவுகிறது.

தினமும் ஆயிரக்கணக்கானோர் ஒன்ராரியோவில் தடுப்பூசி போட்டுக்கொள்கிறார்கள்.

தடுப்பூசி வேலை தொடரும்போது, நாமும் முகக் கவசம் அணிந்து, கைகளைக் கழுவி சமூக இடைவெளியைக் காக்கவேண்டும்.

300 மொழிகளில் உதவிபெற **ontario.ca/covidvaccineplan** க்கு செல்லுங்கள் அல்லது 1-888-999-6488 ஐ அழைத்து மேலும் தெரிந்துகொள்ளுங்கள்.

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# Markham McNicoll Urgent Care Centre (MMUCC)

**எதிர்வரும் மே 6ம் திகதி முதல் புதிய மருத்துவ சேவைகள்!!!**

1. நோயாளர்கள் தமது வீட்டிலிருந்தோ அன்றி அலுவலகத்திலிருந்தோ நேரலை வழியாக மருத்துவரிடம் சிகிச்சை பெறலாம் (Virtual Care)

2. நோயாளர் கணனி மூலமோ அன்றி தொலைபேசி மூலமோ மருத்துவரை பார்வையிடும் நேரத்தைப் பதிவு செய்யலாம் (Online Booking & Book by Phone)

*வைத்திய கலாநிதி சிந்துலா விஜயா (குடும்ப மருத்துவர்) அவர்களது பதிவு பெற்ற நோயாளர்களும் இந்த சேவைகளைப் பெறமுடியும்

மேலதிக விபரங்களுக்கு

**medcentrehealth.com**

எனும் எமது இணையத்தளத்தைப் பார்வையிடவும்

MEDCENTRE HEALTH

SYNCHRONIZING HEALTH SECTORS

**2901 Markham Road, Unit - 11**
**Toronto, ON M1X 0B6**

**Phone: (416) 609-3333**

# COVID-19 கொடூரமாக பரவும் ஒண்டாரியோவில், உங்களை பாதுகாக்கும் அரசாங்கம் தேவை.





**ஆண்ட்ரியா ஹொர்வர்த் மற்றும் என்.டி.பி உங்களுக்காக போராடுகின்றார்கள்:**

- சம்பளத்துடன் கூடிய நோய் விடுப்பு, மற்றும் தடுப்பூசி பெரும் விடுமுறைகளை வழங்க
- காவல்துறைக்கு கொடுத்த சிறப்பு அதிகாரங்கள் அனைத்தையும் முற்றும் முழுதாக ரத்து செய்ய
- பாதிப்புக்குள்ளாகிய வணிகங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் நேரடியான பண உதவிகளை வழங்க

Ontario NDP NPD de l'Ontario



# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com



# உரும்பிராய் இரசாயன உரக் கலப்பற்ற வீட்டுத் தோட்ட முகவர் நிலையத்தின் முக்கிய அறிவித்தல்




யாழ்ப்பாணம் உரும்பிராயில் சில வருடங்களுக்கு முன்னர் கனடாவில் வாழும் திரு. சிவக்கொழுந்து மகேந்திரனால் ஆரம்பிக்கப்பெற்ற இந்த இரசாயன உரக் கலப்பில்லாத வீட்டுத் தோட்ட முகவர் நிலையம் ஆயிரக்கணக்கான காய்கறிக் கன்றுகளை இயற்கைப் பசளை கொண்டு வளர்த்து மக்களுக்கு விநியோகிக்கத் தொடங்கியுள்ளது.

அங்கு மிகக் குறைந்த விலைக்கே இந்தக் கன்றுகள் விற்பனை செய்யப்படுகின்றன.

கத்தரி, மிளகாய், வெண்டைக்காய், கறி மிளகாய், பாகற்காய் புடோல், போன்ற பல வகை காய்கறிக் கன்று இங்கு விதை போட்டு வளர்க்கபபட்டு தற்போது விநியோகம் செய்யப்படுகின்றன.

இவ்வாறான கன்றுகளின் ஒரு தொகுதியை அங்குள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வழங்கி ஆதரவு வழங்க வேண்டும் என்பதே திரு. சிவக்கொழுந்து மகேந்திரனின் நல்லெண்ணம் ஆகும். இதன் மூலம் அங்கு வறுமையில் உள்ளவர்களுக்கு வாழ்வாதாரத்தையும் நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

**ஒரு குடும்பத்திற்கு 100 டாலர்கள் போதுமானது**







யாழ்ப்பாண மாவட்டத்தில் எந்த ஒரு கிராமத்திலும் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு இவ்வாறான காய்கறிக் கன்றுகளை இலவசமாக வழங்க உதவி புரிய விரும்பும் அன்பர்கள் மற்றும் அமைப்புக்கள் இந்த முயற்சிக்கு ஆதரவளிக்கலாம்.

---

கனடாவில் திரு. சிவக்கொழுந்து மகேந்திரனை அழைக்கவும்: **(437) 335-5424**

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).




5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# The Tamil Canadian Community

**By: Alex Gunaseelan**

Tamil Canadians are Canadians of Tamil ethnic origin. The Tamil Canadian population is one of the largest in North America and Europe, with estimates ranging between 157 000 and 300 000 people living throughout the country. The majority of the Tamil Canadian population is made up of Sri Lankan Tamil refugees fleeing the ethnic tensions during the Sri Lankan Civil War. Other Tamil migrants originate from countries such as India, Malaysia, Singapore, and other parts of the world.

Migration to Canada can be traced back as early as the 1950s. Many Tamil migrants back then were mainly professionals, scattered throughout many major cities including Toronto and Montreal. Following the start of the Sri Lankan Civil War, the Tamil community drastically increased in number, with the majority of the population living in most parts of the Greater Toronto Area. A significant population also lives in Montreal, with smaller populations living in other major cities such as Ottawa, Winnipeg, Edmonton and Vancouver.

During its relatively short presence in Canada, the Tamil Canadian community has flourished by providing many services. There are over ten different Tamil newspapers and magazines published to serve the needs of the Tamil community. Additionally, there are at least four radio stations and at least three Tamil television stations including Tamil Vision International, Tamil One and Tamil Entertainment Television. Most Tamil media outlets are based in Toronto and Montreal. The Tamil Canadian community has a major and direct impact on all aspects of Canadian society. Tamil Canadians serve as professionals in multiple sectors including medicine, politics, the public service, finance, law, and education. Currently (2021), there is one federal Member of Parliament and two Ontario Members of Provincial Parliament of Sri Lankan Tamil origin and the current federal Minister of Public Services and Procurement is of partial Tamil origin.

In 2016, a unanimous decision was made at the House of Commons declaring January as Tamil Heritage Month under M-24. This motion will "recognize the contributions that Tamil Canadians have made to Canadian society, the richness of the Tamil language and culture, and the importance of educating and reflecting upon Tamil heritage for future generations" through the declaration of Tamil Heritage Month.

As the Tamil Canadian community continues to thrive and grow in Canada, close connections to the Tamil language and culture continue to be maintained. The continued growth of the Tamil language through family conversations, gatherings and cultural programs is greatly promoting the use of the language. That being said, a large proportion of those born in Canada or who have arrived to Canada at a young age may not be as proficient in the Tamil language. As a result, Tamil schools with language classes have been established so that students can learn the language, obtaining credits for their primary and secondary education where possible.

As the Tamil Canadian community continues to establish itself and grow in Canada, the Tamil presence has become more apparent as an important facet of the Canadian identity. The Tamil Canadian community holds a special place in Canada, being able to retain and celebrate its heritage and integrating and contributing positively to Canadian society.






கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
roted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 944



## நாச்சிமார் திருக்கோயில்
## வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

" நல்லதைச் சொல்லென்றும் நல்லதைச் செய்யென்றும்
நயம்படச் சொல்லும் தாயே
நஞ்சு எண்ணங் கொண்டு இச்சையாய் அலைவாரை
நசுக்கிடும் அன்னை நீயே
பொல்லாத செயலினைப் பொடிப் பொடியாக்கிடும்
பொன்சுடர் தீபம் நீயே
புகழுடைய வாழ்விற்கு பொன்முடி சூட்டியே
பூத்தூவி வாழ்த்துவாயே."

ஈழத்தின் வடபால் அமைந்துள்ள பிரதேசம் எங்கும் கோவில்கள் பரந்து காணப்படுகின்றன. காலத்திற்குக் காலம் ஏற்படுகின்ற அனர்த்தங்களால் இக்கோவில்கள் அழிவதும், அழிக்கப்படுவதுமாகக் காணப்பட்டபோதிலும், மீண்டும் இக்கோவில்கள் மிகச் சிறப்போடு புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வணங்கப்படுவது இறைவன் திருவருளாகவே காணப்படுகின்றது. இந்நிலைக்கு இப்பிரதேசத்திலே வாழுகின்ற சைவப்பெருங்குடி மக்களின் சமய ஆர்வமும், நம்பிக்கையுமே காரணமாகத் தோன்றுகின்றது. சைவாசாரங்களிலும், இறைநம்பிக்கையிலும் பெரிதும் ஈடுபாடுகொண்ட மக்களால், சைவாலயங்கள் மீண்டும் மீண்டும் புத்துயிர் பெற்று, வளர்ச்சிபெற்றோங்கிக் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தின் மாநகர எல்லைக்குள் அமைந்த பிரதேசமாகக் காணப்படுவது, வண்ணார்பண்ணை என்னும் பிரதேசம். இதன் வடக்கில், காங்கேசன்துறை வீதியோடு இராமநாதன் வீதி சேரும் சந்தியில், நாச்சிமார்கோவில் என அழைக்கப்படுகின்ற வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது. இக்கோவில், கி.பி 1880 ஆண்டு, விஸ்வகுல மேஸ்திரியாகிய, கந்தர் என்பவரால் கல்லினால் கட்டப்பட்டது என, அரசாங்கக் குறிப்பேடொன்றிலே காணப்படுகின்றது. இக்குறிப்பேடு, கி.பி 1898 ஆம் ஆண்டு யாழ்பாண அரசஅதிபரினால், யாழ்ப்பாணத்திலுள்ள சைவக்கோவில்கள், கிறிஸ்தவ தேவாலயங்களைப் பற்றித் தயாரிக்கப்பட்டதாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே, இக்கோவில் நாச்சிமார்கோவில் என அழைக்கப்பட்டது. ஒவ்வொரு கோவில்களும் எவ்வாறு உற்பத்தியானது என்பதைப்பற்றிய குறிப்புக்களைத் தலபுராணங்கள் மூலமாகவும், கர்ணபரம்பரைக் கதைகள் மூலமாகவும், வரலாறு மூலமாகவும் அறியக் கூடியதாயுள்ளது. இந்த ரீதியில், நாச்சிமார்கோவில்பற்றிய கர்ணபரம்பரைக் கதையொன்று, இப்பிரதேச மக்களிடையே வழக்கில் காணப்படுகின்றது. ஆதிகாலத்தில் இப்பகுதியில் குளமொன்றும், நாவல்மரங்களும், மருத மரங்களும், சுற்றுப்புறங்களில் வயல்களும் பரந்து, மிகச் செழிப்பான பிரதேசமாகக் காணப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் விஸ்வப்பிரமகுல மக்கள் செறிந்து வாழ்ந்தனர். இங்குள்ள பெண்கள் அருகிலுள்ள இடங்களுக்குச் சென்று, விறகு சேகரிப்பது வழக்கம். ஒருநாள் கன்னிப் பெண்ணொருத்தி விறகு பொறுக்கச் சென்ற சமயம், அருகிலிருந்த மருதமரத்தடியில், சிறுநீர் கழித்துக்கொண்டிருந்தாள். அப்போது, இக் கன்னிப்பெண், மருதமரத்திலிருந்து வந்த தேவதை போன்ற ஒரு பெண்ணைக் கண்டதாகவும், அவ்வேளை முலைகளைத் திருகுவதைப்போன்ற வேதனையை உணர்ந்து, அவ்விடத்தை விட்டகன்று, வீட்டாரிடமும் ஏனையோரிடமும் இச்செய்தியைக் கூறினாள். இதனைக் கேள்வியுற்ற அவ்வூர் மக்கள் கலக்கமுற்றனர்.

இச் சம்பவத்தைக் கேள்வியுற்ற கண்ணாத்தை என்னும் வயோதிபமாது, அப்பெண்ணைச் சாந்தப்படுத்தி, ஆறுதல் வார்த்தை கூறினார். பின்னர் மருதடியில் கண்ட பெண்தெய்வத்தைச் சாந்தப்படுத்த, அவ்விடத்தில் விளக்கேற்றி வழிபாடு செய்ய ஆரம்பித்தார். நாளடைவில் பக்தியோடு பொங்கல் பூசைகளையும் செய்து வந்தார். இவ்வாறு கண்ணாத்தை அம்மையாரால் வணங்கப்பட்ட தெய்வத்தை, நாச்சியார் எனப் பெயரிட்டு வணங்கி வந்தனர். கண்ணாத்தையைப் பின்பற்றிக் கிராமமக்களும் நாச்சியாரை வழிபாடியற்றத் தொடங்கினர். நாளடைவில் அயல் கிராமங்களிலுள்ள மக்களும் நாச்சியார் செய்யும் புதுமைகளைக் கேள்வியுற்று, இவ்விடத்திற்கு வந்து வழிபாடு செய்ய ஆரம்பித்தனர். அத்துடன் கண்ணாத்தை அம்மையாரையும் நாச்சியார் என்று அன்போடு அழைக்கலாயினர். காலஞ் செல்லச் செல்ல இம் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி, ஆலயமொன்றை அமைத்து, விக்கிரக வழிபாட்டை மேற்கொள்ள எண்ணினர்.

கண்ணாத்தை அம்மையாருக்கு வாரிசுகள் இல்லாத நிலையிலே, தனது சொத்துக்களையெல்லாம் இக் கோவிலுக்கு வழங்கினார். கண்ணாத்தை அம்மையாரின் சகோதரராகிய சண்முகம் என்பவர், ஊராருடன் ஒன்று சேர்ந்து, கண்ணாத்தை அம்மையாரால் வழிபாடு செய்யப்பட்ட இடத்தில், ஆலயமொன்றைக் கட்ட எண்ணினார். அவ்வாறே, சிறு கோவிலொன்றைக் கல்லினால் கட்டி, அங்கு மாரியம்மனை வைத்து வழிபாடு செய்து வந்தனர். ஆலயச் சுற்றாடலிலே வாழ்ந்த பொற்கொல்லர், காமாட்சியைக் குலதெய்வமாக வணங்கும் வழக்கமுடையவராகக் காணப்பட்டனர். எனவே, இக்கோவிலில் காமாட்சியையே வைத்து வணங்கவேண்டுமென்று கூறினர். இவர்கள் கருத்து மேலோங்கியதால், பூணூல் வைத்தியலிங்கப்பத்தர் என்பவர், தென்னிந்தியாவிற்குப் போய் காஞ்சி காமாட்சியின் திருவுருவத்தைச் செய்வித்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்தார்.
நாச்சிமார் கோவில் கல்லால், கி.பி 1870 ஆண்டிலே கட்டப்பட்டதென்றும், அங்கு ஆண்டு தோறும் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றனவென்றும், இக்கோவில் விஸ்வப்பிரம்மகுலத்தவர்கள்வசம் காணப்பட்டதென்றும், பதிவேட்டுக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு இக்கோவில் அமைந்துள்ள இடம் குளக்கரை மருதடி எனவும், உறுதியிலே பதியப்பட்டுள்ளது. மாரியம்மன் வணக்கமுறை, கிராமிய வழிபாடாகக் காணப்படுகின்றது. இந்நிலையிலிருந்து ஆகமவழிபாட்டிற்கு மாற்றமுறும் பொழுது, ஆகமவிதிப்படி கோவில் அமைவது அவசியமாகின்றது. இந்நிலையைக் கருத்திற்கொள்ளும்போது, பதிவேட்டுக் குறிப்பிலே காணப்படுவது அக்காலகட்ட வளர்ச்சிப் படிமுறையைக் காட்டுவதாகவே காணப்படுகின்றது.

*வளரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, விடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, விடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077




No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

*SUMMER SPECIAL* கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.



இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.





காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

## SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8

Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்



# #43 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

"ஆனந்தவிகடன்" துணை ஆசிரியர்களில் ஒருவரும், ஐந்து கண்டங்களுக்கும் பயணம் செய்து, பல நாடுக-ளின் - அங்குவாழும் மக்களின் இதயங்களுடன் உறவாடி "இதயம் பேசுகிறது" எனும் பயணக்கட்டுரைகள் மூலம் உலகறிந்த எழுத்தாளராகவும் பின்னாளில் "இதயம் பேசு-கிறது" என்றே தனியாக ஒரு வார இதழை ஆரம்பித்து புகழீட்டிய வரும், அன்னை இந்திராகாந்தியின் தமிழ்நாட்டு வலதுகரமாகவிருந்து மக்கள் திலகம் எம்ஜிஆர் அவர்களின் ஆட்சியில் மத்திய மாநில அரசின் உறவுப் பாலமாக விளங்கி அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பலமாக ஆட்சி செய்யக் காரணியாகவிருந்த வேங்கட சுப்பிரமணியன் எனும் "மணியன்" அவர்கள் நமது சிவாஜி ஐயா பற்றி என்ன எழுதி சென்றார் எனப் பார்ப்போம்.

"இதயம் பேசுகிறது" 02.10.1994 திகதியிட்ட இதழிலிருந்து..

"செவாலியர் சிவாஜி அவர்கள் 67வது வயதில் அடியெடுத்து வைக்கிறார்...", அதையொட்டி அவருக்கு வாழ்த்து தெரிவித்து விட்டு வரலாம் என்று அவர் இல்லம் சென்றேன். நான் முதன் முதலாக வெளிநாட்டு பயணம் புறப்பட்ட போது, என் வீட்டுக்கு வந்து மாலை அணிவித்து விட்டுச் சென்றவர் சிம்மக்குரலோன் சிவாஜி அவர்கள்.

இன்று நான் ஐந்து கண்டங்களுக்கும் சென்று வந்த அனுபவங்களை ஐந்து நூல்களாக வெளியிட்டிருக்கிறேன். இந்த சாதனைக்கு அவரது வாழ்த்தும் ஒரு காரணம் என்றே நம்புகிறேன். அந்த இனிய நண்பருக்குக் கொடுப்பதற்காக அந்த ஐந்து பயண நூல்களையும் எடுத்துக்கொண்டு போனேன்.

காலை சரியாக 10 மணிக்கு...

சிவாஜியின் "அன்னை இல்லத்துக்குள்" அடியெடுத்து வைத்தேன். அன்போடு வரவேற்று நலம் விசாரித்தார். "உடம்பைக் குறைக்கனும் மணியா.." என்று ஒரு மூத்த சகோதரனின் வாஞ்சையோடு அறிவுரை சொன்னார். சொல்லிவிட்டு, "உங்கள் சொந்த வி'யத்தில் தலை-யிடுவதாக தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள் மணியன்" என்று தனது நாகரிகத்தை வெளிப்படுத்தினார்.

சிவாஜி என்ற கம்பீரப் பெயருக்குரிய அந்த இமாலய புகழ்க் கலைஞன் உடலில் முதுமை தளர்வு இலேசாகக் குடிகொண்டிருக்கிறது. ஆனால் "கட்டபொம்மனாக, "வீர சிவாஜியாக"க் கர்ச்சித்த அந்த கம்பீரக்குரல் இன்னும் அப்படியே இருக்கிறது. நல்ல தமிழ் பேசுகிற ஒரு கலைஞனை சந்தித்த சந்தோஷம். 15 ஆண்டுகள் இரவு பகல் முழுமையாக மூன்று கால்ஷீட் கொடுத்து நடிப்பு நடிப்பு என்று கலை-யாகவே வாழ்ந்தவர்! இப்போது சற்று ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார். உடல் ஒத்துழைக்காவிட்டாலும், மனம் நடிப்பு நடிப்பு என்று அரற்றிக் கொண்டிருப்பது அவர் பேச்சில் வெளிப்படுகிறது.

"ஒருநாள் எப்படி உங்களுக்கு கழிகிறது", என்று கேட்டேன்...

"காலை எட்டு மணிக்கு இந்த ஹாலில் வந்து அமர்ந்து கொள்வேன். சாண்டில்யன், கல்கி எழுதிய நாவல்கள் படிக்கிறேன்.. தூங்கும் வரை வாசிப்பு தான். நான் ரொம்ப சாதாரணமான மணியன்... பெரிய பெரிய அறிவுப் பொக்கிஷங்களையெல்லாம் நான் படிக்கிறதில்ல..!, என்று கண் சிமிட்டினார். ஆனால் அவர் பேச்சில் வெளிப்படுகிற வேதாந்தங்களை பார்த்தால் பல வி'யங்கள் படிக்கிறார் என்று சாதாரணமாக புரிந்தது.

இரண்டு நிமிடம் வரை பத்திரிகை விஷயம் எதையும் பேசாமல் அந்த கலைஞனைக் கண்ணால் அளந்து கொண்டிருந்தேன். பல நினைவுகள் என்னுள் கடந்தகால பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தன... வ.உ.சி, கட்டபொம்மன், அப்பர் என்று பல வரலாற்றுப் புராண, இதிகாச நாயகர்கள் நடிகர் திலகம் ரூபத்தில் நினைவுத் திரையில் வலம் வந்தார்கள்..! எப்பேர்ப்பட்ட கலைவல்லுனன் வாழ்கின்ற காலத்தில் நாம் வாழ்கிறோம் என்று தோன்றியது. உடல் சிலிர்த்து விட்டது. இந்த சஞ்சாரத்தைக் கடமை கலைத்தது. மெல்ல பத்திரிக்கைக்கான விஷயத்திற்குத் திரும்பினேன்.



பிறந்தநாள் விழாப்பற்றிப் பேசிவிட்டு, "உங்கள் அளவுக்குப் பெரிய நடிகர் உலகத்திலேயே கிடையாது.. அவ்வளவு சாதித்திருக்கிறீர்கள்.. அது ஒரு வெளிநாட்டு அரசுக்குத் தெரிந்திருக்கிற அளவுக்கு நம் அரசுகளுக்கு தெரியவில்லையே என்று தோன்றுகிறது."

"நீங்கள் பரந்தமனம் படைத்த தமிழர். அதனால் மனம் திறந்து பாராட்டுகிறீர்கள். ரொம்ப சந்தோசம். ஆனால் நமது அரசுகள் கௌரவிக்கவில்லை என்பதற்காக நான் வருத்தப்படுவதில்லை! ஏன்னா, தமிழ்ச் சமுதாயம் என்னை ரொம்பவும் கௌரவப்படுத்தியிருக்கிறது. தமிழ் மக்கள் என்னை நேசிக்கிறார்கள். சமூகம் மதித்தால் போதும். அரசைப் பற்றி கவலையில்லை. அரசுக்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். அதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை.

"காங்கிரசிலிருந்து நீங்கள் விலகி விட்டது காரணமாக இருக்கும் என்று நினைப்பதுண்டா?"

"சில நேரங்களில் அப்படி எனக்கு தோன்றும். ஆனால் மறுபடியும் யோசிக்கும் போது, "நாம் ஏன் அப்படி எடுத்துக் கொள்ளவேண்டும்... நல்ல மாடாய் இருந்தால் உள்ளூரிலேயே விலை போயிருக்கும்... நா.. நல்ல மாடு இல்லையோ, என்னவோ.. என்று தோன்றும்" உடனே அரசியல் உள்நோக்கம் காரணமில்லை என்று சமாதானப் படுத்திக் கொள்வேன். நாம் ஏன் மற்றவர்களை குறை சொல்லணும்.

"அரசியல் காரணமில்லை என்றாலும் வடக்கு - தெற்கு பாகுபாடு இருக்கத்தான் செய்கிறது. நீங்கள் மட்டும் விந்திய மலைக்கு தெற்கே பிறந்திருக்காவிட்டால் மிகப் பெரிய விருதுகள் எல்லாம் உங்களுக்கு சாதாரணமாக கிடைத்திருக்கும், என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை. இதற்கு என்னிடமிருந்தே ஒரு உதாரணம் சொல்லமுடியும். தற்பெருமை என்று நினைத்துவிடாதீர்கள். உலகம் முழுக்கப் பயணம் செய்து, சர்வதேசப் பயணக் கதை எழுத்தாளர் சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒரே இந்தியன் நான் தான்! எழுத்தாளர் குஷ்வந்த்சிங் என்னைக் விட குறைவாகத் தான் பயணம் செய்திருப்பார். இருந்தாலும் அவருக்கு கொடுத்த அளவுக்குப் பாராட்டு, விருதோ எனக்கு கிடைக்கவில்லை. அதற்காக நான் வருத்தப்படாவிட்டாலும், சில சமயங்களில் தமிழனாய் இருப்பது தான் காரணமோ என்று தோன்றும்!"

"உங்கள் எண்ணம் சரியாகவிருக்கலாம் மணியன்"... என்று சொல்லிவிட்டு இடைவிடாமல் நடிகர் திலகம் சிரித்த சிரிப்பு ஒன்றே என் எண்ணத்தை அங்கீகரிப்பது போலிருந்தது.



"செவாலியர் விருதுக்கு என்ன அடிப்படையில் உங்களைத் தேர்வு செய்தார்கள்? விருது பெற எப்போது போகிறீர்கள்?" "செவாலியர், ஆஸ்கார் விருதெல்லாம் பொதுவாக ஐரோப்பா, அமெரிக்கக் கண்டங்களைத் தாண்டி யாருக்கும் கொடுக்கப்பட்டதில்லை. இதற்கு வெ-ளியே ஒருவருக்குக் கொடுக்கப்பட்டது எனக்குத்தான் என்று சொன்னார்கள். ஆறு ஆண்டுகளாக என்னை - என் படங்களை "வாட்ச்" பண்ணினார்க்களாம். ஆனால் எந்த சந்தோஷத்தையும் அனுபவிக்கிற நிலையில் இப்போது நான் இல்லை. எதையும் அனுபவிக்க வயதில் கொடுத்தால் தானே சந்தோசம் வரும் மணியன் (சிரிக்கிறார்). விருது பெற நான் செல்வது என் உடல் நிலையைப் பொறுத்துத் தான் முடிவு செய்யவேண்டும். இப்போதெல்லாம் மணிக்கணக்கில் பிரயாணம் செய்கிற மனநிலையே இல்லை. பார்க்கலாம்..

சென்சார் கெடுபிடிகள் அதிகமாக இருக்கிறது. இது பற்றி உங்கள் கருத்தென்ன?

"சென்சாரில் திரைஉலகம் சம்பந்தப்பட்ட விவரங்கள் நிறையத் தெரிந்தவர்கள் இடம் பெறவேண்டும். இப்போது அப்படியில்லை என்று நினைக்கிறேன். ஆனால் சென்சாரை விட, சுயகட்டுப்பாடு நம் டைரக்டர்களுக்கு, கதாசிரியர்களுக்கு வளர வேண்டும். அவர்களுக்கும் பெண்பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களோடு உட்கார்ந்து படம் பார்க்கும் போது, படக்காட்சிகளை கண்டு நெளியக்கூடாது. அது தான் நல்ல படம் குடும்பப்படம். ஆனால் இன்றைக்கு வருகிற படங்களைப் பிள்ளைகளோடு

(தொடர்ச்சி 23ம் பக்கம்)



# சிங்கப்பூர் தமிழ் மொழி விழா 2021ல் – "தமிழ்கூறும் நல்லுலகம்"

தமிழன்னையை ஆட்சிக்கட்டிலில் ஏற்றி அழகு பார்த்த சிங்கப்பூர்த் தமிழர்கள் அவ்வன்னைக்குச் சூட்டிய மணிமகுடம் தான் தமிழ் மொழி விழா. "ஒவ்வொரு ஆண்டும் தமிழை நேசிப்போம் தமிழில் பேசுவோம்" என்ற முழக்க வரியோடு வளர்தமிழ் இயக்கம் மற்றும் தமிழ் மொழி கற்றல் வளர்ச்சிகுழுவின் ஆதரவோடு இவ்விழா சிறப்பாக அரங்கேறி வருகிறது. இத்துணை ஆண்டுகள் தீவெங்கும் ஒலித்த தமிழ் முழக்கம் கடந்தாண்டு கொரோனா நோய்தொற்றுக் காரணமாக இணையத்தின் வழியே உலகெங்கும் ஒலித்தது. அதுபோல இவ்வாண்டும் மெய் நிகர் தொழில் நுட்பத்தின் வழியாகத்தமிழோசைப் பாரெங்கும் ஒலித்து வருகின்றது. இவ்விழாவில் 2014 ஆண்டு முதல் அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் சங்கமும் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் நிகழ்ச்சியை முன்னெடுத்துவருகிறது. இதன் தொடர்ச்சியாக இவ்வாண்டும் ஏப்ரல் 24 ஆம் தேதி "தமிழ்கூறும் நல்லுலகம்" என்ற தலைப்பில் நிகழ்ச்சியை இணையத்தில் நடத்தியது. "வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி" என்ற பாரதியின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலோடு நிகழ்வு சரியாக ஆறு மணிக்குத் தொடங்கியது. இந்த நிகழ்வின் நிகழ்ச்சி நெறியாளர்களாக நின்று நிகழ்ச்சியை வழி நடத்தினார்கள் திரு முத்து மாணிக்கம் மற்றும் திருமதி பிரதீபா அவர்கள்.



உயர்நிலை 1 & 2 பிரிவில் முதல் பரிசு பெற்ற தெமாசெக் தொடக்கக் கல்லூரியைச் சேர்ந்த மாணவி சித்வியா சிதம்பரம் (தலைப்பு: ஜப்பானிய மொழியிலே தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தின் செல்வாக்கு)

உயர்நிலை 3 & 4 பிரிவில் முதல் பரிசு பெற்ற தெமாசெக் தொடக்கக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர் விஷால் அருண்குமார் (தலைப்பு : கொரிய மொழியிலே தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தின் செல்வாக்கு)

தொடக்கக் கல்லூரி பிரிவில் முதல் பரிசு பெற்ற டி.பி.எஸ் (D.P.S) சர்வ தேசப் பொதுப் பள்ளியில் படிக்கும் மாணவி அனுஷா சந்திரன் (தலைப்பு : தமிழ் மொழிக்கும் தாய் மொழிக்கும் இடையிலான உன்னத உறவு)

முனைவர் சோமலெ சோமசுந்தரம் (அமெரிக்கா) | திரு. சிவசண்முகம் (ஆப்பிரிக்கா) | முனைவர் அலெக்சிஸ் தேவராஜ் சேன்மார்க் (ஐரோப்பா) | முனைவர் நா. கண்ணன் (ஆசியா) | திரு. நாகை சுகுமாரன் (ஆஸ்திரேலியா)

அடுத்த அங்கமாக வரவேற்புரையை வழங்கினார் சங்கத்தின் தலைவர் திரு. சௌந்தரராஜன் அவர்கள். ஆறு தொன்மையான மொழிகளில் ஒன்றான தமிழ் மொழி இன்று உலகின் பல்வேறு கண்டங்களில் பேசப்பட்டு வருகின்றது. அதனை அனைவரும் அறிந்துகொள்ளும் பொருட்டு "தமிழ்கூறும் நல்லுலகம்" என்ற தலைப்புத் தேர்ந்தெடுக்கப்பட்டது என்று இந்நிகழ்வின் நோக்கத்தைப்பற்றி எடுத்துரைத்தார். மேலும், இந்த நிகழ்விற்குத்தளம் அமைத்துக் கொடுத்த வளர் தமிழ் இயக்கம் மற்றும் கற்றல் வளச்சிக் குழு உறுப்பினர்கள், சிங்கப்பூரின் பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள், சிறப்புப் பேச்சாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என்று நிகழ்வில் பங்கேற்ற அனைவரையும் வரவேற்று வரவேற்புரையை வழங்கினார்.

தமிழ்மொழிவிழாவின் முக்கிய நோக்கம் சிங்கப்பூரில் தமிழ் மொழியை வாழும் மொழியாக நிலை பெற செய்வதோடு மாணவர்களிடையே தமிழ்ப் புழக்கத்தை அதிகரிக்கச் செய்வதே ஆகும். அந்த வகையில் அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் சங்கமும் மாணவர்களிடையே தமிழ் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கருப்பொருளில் மாணவர்களுக்குப் போட்டிகளை நடத்திவருகின்றது. தமிழ் மொழியின் இலக்கியச் சிறப்புகளை நடைமுறை வாழ்வியலோடு பொருத்திப் பார்க்கும் வகையில் தலைப்புகள் கொடுக்கப்படுகின்றன. இதன் மூலம் மாணவர்களிடையே மொழியின்பால் ஆர்வத்தையும் ஈர்ப்பையும் உருவாக்குவதே இந்நிகழ்வின் முக்கிய நோக்கமாகும். அந்த வகையில் இந்த ஆண்டும் "பிறமொழிகளில் தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தின் செல்வாக்கு" என்ற தலைப்பில் ஆய்வு செய்து தங்களது படைப்பை படைக்க உயர்நிலை மற்றும் தொடக்கக்கல்லூரி மாணவர்களிடையே போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டியில் பதினான்கு பள்ளிகளைச் சேர்ந்த மொத்தம் 56 மாணவர்கள் கலந்து கொண்டு தங்களது பங்களிப்பினை வழங்கினர். உயர்நிலை 1&2, உயர்நிலை 3&4 மற்றும் தொடக்கக் கல்லூரி என்று மூன்று பிரிவுகளில் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களைப்பற்றிய விவரங்கள் முதலில் அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு பிரிவிலும் முதல் பரிசைப்பெற்ற மாணவர்கள் தங்கள் படைப்பைப் படைத்தார்கள்.

முதலில் உயர்நிலை 1&2, பிரிவில் முதல் பரிசு பெற்ற தெமாசெக் தொடக்கக் கல்லூரியைச் சேர்ந்த மாணவி சித்வியா சிதம்பரம் "ஜப்பானிய மொழியிலே தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தின் செல்வாக்கு" என்ற தலைப்பில் தன்னுடைய படைப்பைப் படைத்தார். தமிழ் மொழிக்கும் ஜப்பானிய மொழிக்கும் இடையே உள்ள மொழியியல் கூறுகள், இலக்கியம், கலாசாரம், விழாக்கள், உணவு என்று பல நிலைகளில் இரண்டுக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளைப் பற்றி எடுத்துரைத்தார். இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே நெடுந்தொலைவு இருந்தபோதும் தமிழின் செல்வாக்கு ஜப்பானிய மொழியில் காணும்போது தமிழின் தொன்மையும், தமிழின் செம்மையும் நன்கு புலப்படுகின்றது. அடுத்தாக உயர்நிலை 3&4 பிரிவில் முதல் பரிசு பெற்ற தெமாசெக் தொடக்கக் கல்லூரி மாணவர் விஷால் அருண்குமார் "கொரிய மொழியிலே தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தின் செல்வாக்கு" என்ற தலைப்பில் தன்னுடைய படைப்பைப் படைத்தார். முதலாம் நூற்றாண்டிலே வாணிகத்தின் பொருட்டு உருவான தொடர்பின் தாக்கத்தால் தமிழின் பல படிமகூறுகள் அம்மண்ணில் வேரூன்ற தொடங்கிய செய்தியைப் பகிர்ந்துகொண்டார். மேலும், இரண்டு மொழிகளுக்கிடையே உள்ள சொற்களின் ஒலிப்புமுறை, கலாசாரம், பழக்கவழக்கம், நடனம் ஆகிய வற்றில் காணப்படுகின்ற ஒற்றுமைகளைப் பற்றிக் குறிப்பிடபோது நம் பண்டைய தமிழர்களின் மரபும், பண்பாட்டு சிறப்பும் எத்தகைய நிலைப்பாட்டினைக் கொண்டு இருக்கிறது என்பதை நம்மால் கண்கூடாக அறிய முடிந்தது. நிறைவாக, தொடக்கக் கல்லூரி பிரிவில் முதல் பரிசு பெற்ற டி.பி.எஸ் (D.P.S) சர்வதேசப் பொதுப் பள்ளியில் படிக்கும் மாணவி அனுஷாசந்திரன் "தமிழ் மொழிக்கும் தாய் மொழிக்கும் இடையிலான உன்னத உறவு" என்ற தலைப்பில் தன்னுடைய படைப்பை படைத்தார். கங்கை கொண்ட சோழனால் தொடங்கப்பட்ட கலாசாரப் புரட்சியின் விளைவால் தாய்லாந்து மக்களின் கலை, கலாசாரம், கடவுள் வழிபாடு மற்றும் அரசியல் என்று அனைத்து தளங்களிலும் முத்தமிழின் முத்திரையைப்பற்றி எடுத்துரைத்தார். "பிறமொழிகளில் தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தின் செல்வாக்கு" என்ற தலைப்பு மாணவர்களின் சிந்தனையைத் தூண்டியதோடு, தமிழ் மொழியின் செல்வாக்கை அறிய ஏதுவாக அமைந்திருந்தது என்பதை அவர்களின் படைப்பின் வழி அறிய முடிந்தது. அடுத்த அங்கமாக அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னால் மாணவர்கள் சங்கம் 2014 முதல் 2020வரை தமிழ் மொழி விழாவில் கடந்து வந்த பாதையைப் பற்றிய கண்ணோட்டம் இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து விழா சிறப்பாக நடைபெற நிதி உதவி நல்கிய ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

அடுத்த அங்கமாகச் சிறப்புப் பேச்சாளர்களின் சிறப்புரை தொடங்கியது. "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்ற பழமொழிகேற்ப கடல் தாண்டி திரவியம் தேட சென்ற புலம் பெயர்ந்த தமிழர்கள் பொருளைத் தேடுவதில் மட்டும் நாட்டம் கொள்ளவில்லை. அதனோடு தங்கள் மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு போன்ற வற்றைத் தாங்கள் வாழ்ந்த மண்ணில் வேரூன்றுவதற்குத் தங்களால் முயன்ற முயற்சிகளைப் பன்னெடுங் காலமாகத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். அவர்களின் அரும்பெரும் பணியால் பலநாடுகளில் இன்று தமிழ் மொழியின் மணம் கமழ்ந்து கொண்டிருக்கிறது. அங்ஙனம் மணம் வீசும் ஐந்து கண்டத்திலிருந்து அனுபவமிக்கப் பேச்சாளர்கள் "தமிழ்கூறும் நல்லுலகம்" என்ற தலைப்பில் தங்கள் உரையை ஆற்றினார்கள். முதலில் அமெரிக்கா கண்டத்திலிருந்து முனைவர் சோமலெ சோமசுந்தரம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அமெரிக்காவில் அடுத்த தலைமுறையினருக்குத் தமிழைக் கொண்டு சேர்க்க இசை, நடனம், சமயம் என்று பல்வேறு வழிகளில் அவர்கள் மேற்கொண்டு வரும் முயற்சிகளைப் பற்றி எடுத்துரைத்தார். அடுத்ததாக, ஆசிய கண்டத்திலிருந்து பேராசிரியர் முனைவர் நா. கண்ணன் அவர்கள் இன்றைய தொழில் நுட்பத்தின் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில் பல்வேறு தடைகளைக் கடந்து இன்று இணைய உலகில் பீடு நடை போடும் தமிழ் மொழிக்கு ஏற்பட்ட சவால்களைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். அடுத்ததாக, ஆப்பிரிக்கா கண்டத்திலிருந்து திரு. லயன் ஜி. சிவசன்முகம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். சீஷெல்ஸ் நாட்டில் வாழும் இன்றைய பிள்ளைகளிடம் நம்முடைய கலாசாரத்தையும், பண்பாட்டையும் தாய் மொழியின் வழியே கொண்டு சேர்க்க முடியும் என்பதை உணர்ந்து அதற்காக அவர்கள் முன்னெடுத்து முயற்சிகளைப் பற்றி எடுத்துரைத்தார். அடுத்ததாக, ஐரோப்பா கண்டத்திலிருந்து முனைவர் அலெக்சிஸ் தேவராஜ் சேன்மார்க் அவர்கள் உரையாற்றானர். இங்கிலாந்து, ஜெர்மனி, ஸ்காட்லாந்து, போலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் தமிழின் வளர்ச்சிக்குப் பல்வேறு அறிஞர்கள், தமிழ்ச்சங்கங்கள், அமைப்புகள், கழகங்கள் போன்றவை அரும் பாடுபட்டு வருவதைப்பற்றிப் பகிர்ந்துகொண்டார். நிறைவாக, ஆஸ்திரேலியா கண்டத்திலிருந்து நாகை கா. சுகுமாரன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். தாய் மொழி சிந்தனையைப் பெற்றவன் தரணி ஆள்வான் என்ற கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் ஆஸ்திரேலியா தமிழர்கள் கல்வி, அரசியல், பொருளாதாரம், பொழுது போக்கு என்று பலதுறைகளில் சிறந்து விளங்குவதைப் பற்றிப் பகிர்ந்துகொண்டார். மேலும் பன்முகக்கலாசாரமிக்க ஆஸ்திரேலியாவில் தமிழை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்க அவர்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைப்பற்றிப் பகிர்ந்துகொண்டார்.

அடுத்ததாக, தலைமை பொறுப் பேற்று சிறப்பாக இந்நிகழ்வை நடத்திய ஏற்பாட்டுக்குழு தலைவர் திரு. சந்தோஷ் அவர்கள் ஏற்புரை வழங்கினார். இந்தநிகழ்ச்சியைப் பொறுப் பேற்று நடத்தியதன் மூலம் புதிய அனுபவத்தைப் பெற்றதோடு மட்டட்ற்றமகிழ்ச்சியும் பெருமையும் கொள்வதாகக் கூறினார்.

நிறைவாக, நன்றியுரை ஆற்றினார் செயலாளர் செல்வி ஸ்வர்ணா வீரப்பன் அவர்கள். ஏற்பாட்டுக் குழுவினர், ஆதரவாளவர்கள், சிறப்புப் பேச்சாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என்று இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற ஆதரவாக நின்ற அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். "தேமதுர தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் வரிகளுக்கேற்ப பல்வேறு கண்டங்களில் தமிழ் முழங்கி வருகின்றது என்பதன் எதிரொலியாக ஐந்து கண்டங்களிலிருந்து பேசிய பேச்சாளர்களின் உரை அமைந்திருந்தது. "தமிழ்கூறும் நல்லுகம்" என்ற தலைப்பு உலகளவில் பிறமொழி மற்றும் கலாசாரங்களில் தமிழ் மொழியின் செல்வாக்கைப் பற்றி அறிந்துகொள்ள ஏதுவாக அமைந்திருந்தது என்று தான் சொல்ல வேண்டும். எட்டாம் ஆண்டு நிகழ்ந்த இந்நிகழ்வு இணையத்தின் வாயிலாக எட்டுதிக்கும் பயணித்ததோடு இதனைக் கண்டு களித்ததமிழர்களின் நெஞ்சம் தமிழால் நிறைந்தது என்றால் மிகையில்லை.

**செய்தி: பிரதீபா வீரபாண்டியன்**

# 2021ம் ஆண்டுக்கான ஆஸ்கர் விருதுகள் அறிவிப்பட்டன




சிறந்த துணை நடிகர் - டேனியல் கலுயா (யூதாஸ் அண்ட் பிளாக்மிசியா திரைப்படத்திற்காக)

சிறந்த இயக்குநர் - க்ளோயி சாவ் (நோமேன்லேண்ட் என்ற திரைப்படத்திற்காக)

சிறந்த திரைக்கதை - பிராமிசிங் யங் உமன்

சிறந்த தழுவல் திரைக்கதை - ஃபாதர்

சிறந்த ஆடை வடிவமைப்பு - ஆன் ராத் (மா ரெய்னீஸ் பிளாக் பாட்டம் திரைப்படத்திற்காக)

சிறந்த வெளிநாட்டு திரைப்படம் - அனதர் ரவுண்ட் (டென்மார்க்)

சிறந்த ஒப்பனை மற்றும் சிகை அலங்காரம் - செர்ஜியோ லோபஸ் நிவேரா, மியா நில், ஜமிகா வில்சன்

சிறந்த அனிமேஷன் குறும்படம் - இஃப் எனிதிங் ஹேப்பன்ஸ் ஐ லவ் யூ

லைவ் ஆக்ஷன் குறும்படம் - ட்ரூ டிஸ்டேண்ட் ஸ்ட்ரேஞ்சர்

முழுநீள அனிமேஷன் படம் - சோல்

சிறந்த ஒலி அமைப்பு - சவுண்ட் ஆஃப் மெட்டல்.

# BEST INDIAN ASTROLOGER & PSYCHIC

## Pandit: VEERANANDA

காசியில் இருந்து வருகை தந்துள்ளார்

31 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 11 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்




உலகத்தில் சுரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே

இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்



**MOST POWERFUL SPIRITUALIST**

Family, Money, Childless, Health, Depression, Negativity, Husband Wife, Relationship, Marriage, Enemy, Court, Jealousy, Business, Work,Curses

- கை பார்த்து, முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். டிகைட்டம் பார்த்து
- ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
- இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
- செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி,
- நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம்,
- காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு சொல்லப்படும்
- ஏந்தப் பிரச்னையாக இருந்தாலும் 5 நாட்களில் தீர்வு காண்பார

**Removes Black Magic, Jadoo, Vodoo, Obeya, Witchcft, Jinn Curses, & Gives 100% Protection**

- சர்க்கரை வியாதி
- ஆஸ்துமா
- தீராத கை-கால் வலி
- அல்சர்
- தோல் வியாதி
- அலர்ஜி
- மூட்டு வலி
- உடல் பருமான்
- அதிகரிக்க – குறைக்க
- காக்கா வலிப்பு
- ஆண்மை குறைவு
- ஞாபக சக்தி குறைவு
- மூலம்
- சிறுநீர்க் கோளாறு
- பெண்களுக்கான
- மாதவிடாய் பிரச்சனைகள்
- நரம்புத் தளர்ச்சி
- சரவாங்கி
- வாயுக்கோளாறு
- தலைவலி
- கழுத்து வலி
- முகப்பரு, தேமல்
- வெண்கு'டம்
- வாதம்
- மஞ்சல் காமாலை
- முடி உதிர்வு, உ'டணம்
- பக்கவாதம்
- நரம்பு வாதம்

எந்தவித பக்கவிளைவுகளும் கிடையாது நம்பி வாரீர் நலமுடன் வாழ்வீர

**ஆயுர்வேத சிகிச்சை**

**Call For Appoinment: 647-858-3355**

**1101 Victoria Pank Ave, # 3 , Scarborough ON M4B 2K2**

**Opp. NO FRILLS, ( VICTORIA PARK & ST CLAIR AVE )**

# இவ்வார ராசிபலன்

## 30-04-2021 வெள்ளி தொடக்கம் 06-05-2021 வியாழன் வரையும்




**மேஷம்:** பொல்லாத காலங்கள் சொல்லாமல் விலகக்கூடிய அற்புதமான வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரித்து குடும்பம் ஒன்று சேரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பிரளயதேவி, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**ரிஷபம்:** ஆதாயமும். ஆதாரமும். அதிகாரமும் சேரக்கூடிய அற்புதமான வாரம். சுய விடு வாங்க முயற்சி செய்யலாம். மங்களமான நாள். அரசு வாய்ப்பு தடைப்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். திருமண முயற்சி வெற்றி தரும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வேலவப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Z




**மிதுனம்:** ஆலய தரிசனத்தால் ஆத்மபலம் பெறக்கூடிய அற்புதமான வாரம். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். பழைய கடன் வசூலாகும். வாகனச் செலவு ஏற்படும். வெளிநாட்டு தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத் தொழிலில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். உதவிகள் கிடைக்கும் நாள். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: நவ தேவதை, அதிர்ஷ்ட எண்: 6,9,2,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள் P,U




**கடகம்:** மேலான ஆசியும், மேதைகளின் நட்பும் கிடைக்கக்கூடிய வாரம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். கணினி துறையில் ஊதிய உயர்வு கிட்டும். திறமைகள் வெளிப்படும் நாள். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகள் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: பஞ்சபூதக்கடவுள், அதிர்ஷ்ட எண்: 6,0,2,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,N




**சிம்மம்:** இனிய கனாக் காணவும், இன்ப உலா செல்லவும் இனிமையான வாரம். காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: சுக்கிர பகவான், அதிர்ஷ்ட எண்: 4,6,1,5
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P




**கன்னி:** வீணான அலைச்சலும், வேதனைக் காலங்களும் விலகக்கூடிய அற்புதமான வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தேவி காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**துலாம்:** வாடும் நிலை விலகி வீடு, நிலமும் வாங்கக் கூடிய நல்ல வாரம். சிக்கனத்தை கையாள வேண்டும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். உடல் நலனில் அக்கறை தேவை. குடும்பத்தில் அமைதி நிலவும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கைகூடும். நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மன மகிழ்ச்சி அதிகர. இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஏழுமலை ஆண்டவர், அதிர்ஷ்ட எண்: 3,4,6,8
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,P




**விருச்சிகம்:** அனைத்து விதத்திலும் ஆதாயம் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். விரக்திகள் மறையும். வாகனத்தில் செலவு ஏற்படும். கலைத்துறையில் கௌரவம் கூடும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். உடல்நலம் சீராகும். உற்சாகம் மேலோங்கும். உறவுகளால் நன்மை ஏற்படும். பயணம் வெற்றிதரும். நீண்டநாள் கனவு நிறைவேறும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. திண்டாட்டங்கள் மறையும். வேதனைகள் சாதனையாகும். சொந்த முயற்சிகள் பலன் கொடுக்கும். உத்தியோக உயர்வு கிட்டும்..
வழிபடவேண்டிய தெய்வம்: திருமுருகக் கடவுள், அதிர்ஷ்ட எண்: 3,8,4,9
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,H




**தனுசு:** மனைவி மக்களால் மகிழ்ச்சி ததும்பக்கூடிய மகத்தான வாரம். இல்லம் தேடி வாய்ப்பு வரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். உறவுகளால் செலவு அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. பொருளாதாரம் மேம்படும். துணிவோடு செயல்படுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: சயன கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,9,8,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,K




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மகரம்:** தொழில் வகையில் மேன்மையும், தொகைதொகையாய் லாபமும் சேரக்கூடிய வாரம். வீடு, மனை யோகம் உண்டு. விவசாயம் லாபம் தரும். வியாபாரம் மந்தமாக இருக்கும். எதிர்ப்புகள் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். சேமிப்பு அதிகரிக்கும். ஆடம்பர பொருள் சேரும். பண வரவு மேலோங்கும். பாக்கிகள் வசூலாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உழைப்பு கடுமையாக இருக்கும். மனித நேயம் மிகுதியாகும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். குடும்பத்தில் குழப்பம் தீரும். சுபச் செய்தி தேடி வரும். ஆபரணப் பொருள் களவு போகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மங்கள மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,6,4,0
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,N




**கும்பம்:** வீரியமான செயல்பாடுகளால் விசேஷமான பலன்கள் கிடைக்கக்கூடிய வாரம். கன்னிப் பெண்களின் உற்சாகம் அதிகரிக்கும். உங்களால் மற்றவர்களுக்கு அதிகம் நன்மைகள் கிடைக்கும். திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். உறவினர் வருகை உண்டு. பெற்றோரின் ஆசி கிடைக்கும். கர்ம வினைகள் அகலும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. நிதானத்தோடு செயல்பட வேண்டும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். உடல் பொலிவு கூடும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சுவாமி தர்மசாஸ்த்தா, அதிர்ஷ்ட எண்: 2,1,0,0
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,R




**மீனம்:** நாடிய பொருளும் தேடி வாய்ப்பும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். கடன் உபத்திரவம் குறையும். குடும்ப கௌரவம் ஓங்கும். மற்றவர் தொல்லை நீங்கும். வெற்றி நிலை தொடரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். எதிர்பாராத லாபம் சேரும். எண்ணிய காரியம் கூடும். இல்லத்தில் நல்லவை நடக்கும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவிசேரும். பழையக் கடன் தீரும். புதிய வாய்ப்பு கூடும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். மாற்று எண்ணம் உதயமாகும். பெண்களின் திறமை பெருமை தரும். கற்பனை ஆற்றல் பெருகும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மீனாட்சிஅம்மன், அதிர்ஷ்ட எண். 5,3,0,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,W

*(20ம் பக்கத் தொடர்ச்சி)*

## சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

உட்கார்ந்து பார்க்க முடியவில்லையே!

காதலும் வீரமும் அழகாக காட்டப்பட வேண்டும். நானும், அண்ணனும் (எம்ஜிஆர்) நடிச்சுட்டிருந்த காலத்தில, எப்படி அழகா காதலையும் வீரத்தையும் சித்தரித்தோம்... இன்றைக்கு அந்த நிலையில்லாதது வருத்தமாகத் தான் இருக்கிறது! இதையெல்லாம் நம்ம டைரக்டர்களும், கதாசிரியர்களும், மனசுல வைத்துக்கொண்டு படம் எடுக்க வேண்டும்.

அதுதான் நல்ல சென்சார்..!

இப்போதெல்லாம் நான் சினிமாவே பார்ப்பதில்லை.. பார்க்க முடியல.. அதனால தான் படிப்பு.. படிப்பு.. என்று நல்லபடியா நேரத்தை செலவு பண்றேன்.

"உங்கள் மூலம் வெளிப்பட்ட கலை அடுத்த தலைமுறைக்கும் பயன்பட ஏதாவது செய்ய வேண்டும் என்று நீங்கள் யோசிப்பது உண்டா?"

"ஆமாம், 24 மணி நேரமும் நான் அது பற்றியே யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்று யாராவது சொன்னா அவனை மாதிரி பொய்யன் உலகத்திலேயே யாரும் கிடையாது! அப்படிப் பொய் சொல்ல நான் தயாராக இல்லை. வீடு நல்லா இருந்தா தான்யா மற்றதெல்லாம்... பொருளாதாரத்தைப் பொறுத்து ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் ஷூட்டிங் ஷூட்டிங் என்று இருந்து என் குழந்தைகளோட அன்பை இழந்தேன். குடும்பத்தைப் பேணிக்கல.. அதுக்கெல்லாம் சேர்த்து என் பேரக் குழந்தைகளோடு பொழுதை சந்தோசமாகக் கழிச்சிட்டிருக்கேன்!

கலையை வாழவைக்கிறதைப் பத்தியெல்லாம் நான் யோசிக்கிறதில்லை, கலையை யாரும் காப்பாத்த வேண்டாம். கலை தானா வாழும்!"

உணர்ச்சிவசப்படுகிறார் சிவாஜி... அது கலை மீது அவருக்கு ஏற்பட்ட வெறுப்பின் வெளிப்பாடல்ல! கலை மீது கொண்ட காதலால்..ஆதங்கத்தால் ஏற்பட்ட உணர்ச்சிச் சிதறல் என்பது தெரிந்தது... விடைபெற்றேன்...

செவாலியர் சிவாஜி ரசிகர் ஒருவரின் பாராட்டுக் கவிதை (இதயம் பேசுகிறது இதழில் வெளியானது)

செவாலியர் சிவாஜி
எத்தனை பிறவிகள்
இக்கலைஞன் எடுத்த ஒரு பிறவிக்குள்!

தன் உணர்ச்சிகளை சட்டை போல்
கழற்றி வைத்து,
பாத்திரத்தின் உணர்ச்சிகளை நெஞ்சில் ஏற்றி,
குரலிலும் முகத்திலும்
மூச்சிலும் அசைவிலும்
நரம்பிலும் தசையிலும்
அது தெறித்து உயிர்க்க,
புதிது புதிதாக
எத்தனைப் பிறப்பு!

இக்கலைஞனுக்கு
வருடத்தின் நாட்கள் அத்தனையும்
பிறந்த நாள்தான்!
அரசனின் மிடுக்கு
ஆண்டியின் குழைவு
துறவியின் கம்பீரம்
கடவுளின் கருணை
என "பாவங்கள்" அனைத்தும்
எப்படி ஒருவருக்குள் தஞ்சம்?

நாட்டின் தலை சிறந்த விருது பெற்ற
வடநாட்டு கலைஞனும்,
பயின்று பயனடைந்த கலைச்
சிகரத்திற்கு நாடுதரத்
தவறிய விருதுகள் கம்பீரம் குழைந்தன!

உலகமே விழிவிரித்து கைகுலுக்கி
தலைவணங்கி நிற்கையிலே,
இனி நாடு தரும் போதெல்லாம்,
பல் முளைத்து, சொல் முளைத்து
கால் முளைத்த பிள்ளைக்கு
பருவம் கடந்த பரிசாகத்
தரும் தங்கத் தொட்டில் தான்!

அருமை தெரியாத இடந்தனில்
செங்கரும்பும் - இலுப்பைப் பூ!

விருதுகள் பல ஏங்குகின்றன,
காதலனை பிரிந்த காதலி போல்.

*காட்சிகள் நினைவுகள் விரியும்.*
*-வீணை மைந்தன்*

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





25 வருடங்கள்

## உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

**416 269 7198**




**வந்தியத்தேவனின் குடந்தைப் பயணம்... *(அத்தியாயம் #9)***

குந்தவை பெண்களைப் பார்த்து, 'உங்களிற்கு மரியாதை தெரியாதா? அன்னிய புருக்ஷன் இருக்கும் போது இப்படி அடக்கமில்லாமல் இருப்பதா? சிரிப்பதா? நாம் தனியாக இருக்கும் போது எதுவும் செய்யலாம். சோழ நாட்டுப் பெண்களிற்கு அவமானம் தேடித் தரக்கூடாது' என்றாள். முதலை எப்படி இந்த மரத்தடி வந்தது என்று வாசகர்களுக்குச் சொல்லுகிறோம். குந்தவையின் தோழியர் வானதி-யைப் பற்றி கதையளந்து முடிந்த போது குந்தவை சொன்னது ஞாபகம் வந்தது. அப்பொழுது அவர்கள் யாவரும் அதைச் செய்தார்கள் செத்துப் போன முதலையின் உடலைப் பதப்படுத்தி அதன் உள்ளே பஞ்சும் நாரும் திணித்து பொம்மை முதலையை நதிக்கரையிலுள்ள பெரிய மர வேர்களின் மேல் போட்டு முதலையை நதி வெள்ளத்தில் பாதி, மர வேரில் பாதியாகக் கிடக்க வைத்தனர். அப்பொழுது 'ஏன் இப்படிச் செய்யச் சொன்னாள் குந்தவை' என்றாள் நிரவதி. 'பயந்தான் கோழை வானதி தைரியசாலியாக மாறுவதற்கே' என்றாள் மந்தாகினி. மேலும் 'வானதியைத் தன் தம்பிக்கு கல்யாணம் செய்யலாம் என்று எண்ணுகிறாள் போலும். இளவரசர் எப்பொழுதாவது கல்யாணம் செய்வதென்றால் ஒரு தமிழ் பெண்ணைத்தான் மணந்து கொள்வாராம்' என்றாள் செந்திரு. அக்கணம் குந்தவையும் வானதியும் அங்கு வந்து சேர்ந்தார்கள். பின்னர் குந்தவையும், அவள் தோழியரும் சற்றுத் தூரம் படகில் சென்று நீரில் விளையாட இறங்கினார்கள். அப்பொழுது ஒரு பெண் ஐயோ முதலை முதலை என்று கத்தினாள். அவளைத் தொடர்ந்து ஐயோ முதலை பயமாக இருக்கிறதே என்று கூச்சலிட்டுக் கொண்டு ஓடினார்கள். வானதி மட்டும் 'அக்கா அக்கா பயப்படாதீர்கள் அவர்களுக்குச் சொல்லுங்கள் தரையில் கிடக்கும் முதலைக்கும் பலமில்லை முதலைக்குத் தண்ணீரில் தான் பலமதிகம்.' என்று கூறினாள். அதற்குக் குந்தவை, 'அடியே இது நிஜமில்லை. யாருனக்குச் சொன்னார்கள்' என்று கேட்க, 'இது நிஜமென்றால் கூட எனக்குப் பயமில்லை ஆனால் பல்லி என்றால் கரப்பான் பூச்சி என்றால் பெரும் பயம்' என்று வானதி கூறினாள். இத்தருணத்தில் தான் வந்தியத்தேவன் அங்கு வந்து நின்றான். குந்தவை ஏன் வானதியிடம் தனி அக்கறை கொண்டிருந்தாள் என்று பார்ப்போம்.

சோழ ராஜ்ஜியம் நாளுக்கு நாள் வலுப்பெற்றுக் கொண்டு வந்தது. மகா இராச கேசரி வர்மர் பராந்தக சுந்தரசோழ மன்னன் தென்னாட்டில் இணையில்லாச் சக்கரவர்த்தியாக விளங்கி வந்தார். இவருக்கு முன் கண்டராதித்தர் அரசாண்டார். இவர் ஒரு சிவ பக்கதன் ஆகையால் ராஜ்ஜியத்தை விஸ்தரிப்பதில் பெரும் அக்கறை கொள்ளவில்லை. கண்டராதித்தரைத் தொடர்ந்து அவர் சகோதரர் பட்டத்திற்கு வந்தார். இவரும் ஒரு வருடம் அரசை ஆட்சி புரிந்தார். இவர் மகன் சுந்தர சோழன் ஆட்சியில் அமர்ந்தார். இவர் போர் ஆற்றல் படைத்தவர். எல்லா சிறப்பம்சங்களையும் கொண்டவர். இவர் தென்திசைக்கு படையெடுத்துச் சென்று மதுரை மன்னன் வீர பாண்டியனுடன் போரிட்டான் அப்பொழுது வீரபாண்டியன் துணை செய்ய சிங்கள் நாட்டு அரசன் மகிந்தன் ஒரு பெரிய சேனையை அனுப்பி வைத்தான். சோழர்களின் வீர சைதன்யமும் பாண்டியருடைய சேனையும் சிங்கள நாட்டுப் படையைத் தோற்கடித்தது. அப்பொழுது வீர பாண்டியன் முடியிழந்து, படையிழந்து, துணையிழந்து மலைக்குகையில் ஒழிந்து கொண்டான். சோழருக்கும் பாண்டியருக்கும் நடக்கும் போர்களுக்கு சிங்கள மன்னர்கள் பாண்டியருக்கு உதவி படை அனுப்புவது வழக்கமாயிற்று. இந்த வழக்கத்தை விடும்படி சுந்தர சோழன் அவர்களுக்கு ஒரு புத்தி கற்பிக்க சோழர் படை ஒன்றை இலங்கைக்கு, கொடும்பாணர் சிற்றரசர் குடும்பத்தைச் சேர்ந்த பராந்தகன் சிறிய வேளாளன் எனும் தளபதியின் தலைமையில் அனுப்பி வைத்தார். அப்படை துரதிஷ்ட வசமாகத் தோற்கடிக்கப்பட்டு சோழ சேனாதிபதியான சிறிய வேளாளன் வீர மரணத்தைத் தழுவிக்கொண்டான். இவர் குந்தவையின் தோழி வானதியின் தந்தை. இதையறிந்த வீர பாண்டியன் பெரும் படை திரட்டி மீண்டும் போர் செய்ய வந்தான். அப்பொழுது சுந்தர சோழனின் மூத்த குமாரன் ஆதித்தகரிகாலன் முன்னின்று பராக்கிரம செயல்களை புரிந்து, வீர பாண்டியனைத் தலை கொண்டான். வீர பாண்டியனுக்குத் துணை நின்ற சிங்கள மன்னன் மகிந்தனுக்கு பாடம் கற்பிக்க மீண்டும் பெரும் படை தயாரானது. அதற்குத் தலைமை வகிக்க பலர் போட்டியிட்டனர். இந்நிலையில் அருள்மொழிவர்மன் சுந்தர சோழனின் இளைய மகன், பழையாறை அரண்மனையின் செல்லப் பிள்ளை, 19 வயது நிரம்பிய அழகிய தோற்றப் பொலிவுள்ள வாலிபன், ஈழமண்டல படைகளுக்கு தலைமை வகிக்க முன் வந்தான். அச்சமயம் சுந்தரசோழனின் மூத்த மகன் ஆதித்த கரிகாலன் திருமுனைப்பாடி நாட்டிலும், தொண்டை மண்டலத்திலும் சில நாளாக ஆதிக்கம் செலுத்தி இரட்டை மண்டலப் படைகளை முறியடித்து காஞ்சியை வாசஸ்தலமாகக் கொண்டார். மேலும் வடதிசை படையெடுத்துச் செல்ல ஆயத்தமானார். இதே சமயம் அருள்மொழிவர்மனின் அருமை அக்காள் குந்தவை, உலகத்தை ஒரு குடையின் கீழ் ஆளப் பிறந்தவன் என்ற அடையாளங்களான, சங்கு சக்கர ரேகையை அவன் கையில் காணும்

போது, இது என்ன விதி இவன் பிறப்பு இப்படிச் சொல்லுகிறதே! ஆனால் இவன் கடைக்குட்டி இவனிற்கு மேல் வயதில் மூத்தவர்கள் இருவர். அப்படி இருந்தும் இவனுக்கு ராஜ்ஜியம் ஆளும் பெரும் பாய்க்கியம் கிடைக்கும் என்ற குழப்பநிலையில் இப்பொழுது கிடைக்கும் சந்தர்ப்பம் ஒரு பெரிய வரம் அதனால் அருள்மொழிவர்மரையே ஈழத்திற்கு போகும் படைகளுக்குத் தளபதியாக அனுப்பவேண்டும் என்று தீர்மானித்தாள். அதைத் தன் தம்பியிடம் 'தம்பி அருள்மொழி உன்னை ஒரு கணம் பிரிந்திருப்பது என்பது எனக்கு எத்தனையோ கனமாக இருக்கிறது. ஆயினும் நானே உன்னைப் போகச் சொல்ல வேண்டடிய சமயம் வந்து விட்டது. இலங்கைப் படையின் தலைவனாக நீ தான் போகவேண்டும்' என்றாள். 'என் தமக்கை குந்தவைதேவியே முடிவெடுத்தபின் இனித் தடை எதுவும் கிடையாது.' சுந்தர சோழரும் தன் செல்லப் புதல்வியில் மிகுந்த ஆசையும், நம்பிக்கையும் கொண்டிருந்தார். இதன் படி அருள்மொழிவர்மரே இலங்கைப் படைத் தலைவராகச் செல்ல தீர்மானம் எடுக்கப்பட்டது. தன் அருமைத் தம்பியை போர் முனைக்கு அனுப்ப

பழையாறின் பிரதான மாளிகையில் மங்கள நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தாள். அருள்மொழிவர்மர் புறப்பட்ட போது வெற்றி முரசுகள் முழங்கின. சங்கங்கள் ஆர்ப்பரித்தன. சிறு பறைகள் ஒலித்தன. வாழ்த்துக் கோஷங்கள் வானை அளவளாவின. சோழகுலத் தாய்மார்கள் அனைவரும் ஆசி கூற, நெற்றியில் மந்திரித்த திருநீறை அணிவித்து திருவடி கழித்து வழியனுப்பினார்கள். குந்தவை தோழியர் தங்கத்தட்டுக்களில் தீபம் ஏந்தியபடி அரண்மனையின் வீதி வாசற்படியில் இறங்கும் இடத்தில் நின்றார்கள். அதில் வானதியும் நின்றாள். அருள்மொழிவர்மர் வீதியில் இறங்கிச் செல்ல தீபம் ஏந்திய பெண்களைக் கடந்து சென்றார். அப்பொழுது வானதியின் மேனி நடுங்க அவள் தீபத் தட்டு கீழே விழ அவள் மயக்கடைந்தாள். அவள் ஏந்திய தீபம் மட்டும் அணையாது எரிந்து கொண்டிருந்தது அப்பொழுது அங்கு நின்ற முதியவர்கள் இது நல்ல சகுனம் என்றே கூறினர்.

குந்தவை தன் தம்பி அருள்மொழிக்கு விடை கொடுக்காது தன் தோழி வானதியை அணைத்தபடி இருந்தாள். அப்பொழுது அருள்மொழிவர்மன் ஒரு ஆளை அனுப்பி மயக்கமடைந்த பெண் தேறிவிட்டாளா என்று விசாரிக்கச் சொன்னான். குந்தவை அந்த ஆளிடம் 'அருள்மொழியை இங்கு வரச் சொல்' என்று கூறி அந்த ஆளைத் திருப்பி அனுப்பினாள் தன் தமக்கை சொல்லைத் தட்டாத அருள்மொழி திரும்பி அரண்மனைக்கு வந்தார். அப்பொழுது தன் தமக்கை வானதியை தன் மார்பில் சாத்தி அவளுக்குப் பணிவிடை செய்தாள். அந்தக் காட்சி அருள்மொழியின் மனதைத் தொட்டது, உடனே 'அக்கா இவள் யார்' என்று வினவினான். 'இலங்கை சென்று போர்க்களத்தில் மாண்ட கொடும்பனார்க்கு சிறிய வேளாளனின் மகள் வானதி கொஞ்சம் பயந்த சுபாபம் உடையவள்' என்றாள்.




அப்பொழுது மயக்கம் தெளிந்த வானதி அருள்மொழிவர்மர் எதிரே நிற்பதைக்கண்டு கண்கள் அகன்று விரிய, முகம் மலர புன்னகை பூத்து நாணத்துடன் சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள். கண்களில் நீர் ததும்ப 'அக்கா நான் இவ்வாறு செய்துவிட்டேனே' என்றாள் அதற்கு அருள்மொழிவர்மர் 'அதற்காக நீ ஒன்றும் கவலைப்படாதே! வானதி தவறு யாருக்கும் நேர்வதுதான். மேலும் உனக்கு அவ்வாறு நேர்வதற்கு முக்கிய காரணம் இருக்கிறது, இதை நாம் கதைத்துக் கொண்டிருந்தோம்.' என்று ஆறுதல் கூறினான். இதைக் கேட்ட வானதி ஆச்சரியம் கொண்டாள். பெண்களை ஏறிட்டுப் பார்க்காத சுபாவம் கொண்ட இளவரசர் எனக்கு ஆறுதல்

கூறுகிறார் நான் என்ன பாய்க்கியம் செய்தேன் என்று எண்ணினாள். 'அக்கா சேனைகள் காத்திருக்கின்றன நான் போய் வருகிறேன் நீங்கள் எனக்கு செய்திகள் அனுப்பும் போது இந்தப் பெண்ணின் உடல் நிலை குறித்தும் அனுப்புங்கள்' என்று கூறி விடை பெற்றான். அதிலிருந்து குந்தவை வானதியிடம் தனி அன்பு காட்டத்தொடங்கினாள். தான் கற்ற கல்வியையும், கலையையும் அவளுக்கும் கற்பித்தாள். தன் அந்தரங்கங்களைப் பகிர்ந்து கொண்டாள். தன் இணைபிரியாத் தோழியாக ஆக்கிக்க கொண்டாள். தன் இளைய சகோதரன் அருள்மொழிவர்மனின் வருங்காலம் குறித்த கனவுகளைக் கூட வானதியிடம் பகிர்ந்து கொள்வாள். இப்படியாக வானதியும், குந்தவையும்

உற்ற தோழியர் ஆயினர். அருள்மொழிவர்மனுக்கு தகுந்த மணமகள் வானதி என்று தீர்மானம் செய்தாள். இதனால் குந்தவை வானதியிடம் மிக்க அன்பும், கரிசனையும் கொண்டிருந்தாள். ஆழ்வார்க்கடியான் நம்பி திருமலையப்பன் வீரவைஷ்ணவர் கொள்ளிடத்தில் அரசமரத்தடியில் வந்தியத்தேவனுடன் உரையாடிக் கொண்டிருந்தான். வந்தியத்தேவன் குதிரையில் ஏறி குடந்தை நோக்கிப் புறப்பட்டதும் என்ன ஆனான் எனப் பார்ப்போம். ஆழ்வார்க்கடியானால்

யார் இந்த வந்தியத்தேவன் என்று தெரிந்து கொள்ளமுடியவில்லை என்ற வெறுப்பில் தனக்குத்தானே புலம்பிக் கொண்டிருந்தான். அந்த அரச மரத்தடியில் அப்பொழுது கந்தமாறனின் ஆள் வந்தியத்தேவனுடன் படகில் வந்தவன் வந்தியத்தேவனுக்கு குதிரையை சம்பாதித்துக் கொடுத்தவன் அங்கு வந்து 'சுவாமி என்ன அரச மரத்துடன் பேச்சு' என்று கேட்க ஆழ்வார்க்கடியான் 'அப்பனே நீ யார்?' என்று கேட்க அவன் 'என் பெயர் இடும்பன்காரி' என்றபடி தன் இரு கைகளாலும் மீனைப் போல் சமிக்கை செய்தான். *தொடரும்...*

---

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன**

---

# சந்திர மண்டலத்திற்குச் சென்ற முதல் விண்வெளி வீரர்களில் ஒருவரான மைக்கல் கொலின்ஸ் காலமானார்



புற்றுநோயால் அவதிப்பட்ட கொலின்ஸ் என்னும் இந்த வீரர் கடந்த புதன்கிழமை மரணமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது அப்பலோ விண்கலம், 1969 ஆம் ஆண்டில் நிலவில் மனிதன் முதலில் கால்பதித்த சம்பவத்திற்கு பெயர்பெற்றது. அதன் விமானி, மைக்கல் கொலின்ஸ் சக விண்வெளி வீரர்கள் நீல் ஆம்ஸ்ட்ரோங், பஸ் ஆல்ட்ரின் ஆகியோர் நிலவில் கால் பதிக்கச் சென்றபோது, விண்கலத்தில் தனியாக இருந்தார்.

அதற்காகவே, "வரலாற்றில் மிகத் தனிமையான மனிதன்" என்று அப்போது வருணிக்கப்பட்டார்.

நிலவுப் பயணம், பூமி குறித்த தம்முடைய கண்ணோட்டத்தை முழுமையாக மாற்றிவிட்டதாகக் கொலின்ஸ் கூறியிருந்தார். பூமி மிகவும் வலிமையற்றது என்றும், அதைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை தாம் உணர்ந்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார். கொலின்ஸின் மரணத்திற்கு 91 வயதான பஸ் ஆல்ட்ரின் தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

இத்தாலியில் பிறந்த கொலின்ஸ் விமானப்படை விமானியாக இருந்து பின்னர் ஜெமினி திட்டத்தில் விண்வெளி வீரரானார். விண்வெளியில் மிதந்த மூன்றாவது அமெரிக்கராக அவர் உள்ளார். மைக்கேல் கொலின்ஸ், சுமார் 238,000 மைல்கள் பயணித்து நிலவை நெருங்கினார். நிலவில் இருந்து 69 மைல்கள் தொலைவுக்கு வந்தபோதும், நிலவில் கால் வைக்கவில்லை. ஆல்ட்ரின் மற்றும் ஆம்ஸ்ட்ரோங் இருவரும் நிலவின் மேற்பரப்பில் இருந்தபோது அவர் கிட்டத்தட்ட ஒரு நாள் சுற்றுப்பாதையில் கழித்தார்.

இந்த தருணத்தில் தான் தனிமையில் இருக்கவில்லை என்றும், ஒரு கட்டுப்பாட்டு அமைப்பின் சிறப்பு விமானியாக இருந்ததால், விண்வெளி பயணத்தின் ஒரு முக்கிய அங்கமாக உணர்ந்ததாகவும் மைக்கேல் கொலின்ஸ் கூறியது குறிப்பிடத்தக்கது.

# அன்பின் தொனி - 609

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

**நெருக்கத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்**

கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. அவர் கிருபை என்றுமுள்ளதென்று இஸ்ர வேல் சொல்வதாக. அவர் கிருபை என்றுமுள்ளதென்று, ஆரோனின் குடும்பத்தார் சொல்வார்களாக. அவர் கிருபை என்றுமுள்ளதென்று, கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் சொல்வார்களாக. நெருக்கத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், கர்த்தர் என்னைக் கேட்டருளி விசாலத்திலே வைத்தார். கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான்? எனக்கு அநுகூலம் பண்ணுகிறவர்கள் நடுவில் கர்த்தர் என் பட்சத் தில் இருக்கிறார், என் சத்துருக்களில் சரிக்கட்டுதலைக் காண்பேன். மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர்பேரில் பற்றுதலாயிருப்பதே நலம். பிரபுக்களை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம். எல்லா ஜாதியாரும் என்னை வளைந்துகொள்ளுகிறார்கள், கர்த்தருடைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன். என்னைச் சுற்றிலும் வளைந்து கொள்ளுகிறார்கள், கர்த்தருடைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன். தேனீக் களைப்போல என்னை வளைந்துகொள்ளுகிறார்கள், முள்ளில் பற்றின நெருப்பைப்போல அணைந்து போவார்கள், கர்த்தருடைய நாமத்தினால் அவர்களைச் சங்கரிப்பேன். நான் விழும்படி நீ என்னைத் தள்ளினாய், கர்த்தரோ எனக்கு உதவி செய்தார். கர்த்தர் என் பெலனும், என் கீதமுமானவர், அவர் எனக்கு இரட்சிப்புமானார். நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட் சிப்பின் கெம்பீரசத்தம் உண்டு, கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும். - **சங்கீதம் 118: 1-15**

**கர்த்தர் நம்மைப் பிரகாசிப்பிக்கிற தேவனாயிருக்கிறார்**

கர்த்தரின் வலதுகரம் உயர்ந்திருக்கிறது, கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும். நான் சாவாமல், பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன். கர்த்தர் என்னை வெகுவாய்த்தண்டித்தும், என்னைச் சாவுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. நீதியின் வாசல்களைத் திறவுங்கள், நான் அவைகளுக்குள் பிரவேசித்துக் கர்த்தரைத் துதிப்பேன். கர்த்தரின் வாசல் இதுவே, நீதிமான்கள் இதற்குள் பிரவேசிப்பார்கள். நீர் எனக்குச் செவிகொடுத்து, எனக்கு இரட்சிப் பாயிருந்தபடியால், நான் உம்மைத் துதிப்பேன். வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளினகல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இது கர்த்தர் உண்டுபண்ணின நாள், இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம். கர்த்தாவே, இரட்சியும், கர்த்தாவே, காரியத்தை வாய்க்கப்பண்ணும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், கர்த்தருடைய ஆலயத்திலிருந்து உங்களை ஆசீர்வதிக்கிறோம். கர்த்தர் நம்மைப் பிரகாசிப்பிக்கிற தேவனாயிருக்கிறார், பண்டிகைப்பலியைக் கொண்டுபோய்ப் பலிபீடத்தின் கொம்புகளில் கயிறுகளால் கட்டுங்கள். நீர் என் தேவன், நான் உம்மைத் துதிப்பேன், நீர் என் தேவன், நான் உம்மை உயர்த்துவேன். கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. - **சங்கீதம் 118: 1-29**

**வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்?**

கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள். அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் அநியாயம் செய்வதில்லை, அவருடைய வழிகளில் நடக்கிறார்கள். உமது கட்டளைகளை நாங்கள் கருத்தாய்க் கைக்கொள்ளும்படி நீர் கற்பித்தீர். உமது பிமாணங்க ளைக் கைக்கொள்ளும்படி, என் நடைகள் ஸ்திரப்பட்டால் நலமாயிருக்கும். நான் உம்முடைய கற்பனைகளையெல்லாம் கண்ணோக்கும்போது, வெட்கப்பட்டுப்போவதில்லை. உம்முடைய நீதிநியாயங்களை நான் கற்றுக்கொள்ளும்போது, செம்மையான இருதயத்தால் உம்மைத் துதிப்பேன். உமது பிரமாணங்களைக் கைக்கொள்ளுவேன், முற்றிலும் என்னைக் கைவிடாதேயும். வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுவதினால்தானே. என் முழு இருதயத்தோடும் உம்மைத் தேடுகிறேன், என்னை உமது கற்பனைகளைவிட்டு வழிதப்பவிடாதேயும். நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன். கர்த்தாவே, நீர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உம்முடைய பிரமாணங்களை எனக்குப் போதியும். உம்முடைய வாக்கின் நியாயத்தீர்ப் புகளையெல்லாம் என் உதடுகளால் விவரித்திருக்கிறேன். திரளான செல்வத்தில் களிகூருவது போல, நான் உமது சாட்சிகளின் வழியில் களிகூருகிறேன். உமது கட்டளைகளைத் தியானித்து, உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன். உமது பிரமாணங்களில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன், உமது வசனத்தை மறவேன். உமது அடியேனுக்கு அனுகூலமாயிரும், அப்பொழுது நான் பிழைத்து, உமது வசனத்தைக் கைக்கொள்ளுவேன். உமது வேதத் திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.. பூமியிலே நான் பரதேசி, உமது கற்பனைகளை எனக்கு மறையாதேயும். உமது நியாயங்கள்மேல் என் ஆத்துமா எக்காலமும் வைத்திருக்கிற வாஞ்சையினால் தொய்ந்துபோகிறது. உமது கற்பனைகளை விட்டு வழிவிலகின சபிக்கப்பட்ட அகங்காரிகளை நீர் கடிந்துகொள்ளுகிறீர். நிந்தையையும் அவமானத்தையும் என்னை விட்டகற்றும், நான் உம்முடைய சாட்சிகளைக் கைக்கொள்ளுகிறேன். பிரபுக்களும் உட்கார்ந்து எனக்கு விரோதமாய்ப் பேசிக்கொள்ளுகிறார்கள், உமது அடியேனோ, உமது பிரமாணங்களைத் தியானிக்கிறேன். உம்முடைய சாட்சிகள் எனக்கு இன்பமும், என் ஆலோசனைக்காரருமாயிருக்கிறது. என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது, உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும். என் வழிகளை நான் உமக்கு விவரித்துக் காட்டினபோது எனக்குச் செவிகொடுத்தீர், உமது பிரமாணங்களை எனக்குப் போதியும். உமது கட்டளைகளின் வழியை எனக்கு உணர்த்தியருளும், அப்பொழுது உமது அதிசயங்களைத் தியானிப்பேன். சஞ்சலத்தால் என் ஆத்துமா கரைந்துபோகிறது, உமது வசனத்தின்படி என்னை எடுத்து நிறுத்தும். பொய்வழியை என்னை விட்டு விலக்கி, உம்முடைய வேதத்தை எனக்கு அருள்செய்யும். மெய்வழியை நான் தெரிந்துகொண்டு, உம்முடைய நியாயங்களை எனக்கு முன்பாக நிறுத்தினேன். உமது சாட்சிகள்மேல் பற்றுதலாயிருக்கிறேன், கர்த்தாவே, என்னை வெட்கத்திற்குட்படப்பண்ணாதேயும். நீர் என் இருதயத்தை விசாலமாக்கும்போது, நான் உமது கற்பனைகளின் வழியாக ஓடுவேன். கர்த்தாவே, உமது பிரமாணங்களின் வழியை எனக்குப் போதியும், முடிவுபரியந்தம் நான் அதைக் காத்துக் கொள்ளுவேன்.
- **சங்கீதம் 119: 1-33**

*தொடரும்...*

ஜீவன் முக்தி (பகுதி) 114

# கேள்வி - பதில்

எள் ஜாதனத்தில் எளக்கு பிரமச்சரியம்தான் வாழ்க்கை என்றிருக்கிறது. அதிலிருந்து 2 வருடங்களாக சந்யாசத்திற்காக தீவிரப் பயிற்சி செய்கின்றேன். ஆனாலும் மனம் கட்டுப்படவில்லை. இப்போது நான் எந்த வாழ்க்கையை தேர்ந்தெடுப்பது? சந்யாசமா? சம்சாரியா?

'உடலைக் கட்டுப்படுத்துவதனால் பிரமச்சரியம் நடக்குமா?' என்றால் நடக்காது. உடலை மாற்றுவதனால் நடக்காது. உணர்வை மாற்றுவதனால் நடக்கும்.
உணர்வை உணர்த்துவதனால் மட்டும்தான் பிரம்மச்சரியம் நடக்கும். இந்த உண்மை புரிந்தது என்றால், உடலை கட்டுப்படுத்த முயற்சிக்க மாட்டீர்கள். உணர்வை உயர்த்த முயற்சி செய்யுங்கள்.

ஆன்மீக சாதகர்கள் மத்தியில் இருக்கின்ற மிகப்பெரிய குழப்பம். 'சன்யாஸமா? சம்சாரமா?
இந்தக் கேள்விக்கு ஒரே தீர்வு என்னவென்றால், நம்முடைய பயோமெமரியை (bio memory) ஆழ்ந்து ஆராய வேண்டும். பயோமெமரி என்றால் நம்முடைய ப்ராப்தம்.
இந்த கேள்விக்கு ஒரே தீர்வு எந்த கர்மங்களால் இந்த உடலை உருவாக்கியிருக்கின்றோம் என்பதைப் பொறுத்து, ஆழ்ந்து தெரிந்து கொள்ள வேண்டிய சத்தியம் இது.

உங்களுக்குள்ளே இரண்டு விஷயங்கள் இருக்கிறது.
முதல் விஷயம்: நீங்கள் எடுத்துக்கொண்டு வந்த கர்மங்கள்.
இரண்டாவது விஷயம்: அதை வாழுகின்ற உங்களுடைய மனம், உங்களின் தனி மனித விழிப்புணர்வு.

உங்கள் தனிப்பட்ட மனம், தனி உணர்வு, நீங்கள் கொண்டு வந்து இருக்கின்ற பிராரப்தத்தைவிட பலம் வாய்ந்ததாக இருந்தால், பிரமச்சரிம்தான் வாழ்க்கை. அந்த மாதிரியான இனிமையான சொர்க்கம் வேறு எதிலும் கிடையாது.
நீங்கள் எடுத்து வந்திருக்கும் பிராரப்தம், உங்களுடைய தனி உணர்வை விட ஆழமாக, பலம் வாய்ந்ததாக இருக்குமானால்... உங்களுக்கு சம்ஸாரம்தான் வாழ்க்கை. சம்ஸார பிராரப்தம் என்றால் வேறு ஒன்றுமில்லை.

நீங்கள் எடுத்த் பிரமச்சரியத்தால், மனம் வேறு எந்தப் பக்கமும் அசையாமல் இருக்க வேண்டும் என்று நினைக்கும்பொழுதே, சம்ஸாரபிராரப்தம் எழுந்திருந்து ஏ! சும்மா இரு, நான் இருக்கிறேன் பார் என்று தன் இருப்பைக் காட்டும். பிராரப்தத்தின் பலம், உங்கள் தனி உணர்வின் பலத்தை விட அதிகமாக இருக்குமானால் சம்ஸாரம்தான் வழி.
சன்யாசமா? சம்சாரமா? என்று மிகப்பெரிய குழப்பம் ஏன் வருகிறது? என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். தன்னால் ஒரு தீக்கமான முடிவை எடுக்கும் தெளிவு இல்லாதபோதெல்லாம், இந்தக் குழப்பம் எழும்.

எந்த வாழ்க்கை வேண்டும் என்ற தெளிவு. இரண்டு வாழ்க்கையைப்பற்றித் தெரியும்போதுதான் பிறக்கும். முதலில் பிரமச்சரிய வாழ்க்கையைப் பார்த்தோமென்றால். அதிலிருக்கும் சுதந்திரமும், ஆனந்தமும் பிரமச்சரிய வாழ்க்கைக்குள் நுழையலாம் எனும் உத்வேகத்தைத் தரும்.
எல்லையில்லா சுதந்திரத்தால் வேறு ஒருவருக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஒருவருக்குக் கட்டுப்படவேண்டிய அவசியம் இல்லை என்ற



விடுதலை உணர்வு, சுதந்திர உணர்வு பிறக்கும். சுதந்திர உணர்வால் பிரச்சனை பிறப்பதில்லை.

திருமண வாழ்க்கையைப் பார்த்தீர்களானால், இரண்டு பேருமே நல்லவர்கள், கணவன் மனைவி இரண்டுபேருமே, ஆனால் தனித்தனியாக தனித்தனியாக இருக்கும்போது மண்ணும் நல்லது, நீரும் நல்லது. குடிப்பதற்கு ரொம்ப நல்லது. ஆகாயத்தில் இருந்து பொழிகின்ற நீர் தூய்மையான மழை நீர். மண்ணும் மிக நல்லது, விளைபொருட்களை, பல பொருட்களை விளைவிக்கிறது. ஆனால் இது இரண்டு சேரும்பொழுது சேறாக மாறிவிடும்.

அந்த மாதிரி தான், தனித்தனியாக இருக்கும் இரண்டு பேரும் தங்கள் சுதந்திரத்தை விட்டுவிட்டு சேரும்பொழுதுதான் பிரச்சினை ஆரம்பிக்கிறது.
தனி மனிதர்களாக இருக்கும்பொழுது, இருவருக்குமே ஒரு பெரிய சுதந்திரம் இருக்கிறது. உண்மையை உள்ளவாறு சொல்ல வேண்டுமென்றால்... கல்யாணம் ஆகி, ஐந்து வருடங்கள் வாழ்ந்தீர்களென்றால் போதும். எப்பேற்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து இருந்தாலும்.....

கொஞ்சம் யோசித்துத்தான் இருக்கலாம்போல, கொஞ்சம் தவறிவிட்டது. பெரிய ரிஸ்க் எடுத்துவிட்டோம். என்று தன் சுதந்திரத்தை இழந்துவிட்டதாக எப்பொழுதாவது எண்ணத் தோன்றும்.
பலர் தங்கள் நிலையை வெளியில் சொல்ல முடியவில்லையென்றாலும் இப்படித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வாழ்க்கையாக அடைந்த பொருளுக்கும், அதற்காக இழந்த பொருளுக்கும் இடையே மிகப் பெரிய இடைவெளியாக இருக்கிறது.

ஐந்து ரூபாய் மதிப்புள்ள ஒரு பொருளைக் கொடுத்து, ஐம்பது பைசா மதிப்புள்ள பொருளை வாங்கி இருக்கிறோமா? என்று திடிரென்று உதித்த உதயம் மாதிரி சிலருக்குத் தேன்றும். இப்படி ஒரு குழு இருக்கிறார்கள். இன்னொரு குழு. பிரம்மச்சரியம் விரதம் எடுத்துவிட்டு அதனோடு போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் போராடிக்கொண்டிருக்கின்ற கூத்தை பார்த்தீர்களென்றால், அவர்களுக்கு அக்கரைப் பச்சை மாதிரித் தெரியும்.
இக்கரைக்கு அக்கரை பச்சையாகவே தெரியும்.

பிரமச்சரியம் எடுத்துவிட்டு இக்கரைக்கு அக்கரை பச்சை என்று குழம்புபவர்களும் இருக்கிறார்கள். சம்ஸார வாழ்க்கையை வாழ்ந்து விட்டு அதேபோல் குழம்புபவர்களும் இருக்கிறார்கள்.
இதில் யார் தவறு செய்கிறார்கள்? இது பெரிய குழப்பமாகவே இருக்கிறதே?
இதில் எது சரி என்று எப்படி தெரிந்து கொள்வது? என்ற சந்தேகம் பலருக்கும் உண்டு.

என்ன முடிவு எடுப்பது? எப்படி முடிவு எடுப்பது? என்று சந்தேகத்திற்கு எளிமையான தீர்வு இது.
உட்கார்ந்து உங்களுக்குள்ளே, நீங்களே பாருங்கள். தீர்வு பிறக்கும்.

நீங்கள் எடுத்து வந்த பிராரப்தம, உங்கள் தனி உணர்வை விடப் பலமானதாக இருந்தால். பிராரப்தம் கழியட்டும் என்று விட்டுவிடுவதுதான் நல்லது.

ஆனால் உங்களின் தனி உணர்வு, உங்கள் பிராரப்தத்தை விட பலம் வாய்ந்ததாக ஆகிவிடுமானால், அப்போது கவலையே பட வேண்டாம். தைரியமாக பிரம்மச்சரிய வாழ்க்கைக்குள்ளே நுளையலாம். *(தொடர்ச்சி அடுத்த வாரம்)*

# 36ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர். சத்தியமூர்த்தி சத்தியசீலன்

(ஐயனார் கோவிலடி – சுருவில்)

(கொழும்பு ஸ்ரீ திருப்பதி ஏஜன்சி)

திதி: 26-04-2021

இன்றிலிருந்து முப்பத்தாறு வருடங்களுக்கு முன்னால் ஒரு சித்திரா பௌர்ணமி நாளில்
உன் இதயத்தை துளைத்துச் சென்ற அந்த சிங்களச் சிப்பாயின் சன்னங்கள்
இன்னும் இன்னும் எத்தனையோ ஆயிரம் உயிர்களை குடித்துக் கொண்டே இருக்கின்றன
ஆமாம் சகோதரனே, வற்றாத நிலாவரை ஊற்றைப் போல நம் அயல் நாட்டு அரசுகள்
ஆயுதங்களை அள்ளி அள்ளி இறைப்பதால் சிங்களச் சிப்பாயிகளின் துப்பாக்கிகள்
இன்னும் சீறிக்கொண்டு இருக்கின்றன
இத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் உன் சிதைத்த நெஞ்சிலிருந்து
சிந்திய குருதியின் கோரமும் முனகியபடி அடங்கிய உன் குரலும்
இன்னும் எங்களுக்கு கேட்டும் ஒலியாக சேர்ந்தே வருகின்றன...

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

மலர்வு: 25-12-1957

உதிர்வு: 05-05-1985

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 09-02-1952

இறப்பு: 27-04-2020

## திரு. செல்லத்துரை குகதாஸ்

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும். கொழும்பில் வசித்துவந்தவருமான
செல்லத்துரை குகதாஸ் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாஞ்சலி
திதி: 16-04-2021

ஆண்டு ஒன்று ஆகி விட்டது அப்பா
எங்கு சென்றாலும் தொடரும் நிலவாய்
எங்களை எப்போதும் பின் தொடர்ந்து வரும்
உங்கள் நினைவுகள்...

சொல்லாமல் பிரிந்ததே திரும்ப முடியாத பாதையில்..
மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீர்கள்
கொரனா என்றொரு கொடியவனால்
நாம் திக்கித்திக்காய் திணறுகின்றோம்
திகப்புற்றிருக்கும் எம் எண்ண நினைவுகளுடன்
உதிரும் பூக்களாய் உங்கள் ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள், மைத்துன,
மைத்துனிமார், உற்றார், உறவினர்

தகவல்: குடும்பத்தினர்

குகதாஸ் சத்தியதாசன் (மகன்): 011 2347159 (கொழும்பு)
துஷி – கோபி (மகள், கனடா): (647) 618-2085









25 வது வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்






உதயம் 1308 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 30, 2021

# Canada reached an agreement with Pfizer for 65 million booster shots for next two years if the effectiveness of COVID-19 vaccines fades with time

# அடுத்த இரண்டு வருடங்களுக்கு 65 மில்லியன் பைசர் தடுப்பூசிகளைப் பெறுவதற்கான ஒப்பந்தத்தை கனடா பைசர் நிறுவனத்துடன் செய்துள்ளது



கோவிட்-19 தடுப்பூசிகளின் செயல்திறன் காலப்போக்கில் குறைந்து வலுப்படுத்தப்பட வேண்டியிருந்தால், அடுத்த ஆண்டு 35 மில்லியன் தடுப்பூசிகளும் 2023 ஆம் ஆண்டில் 30 மில்லியன் தடுப்பூசிகளும் கனடா கொள்வனவு செய்வதற்குரிய ஒப்பந்தத்தில் ஃபைசர் நிறுவனத்துடன் கையெழுத்திட்டுள்ளது என்று கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறினார்.

65 மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசிகள் எதிர்காலத்தில் இன்னும் தேவைப்பட்டால் அதைத் தருவதற்கு பைசர் நிறுவனமான அவர்களுக்கு விருப்பங்கள் உள்ளன என்றும் தெரிவித்த கனடியப் பிரதமர் இந்த இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் தொடர்பான திட்டங்கள் குறித்து அரசாங்கம் மற்ற தடுப்பூசி உற்பத்தியாளர்களுடனும் பேசி வருகிறது என்றும் தெரிவித்தார்.



## உழைக்கும் குடும்பங்களுக்கு முன்னுரிமை அளித்து என்றும் உறுதுணையாக இருப்போம் என்கிறது ஒன்ராறியோ அரசு



ஒன்ராறியோ அரசாங்கம் உழைக்கும் குடும்பங்களுக்கு முன்னுரிமை அளித்து அவர்களுக்கு என்றும் உறுதுணையாக இருக்கும். அத்துடன் ஒன்ராறியோ அரசானது இத்தொற்றுநோய் பரவத் தொடங்கிய காலத்திலிருந்தே தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக பரிந்துபேசி வருகிறது. அதனாலேயே ஒன்ராறியோ அரசாங்கம் ஒன்ராறியோ கே-ாவிட்-19 தொழிலாளர் வருமான பாதுகாப்புத் திட்டத்தினை அறிமுகப்படுத்துகிறது.இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால், கோவிட்-19 நோய்த்தொற்றுக் காரணமாக வேலையை இழப்பவர்களுக்கு 3 சுகயீன நாட்கள் விடுமுறையை வழங்கும் ஒரேயொரு மாநிலமாக ஒன்ராறியோ விளங்கும்.

மேலும், கனடாவிலேயே போதிய அளவிலான தொற்றுநோய் விடுப்பு காலத்துக்கான ஊதியத்தினை தொழிலாளர்கள் பெற்றுக்கொள்வதை உறுதி செய்வதற்காக மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் நோயிலிருந்து மீளும் காலத்துக்கான நிதியில் **(CRSB)** ஏற்படும் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கு எமது அரசாங்கத்தின் இந்நடவடிக்கை வழிசமைக்கிறது.

இக்காலகட்டத்தில் ஒன்ராறியோவில் வசிப்போருக்கு உதவும் பொருட்டு மத்திய அரசு வழங்கும் நிதியுடன் சேர்த்து இரு மடங்கு நிதியினை சுகவீன ஊதிய நாட்களுக்கு நாம் வழங்க முன்வந்துள்ளோம். அதாவது, ஒருவர் மத்திய அரசினால் வழங்கப்படும் கூ500 டொலர்களுடன் இரு மடங்கு நிதியாக வாரத்துக்கு மொத்தம் கூ1000 டொலர்களையும், தேவைப்படின் 4 வாரங்களுக்கு கூ4000 டொலர்களையும் பெற்றுக்கொள்ளலாம். மத்திய அரசு எமது இத்திட்டத்தினை ஏற்கும் பொருட்டு, இது உடன் மக்கள் பாவனைக்கு கொண்டுவரப்படும்.மத்திய அரசும் அவ்வாறு செய்வதற்கான விருப்பத்துக்கு பச்சைக்கொடி காட்டியுள்ளது. அத்துடன் ஊசுளுடீ திட்டம் புதுப்பிக்கப்பட்டவுடன், தகுதியுடையவர்களுக்கு இதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும். கோவிட்-19 நோய்ப்பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எமது மாநில அரசாங்கம் செய்துவரும் அதேவேளையில், மக்களுக்கு போதியளவ-ில் தடுப்பூசிகளை வழங்குதல், நாட்டின் எல்லைக் கட்டுப்பாடுகளில் உள்ள ஓட்டைகளை அடைத்து புதிய தொற்றுக்கிருமிகள் உள்நுழையாது தடுத்தல் போன்றவை மத்திய அரசின் முக்கிய கடமையாகும்.

மேலும் விவரங்களுக்கு **www.ontario.ca/COVIDworkerbenefit** எனும் இணைய தளத்தைப் பார்வையிடவும், அல்லது 1-888-999-2248 எனும் எண்ணுக்கு அழைக்கவும்.

## Canada NDP Leader Jagmeet Singh to tour Ontario's Peel Region virtually today

## என்டிபி தலைவர் ஜக்மீட் சிங் இணையவழி ஊடாக பீல் பிராந்தியத்தில் கலந்துரையாடல்களில் கலந்து கொள்கின்றார்



கனடா என்டிபி கட்சியின் தலைவரும் மத்திய பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவருமான ஜக்மீட் சிங் அவர்கள் இன்று வெள்ளிக்கிழமை இணையவழி ஊடாக ஒன்றாரியோவின் பீல் பிராந்தியத்தில் பல முக்கிய கலந்துரையாடல்களில் இணையவழிஊட-ாக கலந்து கொள்கின்றார்

இன்று வெள்ளிக்கிழமை காலை 9. 00 மணிக்கு துயபஅநநவ ளுைபொ அவர்கள் பீல் பிராந்திய தலை-மை சுகாதார அதிகாரி **Dr. Lawrence Loh** அவர்களோடு பிராந்தியத்தின் கோவ-ிட்-19 தொடர்பாக உரையாடவுள்ளார். அதற்கு ஊடகங்கள் அனுமதிக்கப்படமாட்டா

பின்னர் காலை 10.45 இற்கு "தொழிலாளர்களுக்காக போராடுதல் என்ற தலல்பபில், ஊடகங்களின் பிரசன்னத்தோடு இணையவழி ஊடாக உரையாடவுள்ளார்

பின்னர் காலை 11.30 மணிக்கு பீல் பிராந்தியத்தில் உள்ள தொழிலாளர்களோடு உரையாடுவார். இதற்கு ஊடகங்களுக்கு அனுமதியில்லை.

ஊடகங்கள் அனுமதிகப்பெற்ற சந்திப்புக்களுக்கு பின்வரும் இணைய வழி இணைப்பிலக்கங்களைப் பயன்படுத்தவும்.

**Meeting ID: 830 7018 2000**

**Passcode: 085703**

மேலதிக விபரங்களுக்கு என்டிபி கட்சியின் தலைமை அலுவலக ஊடகப்பிரிவினரோடு : 613-222-2351 **or media@ndp.ca** ஆகியவற்றில் தொடர்பு கொள்ளலாம்.

## இரசாயன உரங்கள் போன்றவற்றிற்கு பெரும் செலவு செய்த போதிலும், நாட்டின் விவசாய உற்பத்தியில் அதீத அதிகரிப்பு ஏற்படவில்லை என்கிறார் கோட்டாபாய



இரசாயன உர இறக்குமதிக்காக இலங்கை 2019 இல் 221 மில்லியன் டொலர்களை செலவிட்டது. எண்ணெய் விலை அதிகரிப்புடன், அந்த செலவு 300-400 மில்லியன் டொலர் வரை அதிகரிக்கும். இரசாயன உரங்கள், களைக்கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் ஆகியவற்றிற்கு பெரும் செலவு செய்த போதிலும், விவசாய உற்பத்தியில் தரமான அதிகரிப்பு எதுவும் ஏற்படவில்லை என்று இங்கையின் கோட்டாபாய ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இலங்கையில்இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகள் பயன்பாடு மற்றும் இறக்குமதி மீதான தடை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நேற்று வியாழக்கிழமை காலை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே கோட்டாபாய இதனை தெரிவித்தார். பல திணைக்களங்களின் தலைவர்கள் அதிகாரி போன்றவர்கள் அழைக்கப்பட்டிருந்த மேற்படி கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

"ஏற்கெனவே எம்மால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் இருந்து பின்வாங்காமல் இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதை முழுமையாக நீக்கிய உலகின் முதல் நாடாக இலங்கையை மாற்றும் சவாலை நான் ஏற்றுக்கொள்கின்றேன்" என்று கூறிய அவர் இரசாயன உரங்களின் பயன்பாட்டிலிருந்து நீங்கிய எந்த நாடும் உலகில் இல்லாதிருப்பது இலக்கை அடைவதற்கு ஒரு தடையல்ல. பே-சிப் பேசி இருக்காது விவசாயிகளுக்கு அறிவூட்டி ஆரோக்கியமான தலைமுறையை உருவாக்குவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து "இரசாயன உரங்களின் பயன்பாட்டை முற்றிலுமாக நீக்கிய உலகின் முதல் நாடாக இலங்கையை மாற்றுவேன்-" என்று கூறிய கோட்டாபாய "ஆரோக்கியமான மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த குடிமகனை உருவாக்க நச்சு அல்லாத உணவுக்கான மக்களின் உரிமையை அரசாங்கம் உத்தரவாதம் செய்ய வேண்டும். அடுத்த பத்தாண்டுகளில் இலங்கையில் விவசாயத்திற்கு முழுமையாக சேதன உரங்களைப் பயன்படுத்த அந்த உற்பத்தியை துரிதப்படுத்த வேண்டும். " என "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை பிரகடனத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. அதனை யதார்த்தமாக்குவதற்கு அடித்தளமிடும் வகையில் காலநிலை மாற்றத்திற்கான நிலையான தீர்வுகளுடன் பசுமை சமூக-பொருளாதார மாதிரி-யை உருவாக்கும் நோக்கில் 20 அம்ச அமைச்சரவை விஞ்ஞாபனம் அண்மையில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது." என்றும் கோட்டாபாய தெரிவித்தார்.